க. 379

இக்பால்

கவி அமுதம்

R.P.M கனி, பீ.ஏ.,பீ.எல்.,

வளர்பிறை பதிப்பகம், காரைக்கால்.

332

இக்பால்

கவி அமுதம்

3634

PRESEN...
V. PR. PL. ... THAN
THIRUV... ...KANERI.

14.9.78 3634

பாகனேரி

R. P. M. கனி, பி.ஏ., பி.எல்.,
எழுதியது.

முதல் பதிப்பு 1947
உரிமை ஆசிரியருடையது.
விலை ரூ. 1—8—0

ஆசிரியர் எழுதிய மற்ற நூல்கள் :

அல்லாமா இக்பால்
இக்பாலும் பாகிஸ்தானும்
பாகிஸ்தான்
அறிஞர் செய்யித்
அல்லாமா ஷிப்லி
(அச்சிலிருப்பவை)
பூந்துறை
சிறுமை மனப்பான்மை
அமரகவி காலிப்

கிடைக்குமிடம் :
வளர்பிறை பதிப்பகம்
காரைக்கால். (F. I.)

3634

சமர்ப்பணம் :

எனது அருமைத் தந்தையாருக்கு

உள்ளடக்கம்

			பக்கம்
(i)	சமர்ப்பணம்		3
(ii)	முன்னுரை		5
1.	வாழ்க்கை	...	7
2.	பெண்கள்	...	22
3.	கலை	...	30
4.	இறைவன் கட்டளை	...	35
5.	அன்பும் அறிவும்	...	41
6.	இயற்கையின் வெற்றி	...	48
7.	வாழ்க்கை வழி	...	55
8.	அழகு	...	60
9,	கீதமும் போதையும்	...	63
10.	மலர்கள்	...	68
11.	ஓடைபோதிக்கும் பாடம்	...	76
12.	ஜாவீது நாமா	...	80

முன்னுரை

மகாகவி இக்பாலை தமிழகத்தாருக்கு நல்ல முறையில் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தால் 'அல்லாமா இக்பால்' என்ற நூலை எழுதினேன். அதில் கவிஞரின் வாழ்க்கையை அவருடைய கவிதை மேற்கோள் களோடு தீட்டினேன். அவருடைய கவிதைகளிலுள்ள பலவகை நயங்களையும் எடுத்துக்காட்ட முயன்றேன். அந் நூல் தமிழுக்குப் புதிய இலக்கியம் என்ற முறையில் தமிழ்நாட்டு, ஈழநாட்டு இலக்கியப் பத்திரிகைகள் அதைப் போற்றி எழுதின. அறிஞர்கள் அனேகர் அதைப் பாராட் டினர். இத்தகைய பாராட்டுதல்களெல்லாம் எனக்கு ஊக்கங் கொடுக்கச் சொன்னவை என்ற அளவில் அவற்றை ஏற்றுகொண்டேன்.

இந்தப் புஸ்தகமான 'இக்பால் கவி அமுதம்' வெளியாவ தற்கு அப்பாராட்டுதல்கள் முக்கிய காரணம் எனலாம். என்னிடமுள்ள குறைகள் என்ன என்பதை நான் அறி வேன். எனினும் உர்தூ மகாகவி இக்பாலின் கவிதைப் போக்கு எப்படி இருக்கிறது என்பதையாவது தமிழகத் தாருக்குக் காட்டி விடவேண்டும் என்ற ஆர்வத்தால்தான் இக்பாலுடைய கவிதைகள் சிலவற்றை விளக்கிவைக்கும் முறையில் என் சொந்தப் பாணியில் சில கட்டுரைகள் எழுதினேன். கட்டுரை என்பது "திடீரென எழும் தளர்ந்த மன எழுச்சி" (A loose sally of the mind) என்பார்கள். ஆகவே என்னுடைய கட்டுரைகள் சிலவற்

றில் கருத்துத்தொடர்பு சரியாக இல்லையோ என்ற ஐயங் கூட எழலாம். ஆயினும் ஒவ்வொரு கட்டுரையிலும் இக் பால் கவிதையின் ஒரு புதிய அம்சத்தை எடுத்துக்காட்டி, இக்பால் பெருமையை விளக்க முயன்றிருப்பது தெரியும்.

இப்புத்தகத்திலுள்ள முதல் கட்டுரையான இக்பாலு டைய வாழ்க்கை வரலாறு கூடியவரை நான் எழுதிய 'அல்லாமா இக்பாலி'ல் இல்லாத பல புதுத் தகவல்கள் நிறைந்தது.

இக்கட்டுரைகளுக்குப் புதிய இலக்கியம் விரும்பும் தமிழன்பர்களின் நல்லாதரவு கிடைக்கும் என்பதற்கு அறிகுறிகளுண்டு. இதிலுள்ள 'இறைவன் கட்டளை' என்ற கட்டுரை ஏற்கனவே 'கதிர்' என்ற பத்திரிகையில் வெளியாயிற்று. அதை சிறு திருத்தங்களோடு என் பெயர் இன்றி சில பத்திரிகைளும் பிறரும் பயன்படுத்திக் கொண்டார்கள். இதிலுள்ள கட்டுரைகளை யாரும் அவ் விதம் திரித்து அதன் அழகை (அழகு இருந்தால் அதைக்) கெடுக்க முன்வரமாட்டார்கள் என்றே நினைக்கிறேன்.

இக்பாலுடைய கவிநயம் தமிழ்மொழி பேசும் உல கெங்குப் பரவவேண்டும் என்ற என் உளமார்ந்த ஆவ லோடு இதை வெளியிடுகிறேன்.

ர. பா. மு. கனி,

3634



மகாகவி இக்பால்

வாழ்க்கை

இன்றைய நூலிலிருந்து
நேற்றை பற்றிய பாடத்தைக்
கற்று கொள்!
இக்பாலின் மதுக் குடத்திலிருந்து
ஒரு கோப்பை எடுத்து அருந்து!
ஐரோப்பிய சமுதாயத்தில்
அவர் குரல்
எதிரொலி எழுப்பி யுள்ளது.
அமெரிக்கர் அறிவுத்திறன்
அவர் கூற்றின் உண்மையை
ஒப்புக் கொள்கிறது.

—மௌலானா குலாம் காதிர் கிரமி.

"நான் ஆரம்பகால முஸ்லிம்கள் சென்ற வழியைப் பின்பற்றுபவன். எனக்கு 'தக்லீதி'ல் நம்பிக்கை இல்லை. நான் அனுஷ்டானத்தில் இமாமே அஃஜம் அபூஹனீபா வைப் பின்பற்றுபவன். இஸ்லாத்தைப் பற்றிய என் சொந்தப் பரிசோதனைகளுக்குப் பின்னரே இதை நான் ஏற்றேன். முஸ்லிம் என்ற பெயருக்கு முற்றும் தகுதி யுள்ள ஒருவரை நீங்கள் காண நேர்ந்தால் அவருடைய வழியைப் பின்பற்றுங்கள்.

அத்தகைய அறிவாளனின்
நட்புக் கிட்டவில்லையானால்
என் மூதாதையர்களிடமிருந்து
நான்பெற்ற பெருமைகளை யெல்லாம்
என்னிட மிருந்து பறித்து விடுங்கள்"

இது ஒருவருடைய மரணச் சாசனம் (Will) என்ருலே வியப்பாக இருக்கும். அதிலும் இது மகாகவி இக்பாலுடைய மரணசாசனம் என்ருல், உண்மை யறியாதோர் அதிக ஆச்சரியப்படுவர். மகாகவி இக்பால் வெறுங் கவிஞராக மட்டுமின்றி உண்மையான முஸ்லிமாக, தத்துவ ஞானங்களைக் கற்று தெளிந்தவராக இருப்பதனுல் தான் இத்தகைய மரண சாசனத்தை எழுதினுர்.

இக்பாலுடைய தந்தை ஷேக் நூர்முஹம்மது தனது புத்திரர் பிறப்பதற்கு முதல் நாள் ஒரு கனவு கண்டார். அழகிய வெண்புருவொன்று வானத்தில் வட்டமிடுகிறது. பின்னர் அவருடைய மடியில் வந்தமர்கிறது. இக்கனவு கண்ட மறுநாள் (22-2-1873ல்) இக்பால் தோன்றினுர். தான் கண்ட கனவு காரணமாக இத்தனையன் புகழுடைவான் என்றெண்ணிய நூர்முஹம்மது இவருக்கு முஹம்மது இக்பால் என்று பேர் சூடினுர்.

இக்பாலுக்கு அதா முஹம்மது என்ற அண்ணன் ஒருவரும் நான்கு சகோதரிகளும் உண்டு.

இவர் சிறுவயதிலேயே மதக் கல்வியை ஆர்வத்தோடு கற்ருர். காஷ்மீரப் பிராமணர் பரம்பரையைச் சேர்ந்த தான் இவ்விதம் கல்வி கற்றது குறித்து இக்பால் கூறுவதாவது ;—

> மீரும் மீர்ஸாவும்
> தம் உள்ளத்தையும் சமயத்தையும்
> அரசியலில் மூழ்கடித்து விட்டனர்.
> இந்தப் பிராமணச் சிறுவன் (இக்பால்) மட்டுமே
> மர்மங்களை
> உணர்ந்தவனுக இருக்கிருன்.

கல்வியைக் கருத்தூன்றி படித்த இக்பால் அரசாங்கத்தின் உபகாரச் சம்பளம் பெறுபவரானுர். பன்

னிரண்டே வயது நிரம்பிய இக்பால் ஒருநாள் பள்ளிக் கூடத்திற்குக் காலதாமதமாக வந்தார்.

'இக்பால்' ஏன் காலதாமதம்?' என்று வினவினார் ஆசிரியர். 'இக்பால் எப்போதுமே காலந் தாமதித்துத் தான் வரும்' என்று பதில் சொன்னார் இக்பால். 'இக்பால்' என்ற வார்த்தையின் பொருள் 'புகழ்' என்பதை அறிந் தால் இக்கூற்றின் நயத்தை உணர முடியும்.

இக்பாலின் ஆசிரியராக இருந்தவர் பெயர் மீர் ஹஸன். அவர் தம் மாணவரிடம் மிகுந்த பற்றுதலோடு நடந்தார். இக்பாலுக்கு அரிய தத்துவங்களை விளக்கி வைத்தார். இதை இக்பால் 'இல்திஜாயே முஸாஃபிர்' என்ற தம் பாட்டில் இவ்விதம் வெளியிடுகிறார்:

அவருடைய சுவாசம்
என் ஆசை மொக்கை
மலரச் செய்தது,
அவருடைய தாராளத்தன்மை
என்னை அறிவாளியாக்கிற்று.

தனது பிறப்பிடமான சியால்கோட்டில் எப்.ஏ., படிப்பை முடித்த இக்பால், பி.ஏ., படிப்புக்காக லாகூர் வந்தார். இங்கே சிறந்த அறிஞரான T. W. ஆர்னல்ட் அவருக்கு ஆசிரியராக அமைந்தார். இவரிடம் இக்பால் நெருங்கிய அன்புடையவரானார். ஆர்னல்ட் இறந்த பின்னரும் இக்பாலுடைய பற்றுதல் குறையவில்லை. 'நாலாயே பிராக்' என்ற பாட்டில் ஆர்னல்டோடு தான் நட்புக்கொண்டிருந்ததையும் அவர் மறைவையும் குறித் துப் பாடினார்.

என் இதய ஒளி
சூரியனோடு
தொடர்பு கொள்ள இருந்தது;
உடைந்த கண்ணாடி

உலகைப் பிரதி பலிப்பதாக
ஆகவிருந்தது
என் ஆசைச் செடி
உயிர் பெற்றெழ இருந்தது.
அந்தோ
நான் என்னவாக விருந்தேன்
என்பதை யாரும் அறியார் !
கருணை மேகம்
தன்மேலாக்கை இழுத்துக் கொண்டு
மறைந்தது.
அது என் ஆசை மொக்கில்
சிறிதே தூற்றிவிட்டு
மறைந்தது

என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

இக்பால் லாகூரில் படித்துக்கொண் டிருந்தபோது அங்கே நடக்கும் 'முஷாயிராக்கள்' (பாட்டிசைக்கும் அரங்குக்கள்) பலவற்றிலும் கலந்துகொண்டு பேரும் புகழும் பெற்ருர். இவ்வரங்குகளில் அவர் பாடிய பாடல்கள் இன்றும் கொண்டாடப்படுகின்றன.

எம்.ஏ., பரீக்ஷையில் தேறிய இக்பால் லாகூர் ஓரியண்டல் கல்லூரியில் சரித்திரமும் தத்துவமும் போதிக்கும் ஆசிரியரானுர். பின்னர் அவர் லாகூர் அரசாங்கக் கல்லூரியில் வேலைபார்த்தார். இச்சமயம் பொருளாதாரத்தைப்பற்றி அவர் ஒரு நூல் எழுதினுர். அதன் பெயர் 'இல்முல் இக்திஸாத்' என்பது.

இப்போதே இக்பால் பஞ்சாப் முழுமையும் ஒரு கவிஞர் எனப் பெயர் பெற்றுவிட்டார். அறிஞர் அல்லாமா ஷிப்லிகூட அப்போது இக்பாலுக்கு இது குறித்து இவ்விதம் எழுதினுர்: 'ஆஸாத், ஹாலி ஆகியோர்

இருக்கைகள் காலியாக இருக்கும்போது மக்கள் இக்பாலை தேடுவார்கள்'

இக்பால் லாகூரில் தங்கியிருந்தபோது ஒரு பயங்கரப் பூமி யதிர்ச்சி ஏற்பட்டது. எங்கும் ஓரே பரபரப்பு. இக்பாலுடைய விஸ்வாஸமான வேலைக்காரன் அலிபக்ஷ் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தான். ஆனால் இக்பால் இது எதையுமே பொருட்படுத்தாமல் அமைதியாகப் படுக்கையில் படுத்திருந்தார். அலிபக்ஷ் படுகிற அவதியைக் கண்டு, அவனை அழைத்து மாடிப்படியில் சுவரைப் பிடித்தவாறு நிற்கும்படி உத்திரவிட்டார். மீண்டும் படுத்தபடியே அவர் ஒரு புஸ்தகத்தைப் புரட்டிப் படிக்கலானார்.

1905ம் வருஷம் செப்டம்பர் மாதம் இக்பால் மேல்-படிப்புக்காக ஐரோப்பா பயணமானார். வழியில் டெல்லியிலுள்ள ஹஸரத் மஹ்பூப் இலாஹி நிஜாமுத்தீன் ஔலியாவின் அடக்க ஸ்தலத்தில் அவர் 'ஸியாரத்' செய்தார். அப்போது அவர் பாடினார்:

நாட்டின் சித்திரக்காட்சியிலிருந்து
அறிவு மதுவின் மணம்
என்னைப் பலவந்தமாக
அப்பால் இழுத்துச் செல்கிறது

என்று.

லண்டனிலிருந்த 'இஸ்லாமியச் சங்க'த்தில் இக்பால் பெரிதும் பங்கெடுத்துக்கொண்டார். கேக்ஸ்டன் ஹாலில் 'இஸ்லாத்தின் சில அம்சங்கள்' என்பது பற்றி அவர் ஆற்றிய சொற்பொழிவு ஆங்கிலேயர்கள் மனதைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. லண்டனிலுள்ள 'டைம்ஸ்', 'டெயிலி டெலகிராப்', 'ஸ்டாண்டர்ட்', 'மார்னிங் போஸ்ட்', 'பால்மால் கெஜட்', 'டெயிலி மெயில்' ஆகிய பிரபல பத்திரிகைகளில் இச்சொற்பொழிவு முழுமையும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் அவர் இதே

விஷயங்குறித்து ஐந்து சொற்பொழிவுகள் நிகழ்த்திஞர்.

இக்பால் லண்டனிலிருந்து கேம்பிரிட்ஜ் சென்று அங்குள்ள டிரினிடி கல்லூரியில் மாணவராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார். அங்கே மூன்று ஆண்டுகள் தங்கிஞர். பி.எச்.டி. பட்டம் பெற்ருர். பின்னர் ஜெர்மனி சென்ருர்.

'பாரசீகத்தில் தத்துவ சாஸ்திரவளர்ச்சி' என்பது குறித்துத் தாம் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையை மூனிச் சர்வகலா சாலேயில் சமர்ப்பித்தார். இதற்காக இச்சர்வகலாசாலே அவருக்கு டாக்டர் பட்டம் அளித்தது. இக்கட்டுரை 'பல்ஸபாயே அஜம்' என்ற பெயரோடு உர்தூவில் மொழி பெயக்கப்பட்டுள்ளது. பின்னர் அவர் லண்டன் வந்து படித்துப் பாரிஸ்டர் பட்டம் பெற்ருர். இங்கே அவர் டாக்டர். மேக்டகார்ட், ஸாரல், நிக்கல்ஸன் போன்ற அறிஞர்களோடு நெருங்கிப் பழகிஞர்.

லண்டன் சர்வகலாசாலேயில் இக்பால் மூன்று மாத காலம் அரபிப் பேராசிரியராக வேலே பார்த்தார். அவருக்கு ஏற்கனவே பஞ்சாபி, உர்தூ, பாரசீகம், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் நன்கு தெரியும். அவருடைய ஐரோப்பியப் பிரயாணத்தில் அவர் ஜெர்மன், லத்தீன் பாஷைகளேயுங் கற்றுகொண்டார்.

1908ம் வருஷம் ஜுலே மாதம் 27ந்தேதி இக்பால் லாகூர் வந்தார். இதற்குள் அவருடைய நோக்கில் எத்தனையோ மாறுதல்கள். அவருடைய உள்ளத்தில் மேற்கும் கிழக்கும் சந்தித்தன. அவர் மனப் பக்குவம் பெற்றுவிட்டார். இதன் பின்னர் அவர் பெரும்பாலும் பாரஸீக மொழியிலும் கவிதைகள் எழுதிலாஞர். அவற்றில் 'அஸ் ர்ாரே குதி'யும், 'ரமூஸி பேகுதீ'யும் முக்கியமானவை; பிரபலம் பெற்றவை.

இக்காலையில் அவர் இளைஞர்களை நோக்கிச் 'செயலாற்றுங்கள், செயலாற்றுங்கள், தூங்கிக் கிடக்க வேண்டாம்' என்ற வேண்டுகோளை விடுத்துக்கொண்டே இருந்தார்.

' செயலற்றிருப்பதே வாழ்க்கை இரகசியம்'
என்று மலையிலிருந் தொரு குரல் எழுந்தது.
சிற்றெறும்பு சொல்லிற்று :
' சுறு சுறுப்பின் இன்பமே தனி ' என்று.
மது இன்னும் நன்கு பக்குவமாகவில்லை;
ஆசை இன்னும் முதிரவில்லை;
மதுக் குடத்தை மதம் என்ற மூடியால்
இன்னும் நன்கு மூடிவைப்போம்.

என்று இச்சமயத்தில்தான் பாடினார். மேலும் புதுப் புதுக் கருத்துக்கள் வெளியாகவேண்டும், புது வழிகள் காணவேண்டும் என்ற தம் ஆர்வத்தையும் அவர் பல பாடல்களில் வெளியிட்டார்:

எழுங்கள் ?
கிழக்கு அடிவானில்
இருள் கப்பிக் கொண்டுள்ளது.
நம் கர்ஜனையால்
தூங்கும் கூட்டத்தைத்
தட்டி எழுப்புவோம்.
சீனக் கோபுரத்திலிருந்து
ஆத்மத் தேவைகளோடு புறப்படுவோம்.
சௌதா, சுலைஹாவின் வதனங்களில்
யாவரும் பிரேமை கொள்ளச் செய்வோம்.
பாருங்கள்
யத்ரபில் லைலாவின் ஒட்டகம்
கிழடாகி விட்டது.
கையின் உள்ளத்தில்
புது ஆசைகளைத் தூண்டுவோம்.

இக்பால் லாகூர் திரும்பிய பின்னர் தம்மை ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். இத் தொழிலில் அவர் கண்ணியமான முறையில் நடந்துவந்தார். ஒரு தடவை பாட்ணு ஹைகோர்ட்டில் நடைபெற்ற பிரஸித்தி பெற்ற 'தாம்ராவ் ராஜ்' வழக்கு சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட வார்த்தைக்கு விளக்கங் கூறுமாறு அப்போது பிரபல வழக்கறிஞராக விளங்கிய திரு. ஸி. ஆர். தாஸ், இக்பாலை அழைத்தார். இக்பாலும் பாட்ணு சென்ருர். இதற்கு அவருக்கு நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம். அவருடைய குமஸ்தாவுக்குத் தினசரி நூறு ரூபாய் சம்பளம். இக்பாலுடைய பக்கத்தில் டாக்டர். அப்துல்லா சுஹ்றவர்தியும், ஸி. ஆர். தாஸும் இருந்தனர். எதிர்கட்சிக்குப் பண்டித மோதிலால் நேரு ஆஜராகி இருந்தார். இக்பால் பிரஸ்தாப வார்த்தைக்கு என்ன விளக்கம் தரவேண்டும் என்பதை யோசித்து முடிவுகட்டி விட்டார். ஆகவே மறு நாளே தான் பேசத் தயாராக இருப்பதாகக் கூறினர். திரு. தாஸ், இவர் வழக்கு முடியும் வரை அங்கே தங்க வேண்டுமென்றும், இது அரசாங்க வழக்கானதால் இக்பாலுக்குத் தினமும் ஆயிரம் ரூபாய் படி கிடைக்குமென்றும் கூறினர். ஆனல் இக்பால் பணத்திற்கு ஆசைப்படவில்லை. வந்த மறு நாளே தன் வேலையை முடித்து விட்டு லாகூர் திரும்பினர்.

இச்சமயம்தான் அவருடைய மனப் பக்குவத்தை நன்கு காட்டும் பல கவிதைகள் வெளியாயின 'ஏ இறைவனே, முஸ்லிம்களின் உள்ளத்தில் அவிந்து கிடக்கும் உணர்ச்சியை மீண்டும் உயிர் பெறச் செய்; அவர்கள் கைசேதத்தை மாற்று; அவர்களுக்குப் புதுஆசைகளையும், சுறுசுறுப்பான வாழ்வையும் தா!'' என்று கையேந்திப் பிரார்த்தித்தார்.

1910ம் ஆண்டில் பால்கன், திரிப்போலி யுத்தங்கள் நடைபெற்றன. இவற்ருல் முஸ்லிம்கள் பெருத்த நஷ்ட

மடைந்தனர். இதைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடித்த இக்பால், 'ஷஹீதுகளின் குருதிக் காணிக்கை' என்ற பாட்டை எழுதினார். 1911ம் வருஷம் அக்டோபர் 6ந்தேதி இப் பாட்டை அவர் லாகூரிலுள்ள ஷாஹி மஸ்ஜிதில் மிகுந்த உணர்ச்சியோடு பாடினார்.

நபி பெருமானாரின் சந்நிதியை அடைந்த கவிஞர், தான் ஒரு பாதகாணிக்கை கொண்டு வந்திருப்பதாகக் கூறுகிறார்: "ஐயனே, உலகில் அமைதியென்பதில்லை. தேடிய வாழ்வு கிட்டவில்லை......நம்பிக்கை மணம் வீசும் ஒரு மொக்குக்கூடத்தோட்டத்தில் இல்லை எனினும் நான் ஒரு காணிக்கை கொண்டுவந்துள்ளேன். அது சுவர்க்கத்தில் இல்லாதது. உங்கள் மக்களின் மானம் அதில் மின்னுகிறது. திரிப்போலியில் ஷஹீதானவர்களின் இரத்தம் அதில் துடிக்கிறது. அந்தக் காணிக்கைதான் என் கண்ணீர்த்துளி." இதுதான் அப்பாட்டின் கருத்து. இதன் பின்னர் 'தரனுயேமில்லி' 'ஷிக்வா', 'ஷாம் வ ஷைர்' 'ஜவாபேஷிக்வா' 'கிஸரே ராஹ்,' 'துலுயே இஸ்லாம்' ஆகிய பாடல்களை வெளியாக்கினார்.

இக்பாலின் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகத்தான் 1922ல் அரசாங்கம் அவருக்கு 'நைட்' ('ஸர்') பட்டம் அளித்தது.

இதே ஆண்டில் அவர் 'பயாமே மஷ்ரிக்' என்ற கவிதைத் தொகுதியை வெளியாக்கினார்.

1926ம் வருஷம் இக்பால் பஞ்சாப் சட்டசபை (கௌன்ஸில்) உறுப்பினரானார். மதசம்பந்தமான தீர்மானங்கள், மதுவிலக்கு, குற்றபரம்பரைச் சட்ட ஒழிப்பு, மருத்துவ வசதி ஆகியவற்றை ஆதரித்து இக்பால் இங்கு பேசிய பேச்சுகள் அற்புதமானவை. வரியை ஏன் குறைக்க வேண்டும், நிலம் எப்படி அரசாங்கத்தினரின் உடமை

யன்று என்பன குறித்து அவர் கூறிய கருத்துக்கள் பலருடைய சந்தேகங்களைத் தெளியவைத்தன.

1928ம் வருஷம் டிஸம்பர் மாதக் கடைசியில் இக்பால் சென்னைக்கு வந்தார். தென்னாட்டு அறிஞர் ஜனுப். ம. ஜ. ஜமால் முஹம்மதின் வேண்டுகோளுக்கிணங்கி சில சொற்பொழிவுகள் ஆற்றுவதற்காகவே அவர் இங்கு வந்தார். இஸ்லாத்தைப்பற்றி ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவற்றை புஸ்தகமாக வெளியிடும் உரிமை ஜனுப் ஜமால் முஹம்மது சாஹிபைச் சேர்ந்ததெனினும், 'ஆக்ஸ் போர்டு யுனிவர்ஸிடி பிரஸ்' காரர்கள் இவற்றை புஸ்தகமாக்கி வெளியிட்டனர்.

சென்னையிலிருந்தபோது அஞ்சுமனே தரக்கி உர்தூவும், தென்னிந்திய பிராமண அறிஞர்களும் இக்பாலுக்குத் தனித்தனியே வரவேற்புகள் அளித்தனர். இங்கிருந்து 9-1-1929ல் அவர் பங்களூர் சென்ருர். அங்கே மீர்ஸா இஸ்மாயீலின் தலைமையில் ஒரு கூட்டத்திலும், டாக்டர் சுப்பராயன் தலைமையில் ஒரு கூட்டத்திலும் பேசினுர். பின்னர் அவர் மைசூர் சென்ருர். மஹாராஜாவின் விருந்தாளியாக இருந்தார். அங்கே பேராசிரியர் வாடியாவின் தலைமையில் ஓர் அரிய சொற்பொழிவாற்றினுர். பார்ஸி வகுப்பினரான வாடியா தத்துவ சாஸ்திரப் போதகாசிரியர். அவர் தமது முடிவுரையில், இக்பாலுடைய சொற்பொழிவைப்பற்றி அபிப்பிராயந் தரவேண்டுமானுல் முதலில் அதை எழுதி மனப்பாடம் பண்ணவேண்டும், இல்லாவிட்டால் இயலாது என்று கூறினுர். கடைசியாக அவர் சொன்னதாவது; "டாக்டர் இக்பாலை முஸ்லிம்கள் தங்கள் சொந்தச் சொத்து என்று லக்ஷந்தடவை கொண்டாடட்டும். ஆனுல் அவர் நாம் யாவருக்கும் சொந்தமானவர். எந்த மதத்தவருக்கோ, வகுப்பினருக்கோ மட்டும் அவர் உரியவரல்ல.முஸ்லிம்கள் இக்பால் தம் சமயத்தவர் என்று

பெருமை கொண்டால், இக்பால் இந்தியர் என்ற முறையில் அவர்களை விட நாம் அதிகப் பெருமை யடைகிறோம்.''

மைசூரிலிருந்து ஸ்ரீரங்கபட்டணம் சென்று 1929 ஜனவரி 14ல் இக்பால் ஹைதராபாத் வந்தார். அங்கே நிஜாமுடைய விருந்தினராக இருந்தார். பின்னர் அலிகார் சென்று ஊர் திரும்பினார்.

1930ல் இக்பால் அகில இந்திய முஸ்லிம் லீகின் தலைவராகவும், முஸ்லிம் மகாநாட்டுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவற்றின் தலைவராக அவர் ஆற்றிய உரைகள் சரித்திரத்தில் இடம் பெற்று விட்டன.

1931ல் லண்டனில் நடந்த இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டுக்கு அவர் சென்றிருந்தார். திரும்பும் போது ஸ்பெயின், கார்தோவா, பாலஸ்தீனம் ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தார்.

1933ல் காபூல் அரசாங்கம் தன் சர்வ கலாசாலையின் கல்வி முறையைப்பற்றி ஆலோசனை கூறுமாறு மூவரை அங்கே அழைத்திருந்தது. அவர்கள் இக்பால், செய்யத் சுலைமான் நத்வி, ஸர். ராஸ் மாஃசூத் ஆகியோர்தான். காபூல் அரசரான நாதிர் ஷா இக்பாலின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவர். அவருக்கு இக்பால் திருக்குர்ஆனின் அழகிய வேலைப்பாட்டோடு கூடிய பிரதியொன்றை தந்தார். அப்போது, ''இத்திருமறையை, அல்லாவின் திருவாக்கியங்களடங்கிய இவ்வொப்புயர்வற்ற நூலை, ஒவ்வொருபக்கமும் பிரகிருதியின் இரகசியங்களடங்கிய இக்குர்ஆன் ஷரீஃபை உங்களுக்கு அன்பளிப்பாகத் தருகிறேன். இதுதான் என்னிடமுள்ள பெரிய சொத்து. நான் ஒரு பக்கீர்'' என்று இக்பால் கூறினார். வாங்கியவர், கொடுத்தவர் ஆகிய இருவருடைய கண்களிலும் இந்த உருக்கமான வார்த்தைகள் கண்ணீரைக் கொண்டுவந்து விட்டன. பத்துநாட்களுக்குபின் இக்பால் காபூலிலிருந்து

ஊர் திரும்பினூர். இதற்குச் சில நாட்களுக்குபின் அரசர் நாதிர்ஷா கொலை செய்யப்பட்டார்.

இதன்பின் 'ஸபூரே அஃஜம்' என்ற பாரஸீகக் கவிதைத் தொகுதியும், 'ஜாவீது நாமா' என்ற பாரகாவியமும், 'பாலே ஜிப்ரீல்,' 'ஸர்பே காலீம்' என்ற உர்தூகவிதைத் தொகுதிகளும், கடைசியாக 'அர்முகானே ஹிஜாஸ்' என்ற உர்தூ, பாரசீகக் கவிதைகள் சேர்ந்த தொகுதி ஒன்றும் வெளியாயின.

*1924*ல் இருந்தே இக்பாலுக்கு உடற்கோளாறுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. *1938*ம் வருஷ ஆரம்பத்தில் அவருடைய உடல்நிலை மிக மோசமானதாயிற்று.

இச்சமயத்தில் Inter-Collegiate Muslim Brotherhood என்ற சங்கம் இக்பாலை அவருடைய ஆயுட் காலத்திலேயே பாராட்டவேண்டிய அவசியத்தை யுணர்ந்து *1938*ம் வருஷம் ஜனவரி மாதம் *9*ந்தேதி 'இக்பால் தினம்' கொண்டாடிற்று. இதில் பிரபலஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர். இதுவே முதன் முதலில் கொண்டாடப்பட்ட 'இக்பால் தினம்' என்பது குறிப்பிடத்தக்கது.

இக்பாலுக்கு இளமையிலேயே (பஞ்சாப்) குஜராத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியை மணம் முடித்திருந்தார்கள். இம்மணத்தின் மூலம் அப்தாப் இக்பாலும், ஒரு பெண் குழந்தையும் அவருக்குண்டு.

*1916*ல் அவர் காஜா அப்துல் கனி என்பவருடைய சகோதரியை இரண்டாந்தாரமாக மணம் முடித்தார். இதன் மூலம் ஜாவீத் இக்பாலும் முனீரா பானுவும் பிறந்தனர். இக்பாலின் இரண்டாவது மனைவி *23-5-1935*ல் மரணமானூர். *1919*ல் இக்பால் மூன்ருந் தாரமாக, லூதியானவைச் சேர்ந்த டாக்டர் குலாம் முஹம்மதின் சகோதரியை மணம் முடித்தார். இந்த அம்மாள் *1924*ல் மரணமானூர்.

1938ம் வருஷம் ஏப்ரல் மாதம் 22ந்தேதி அதிகாலை யில் 5-15 மணிக்கு இக்பால் இவ்வுலக வாழ்வை நீத்து அமரரானார்.

குல்லுமன் அலைஹாஃபான் வ யப்கியா
வஜ்ஹுரப்பிக ஸவல் ஜலாலி வல்லிக்ராம்
சகல புகழும் பெருமையும் பொருந்திய
உங்கள் இறைவன் நாமம்
பாக்கிய முடையது. (திருக்குர்ஆன்)

அன்றிரவு பத்து மணிக்கு லாஹூர் ஸாஹி மஸ்ஜிதில் அந்த மூமீனுடைய பூத உடல் அடக்கஞ் செய்யப் பட்டது. அவருடைய 'ஜனஸா'த் தொழுகையில் கலந்து கொண்டவர்கள் மட்டும் எழுபதினாயிரத்துக்கு அதிக மிருக்கும். லாகூரிலிருந்த பிரமுகர்கள் யாவரும், அரசர்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

அல்லாமா இக்பால் உலகப் பெரியார்களுள் ஒருவர். உலகம் முழுதும் உய்யவேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டவர். அவருக்கு நபிகள் பெருமானாரிடத்தில் அத்யந்தப் பிரியம். நபித்துவத்தைப் பற்றி அவரைப் போல் ஆதாரமாகப் பேசுவோர்கள் சிலர்தான் இருக்க முடியும். நபி பெருமானார் 'உம்மத்து'களுக்குத் தாயைப் போன்று என்று அவர் கூறுவதுண்டு.

சோம்பி இருப்பதைப்போல் அவர் எதையும் வெறுக்கவில்லை. 'செயலாற்று, செயலாற்று' என்று தான் அவர் மூச்சே வெளியாகிறது. "மானிடர் வாழ்க்கையின் ஒரே நோக்கம் செயலாற்றலே. மனிதனும் ஜின்னும் இறைவனைத் தொழுவதற்காகவே படைக்கப்பட்டுள்ளனர் என்று குர்ஆன் சொல்லும்போது அதிலுள்ள தொழுகை என்பதே செயலாற்றுவதைத்தான் குறிப்பிடுகிறது" என்று அவர் கூறியுள்ளார்.

இக்பாலுடைய பேச்சில் இயற்கையாகவே நகைச் சுவையும் மிளிரும். ஒரு தடவை துருக்கி தேசிய சபையின் முதல் தலைவராகவிருந்த காஸி ரவூஃப் பே டெல்லி ஜாமியா மில்லியாவில் இக்பாலுடைய தலைமையில் துருக்கியின் சரிதம்பற்றி ஒரு சொற்பொழிவாற்றினர். அது 1918ம் வருஷ யுத்தம் முடிவுற்றிருந்த காலம். இக்பால் தன் முடிவுரையில் ஒரு கதை சொன்னர்: "யுத்தத்தின் போது ஷைத்தானுடைய சீடர்கள் சிலர் ஷைத்தானிடம் வந்தனர். ஷைத்தான் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்தபடியே சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தான். சீடர்கள் கேட்டார்கள்: 'இப்போதெல்லாம் தாங்கள் ஒரு வேலையுமின்றி இருப்பது எப்படி? நீங்கள் செய்ய வேண்டியது ஏதுமில்லையா?' என்று. ஷைத்தான் சொன்னன்: 'இப்போதெல்லாம் நான் செய்யவேண்டிய வேலை ஏதுமில்லை, சோம்பேரியாகவே காலங்கழிக்கிறேன். காரணம் என் வேலை முழுவதையும் பிரிடிஷ் மந்திரி சபையிடம் ஒப்படைத்துவிட்டேன்' என்று." இதைக்கேட்ட யாவரும் குலுங்கக் குலுங்கச் சிரித்தனர்.

இக்பால் சாதாரணமாகக் கேளிக்கைகளில் கலந்துகொள்வதில்லை. இருட்டிய பின்னர் வெளியே செல்வதே அபூர்வந்தான்.

அவர் அடிக்கடி இவ்விதம் சொல்வதுண்டு: "விரைவில் ஒரு மனிதன் தோன்றுவான் என்று நான் உணர்கிறேன். அவன் காரியவாதியாக இருப்பான். முஸ்லிம் இந்தியாவின் கஷ்டங்களை அவனே தீர்த்து வைப்பான். அத்தகையவன்தான் இன்று முஸ்லிம்களுக்கு வழிகாட்டத் தேவையாக இருக்கிறது."

இக்பால் தாம் இறந்த பின்னர் கட்டப்படப் போகும் தம் கல்லறையில் பதிப்பிப்பதற்காக ஒரு கல்லில் இந்தப் பாட்டைச் செதுக்கும்படி செய்தார்:

இப்புழுதி யிலிருந்து
நான் மூட்டைகட்டியபோது
'அவன் நமக்குத் தெரிந்தவன்'
என்று யாவரும் கூறினர்.
ஆனால் இந்த வழிப்போக்கன்
என்ன சொன்னான்,
யாருக்குச் சென்றான்
எங்கிருந்து சொன்னான்
என்பதை யாரும் அறியார்.

அல்லாமா இக்பால் இன்று வளர்ந்து வருகிறார். தமிழர்களுடைய உள்ளத்திலும் அவருடைய கவிதைகள் எதிரொலி எழுப்பத் தொடங்கியுள்ளன. இனி அவருக்குத் தமிழகம் தக்க முறையில் மரியாதை செலுத்தும் என்று நம்புவதற்கு இடமுண்டல்லவா!

உம் ரஹா தர்கஃபா வ புத் ஹானா மி நாலத் ஹயாத்
தாஸ் பஸம் இஷ்க் யக் தானேயே ராஸ் ஆயத் பரோன்.
அன்பெனும் மஜ்லிஸிலிருந்து
மர்மங்களை அறிந்த ஒருவன்
தோன்றும் வரை,
கஃபாவும் கோயில்களும்
பரம்பரை தோறும்
விம்மிக்
கொண்டேதான் இருக்கும்.

பெண்கள்

மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவஞ் செய்திட வேண்டுமம்மா!
பங்கையக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரினில் அறங்கள் வளருமம்மா!

'அதானும் (பாங்கும்), மலர்களும், பெண்களும் நான் மதிப்புடன் கருதுபவை' என்று பெருமானார் சொன்னதாக ஒரு மொழியுண்டு. மங்கையருக்கு இஸ்லாம் தந்துள்ள உயரிய இடம் உலகறிந்தது. 'பெண்மை என்பது கேண்மோ பீடில' (பெண்மை என்பது பெருமையற்றது) என்ற கொள்கையோ, 'பெண்கள் அகக் காதலெல்லாம் பேசும் முயற் கொம்பே' என்ற கூற்றோ இஸ்லாத்திற்கு எதிரிடையானது. 'பேதமை என்பது மாதர்க் கணிகலம்' என்று கூறிய ஜைன முனிவர்கள் பெண்களை இகழ்ந்து பேசினர். இதே விதந்தான் ஞானி தாமஸ் பிரௌனும், மகாகவி மில்டனும் பெண்களை இகழ்ந்தனர். 'பெண் என்று ஒன்றை இறைவன் ஏன் படைத்தான்? ஆண்களையும் மரங்கள் வளருவதைப்போல் வளரும்படியாக ஏன் செய்திருக்கக் கூடாது?' என்று வருத்தப்பட்டார் தாமஸ் பிரௌன். ஆனால் திருக் குர்ஆன் சொல்வதுபோல் உலகில் இறைவன் சிருஷ்டித்த பொருள்கள் யாவும் ஜோடி ஜோடியாக-ஆணும் பெண்ணுமாகவே-இருப்பதை இவர் அறியார் போலும்!

இஸ்லாம் பெண்களுக்குப் பரிபூரண சுதந்திரமளித்து, எல்லாத்துறைகளிலும் ஆண்களைப்போல் பெண்களும் பங்கு பெறலாம் என்று அறிவித்தது. எனினும்

'மண்ணுக்குள்ளே சில மூடர் மாதர் அறிவைக் கெடுத் தார்; கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி' தம் இனத்தின் பார்வையையே குருடாக்கினார்கள்.

மகாகவி இக்பால் இஸ்லாமியக் கவிஞர் என்ற முறையில் பெண்களைப் போற்றுகிறார். கவிஞர் பலரும் பெண்களைப் புகழ்ந்து பாடுதல் கவி மரபு என்று அவ் விதஞ் செய்வதுண்டு. ஆனால் இக்பால், பெண்கள் ஒரு சமுதாயத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள், சமு தாயத்தின் உயர்வோ வீழ்ச்சியோ அவர்களைப் பொறுத்தது என்பதை நன்கு உணர்ந்தவர். ஆகவே பெண்கள் தங்கள் உரிமைகளோடு நேரிய பாதையில் நடக்கவேண்டும் என்று எண்ணுபவர்.

பெண்கள் எந்தத் துறையிலும் முன்னேறுவதை இஸ் லாம் தடுக்க வில்லை. பெருமானாரின் மனைவியர்களுள் ஒரு வராகிய ஹஸரத் ஆயிஷா நாயகியவர்களே சிறந்த அறி ஞராக விளங்கி இருக்கிறார்கள். ஒரு போர்க்களத்தில் சேனைத்தலைவராகவும் நின்று போர் செய்திருக்கிறார்கள். கிராத்துல் அயின் போன்ற புரட்சிப் பெண்களும், சுல் தானா ரஸியா போன்ற அரசிகளும், ஷுஹுந்தா போன்ற பேராசிரியைகளும், பாத்திமா அல்புதாலியா போன்ற சட்ட நிபுணிகளும் இருந்திருக்கிறார்கள். ஆனால் உலகப் பெண்கள் யாவரும் பின்பற்ற கூடிய முன் மாதிரியாக இவர்களில் யாருமில்லை. பெண்கள், சமுதாயத்தில் தங்க ளுக்கென உள்ள பங்கை நிறைவேற்ற வேண்டுவது அவசி யமன்றோ? மெல்லியலார் (Weaker Sex) என்ற தம் பெயருக்கேற்பப் பெண்கள், சமுதாயம் உயர்வதற்கான தம் கடமைகளை நிறைவேற்ற வேண்டாமா? இயற்கைக் கொப்பவும், இயற்கை தமக்குத் தந்துள்ள உடலமைப் புக்கு ஏற்பவும் அவர்களுக்கென அளிக்கப்பட்டுள்ள தொழில்களை அவர்கள் செய்வதே முறையாகும். இதே அபிப்பிராய முடையவர்தான் இக்பாலும்.

பெண்மையைப் புறக்கணித்து ஆண்மை மேலோங்கச் சில நாரியர் கல்வி கற்ருேம் என்று கூறி மார்தட்டித் திரி வதை இக்பால் வெறுத்தார். அன்னியநாட்டு நடையு டையை அருமையானவை என்று கொண்டு அகமகிழ்ந்து உடல் குலுக்கி அலையும் ஸ்திரீகள் அறிவு பெறவேண்டும் என்று இக்பால் விரும்பினுர். இத்தகைய அவலக்ஷண அணங்குகளைத் தாம் எத்தனை தூரம் வெறுக்கிருர் என் பதைத் தனது சிறந்த காவியமான 'ஜாவீது நாமா' வில் வெளியிடுகிருர். கண்ணுடி உடையும், முகப்பவுடரும், உதட்டுச் சாயமும் உயரிய பெண்ணை ஆக்கிவிட முடி யாது, கணவனைத் தான் இஷ்டப்பட்டால் ஒதுக்கவோ ஏற்கவோ செய்யலாம் என்று எண்ணுபவள் பெண் ணல்ல என்று இக்பால் கூறுகிருர். 'ஜாவீது நாமா' வில் ஒரு நவ நாகரீக மங்கையை அவர் வருணிக்கிருர். அவள் அருளற்ற முகமும், அன்பற்ற அகமும், கருணையற்ற கண் களும், ஈரமற்ற பேச்சும், இனிமையற்ற தன்மையும், நாணமற்ற நிலையும், வளர்ச்சியற்ற மார்பகமுங் கொண் டவள். அவள், பெண்டிர் ஆண்களுக்குக் கீழ்ப்படிந்து குழந்தைகள் பெறுவது தவறு, அதனுல் பெண்கள் அழ கும் உடல் கட்டும் மறையும், ஆண்கள் என்ற ஸர்ப்பங் களைப் பெண்கள் அண்டவிடக்கூடாது, பெண்கள் வேண் டும் இன்பத்தை ஆண்கள் இன்றியே 'ஸயன்ஸ்' மூலம் பெற்று விடலாம் என்றெல்லாம் பேசுகிருள். தம் கடமை யறியாது அறிவற்றதை அறிவெனக் கொண்டு நாகரீகம் என்ற பெயரால் அனுகரீக வழிகளில் இறங்கும் விரிவிலா அறிவுடைய நங்கையரையே இக்பால் இவ்வி தம் வருணிக்கிருர்.

ஆனுல் பெண்ணுனவள் தன் கடமையை உணர்ந்து நடந்தால் சிறந்த சமுதாயம் பிறந்து விடும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையை அடிக்கடி தெரிவிக்கிருர்.

தாய்மை என்ற சுவர்க்கத்திலே
உற்பத்திகள் என்ற பூக்கள் மலர்கின்றன
தீக்ஷண்யமான பார்வை யுள்ளவளே,
ஒரு சமுதாயத்தின் செல்வம்
பணமோ, பொன் வெள்ளியோ அல்ல;
அதன் சொத்து
தேகதிடமும் மனபலமுங் கொண்டமக்களே.
தாய் மார்களே தான்
சமுதாய வளர்ச்சியை ஆக்குபவர்கள்
குர்ஆனுக்கும் சமுதாயத்துக்கும்
தூண் போன்றவர்கள்

என்று தாய்மையைப் போற்றுகிறார் இக்பால். பெண்கள் சிறந்த புதல்வரை வளர்க்காது, அனாசாரங்களில் மூழ்கித் தம்மக்கள் தாய்ப்பால் அறியாது, தாதியின் மடியில் நெளியும்படி விட்டு விட்டால், பின் காலச்சந்ததி 'ஹோட்டல்களில் வாழ்ந்து, ஆஸ்பத்திரிகளில் சாகும்' நிலைமை தான் ஏற்படுமென்று அவர் எச்சரிக்கை செய்கிறார். ஆகவே 'தாய்மை வாழ்க', 'ஆண்மை சேர்ப்பது தாய் முலைப் பாலடா!' என்று இக்பாலும் போற்றுகிறார். ஈன்று புறந்தருதலோடு அமையாது மக்களைச் சான்றோராக்கவும் வழி கோலுதல் தாய்மார் கடன் என்று அவர் கருதுகிறார். மாதர்க்கு அவர் தரும் மதிப்பை இக்கவிதையிலே காணலாம்:

பெண்மையின் ஸ்பர்ஸத்தால்
ஆண்மைத் தந்தி நாதமெழுப்புகிறது.
அவள் அடிபணிதல்
அவனை அதிகப் பலவானாக்குகிறது.
ஆணின் மானங் காக்கும் ஆடை அவள்.
இறை அன்பு அவள் மடியிலே வளர்க்கப் படுகிறது.
உலகம் பெருமை கொள்ளும் ஒருவன்
அவளை மரியாதையோடு குறிப்பிடுகிறான்

அவளை அடிமையாய் எண்ணும் முஸல்மான்
குர்ஆனைல் படின்அடையாதவனாகும்
சரியான தாய்மையைக் காண்பதும் நன்றே.
தாய்மை நபித்துவத்துக்கு அடுத்த தெனலாம்
தாயின் அன்பு மொழிகள்
நபியின் இதமொழிகள் போன்றவை.
அவள் இனத்தின் மதிப்பை உயாத்துபவள்
நபி பெருமான் சொன்னார்கள் :
' சுவர்க்கம் மாதாவின் பாதத்தடியிலே' என்று.
பெண்மைக்கு அளிக்கும் பெருமையே
நம் சமுதாய வளர்ச்சியை ஆக்குவிக்கும்.
வாழ்க்கையின் மர்மங்கள் வெளியாவது அவளால்
மெல்லியலார் மூலமே
நாம் உணர்ச்சியும்,
செயலாற்றும் திறமையும் பெறுகிறோம்.
அவள்
நம் உள்ளமெனும் வாவியில்
அலையும், குமிழியும், நெளியும் நீர்ப்பரப்பும்
எழுப்பவல்லவள்

இக்பால் பெண்களைப் பற்றி பொதுவாக இவ்வளவு பெருமையாகப் பேசினாலும், ஒரே ஒரு பெண்மணியைத் தான் லக்ஷியப் பெண்மணியாய்க் கொண்டுள்ளார். இக்பால் பல சரிதைகளையும் நன்கு கற்றவர் என்ற முறையில், இடுக்கண் இடையிலும் கடமையைத் தட்டிக் கழிக்காது கஷ்டப்படும் பெண்மையை வரவேற்பவர்; கடமைக்கு முதலிடந்தது, அன்பு பூண்டொழுகும் அரிவையரைப் போற்றுபவர். அவருடைய லக்ஷியப் பெண்மணி யார்?

அவருடைய லக்ஷியப் பெண்மணி பெண்களுள் ரத்தினமாகும். இல்லற வாழ்க்கையில் எதிர்ப்பட்ட எண்ணற்ற இடர்களையும் தம் பொறுமையால் வென்றவர். விருந்தினரைக் கண்ட போது வறுமையையும் மறந்து

விருந்திட ஏற்பாடுகள் செய்த ஏந்திழையார். வீட்டில் குறைகள் பல வெனினும் கணவனைச் சற்றுங் கடியாத காரிகையார். வீர மக்களைப் பெற்றெடுத்த வனிதாமணி. தந்தையார் எண்ணினால் பொன்னையும் பொருளையும் புத்திரி முன் குவித்து விடலாம். காரணம் தந்தையின் கையசைப்பிற்காகக் காத்திருந்தனர் கோடான கோடிப் பேர். எனினும் நியாயம் என்பதன் பக்கம் இருவரும் நின்றதன் பயனாய் தினமும் கை கொப்பளிக்கக் கோதுமை அறைத்த பெண்கள் நாயகம். ஆமாம், பெருமானார் அவர்கள் திருப்புதல்வியார் பாத்திமுத்து ஸொஹறாஎன்ற பாத்திமா நாயகியே அந்த லக்ஷியப் பெண்மணி; வீரர் அலியின் அருமை மனைவியார்; இமாம் ஹஸன், ஹுஸைனின் ஆருயிர் அன்னையார்; உலகப்பெண்களுக்கே முன் மாதிரியான பெண்மையின் சிகரம். அத்தகைய அன்னையைப் பற்றி பேசும் கவிஞர் காட்டுகிற மதிப்பையும் மரியாதையையும் பாருங்கள் :

பதூல் (பாத்திமா) பணிவென்ற வயலின் பொற்கதிர்,
தாய்மார்கள் பின்பற்றுவதற்கு உரிய லக்ஷியப் பெண்மணி.
ஓர் ஏழையின் தேவைக் கிரங்கித்
தன் கம்பளியை
யூதனுக்கு விற்றமாது சிரோமணி.
நெருப்பும், ஒளியும்
அவர்கள் உத்திரவுக்குப் பணிந்தன,
அவர்கள் கணவரின் இஷ்டமே,
அவர்கள் இஷ்டமும்.
அவர்கள் வளர்ந்ததே
பொறுமையோடும் பணிவோடுந்தான்.
கோதுமை அறைத்தபோது
குர்ஆன் திரு மொழிகள்
அவர்கள் நாவில் நிலவின.
அவர்கள் கண்ணீர்
தலையணையில் விழுந்தில்லை.

அவர்கள் தொழுகை முஸல்லாவிலேயே
அக் கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன.

இக்கருத்துக்கொண்ட அசல் கவிதையிலே இக்பாலின் இதய வேகம் முழுதுந் துடிக்கிறது.

அன்று பெருமானுர் திருமகள் பாத்திமா (ரலி) அவர்களின் அன்பும் தாய்மையும், நீதியை உலகிலே நிலை நாட்டிய ஒரு ஹுஸைனைத் தந்தன. இன்று தாய்மார்களெல்லாம் அந்தப் பெருமாட்டியின் முன்மாதிரியைப் பின்பற்றத் தொடங்கினுல் எத்தனையோ ஹுஸைன்கள் தோன்ற முடியும். உலகமும் உன்னத நிலையடையும். இதைத் தான் கவியரசர் இக்பாலும் எண்ணிப் பார்த்து, இன்றைய மாதருலகை விளித்துக் கூறுகிருர்:

தெய்வீக நியதியைத்
தன்னகத்தே கொண்டவளே,
உன் பராமரிப்பு
எங்கள் நடத்தையைச் சமைக்கிறது,
அது எங்கள் சிந்தனையை,
பேச்சை, செயல்களை
உருவாக்குகிறது.
உன் உயிர்ப்பிலே தெய்வீகம் வீசுகிறது,
நீயே சமுதாயச் செல்வத்தைப் பாதுகாப்பவள்,
உன்னகத்தே
உயரிய, சிறந்த சிந்தனையுண்டு.
ஸொஹ்றா * என்ற லக்ஷியப் பெண்கள் நாயகத்தை
மறந்து விடாதே!
உன் கிளையிலிருந்தும்
ஒரு ஹுஸைன் குதித் தெழட்டும்;
அவன்
பூங்காவின் வஸந்தத்தை மீட்டுவரட்டும்.

[*ஸொஹ்றா—பாத்திமுத்து ஸொஹ்றா (ரலி)

இவ்விதமாக இக்பால் பெண்களைப்பற்றி மிக மதிப்பு வாய்ந்த முறையில் பேசுகிறார். சமுதாயத்தில் இஸ்லாமியச் சட்ட திட்டங்கள் தரும் சுதந்திரங்களோடு, பெண்கள் இருக்கவேண்டிய இடம் எது என்பதைக் காட்டுகிறார். பெண்கள் தம் இனத்தை உயர்த்த என்ன செய்ய வேண்டும் என்பதற்கு வழி கூறுகிறார். இன்றைய மாதருலகம் கவிஞரின் இச்சிறந்த கருத்துக்களை உற்று நோக்கட்டும். அதன்படி தம்மைத் திருத்தித் தம் சமுதாயத்துக்கு நலனைத் தேடட்டும்.

அன்னமூட்டிய தெய்வ மணிக் கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத்தே முத்தங் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும் பொற் கைகளைப் பாடுவோம்.

[பாரதியார்]

கலை

" கலை என்பது வாழ்க்கையின் பணியாள் "

—இக்பால்.

நாம் இயற்கைக் காட்சிகளில் காணும் அழகு என்பது நிரந்தரமானதன்று. அதில் தென்படுகின்ற அழகான பொருள்களெல்லாம் அழியும் தன்மையுடையன. இன்று சிரித்து உள்ளங்காட்டி நிற்கும் முல்லை மலர் நாளை வாடி விடுகிறது. அந்தி மாலையில் அற்புதக் காட்சி தந்து நிற்கும் மேகம் சற்று நேரத்தில் மறைந்து விடுகிறது. முல்லை நகை பயிற்றி உள்ளம் பரித்து நிற்கும் அழகி பல்லற்று தோல் சுருக்கு விழுந்த கிழவியாகி மறைகிருள். முல்லையிலும், மாலை மேகத்திலும், அழகியிலும் நாம் காண்பது அழகு. ஆனல் அது நிரந்தர மற்ற—அழியுந்தன்மையுள்ள—அழகு. இந்த அழகை நிரந்தரமாக்க முடியாதா? முடியும். இதை நிரந்தரமாக்குவதுதான் கலை. மலர்க் கொத்துக் குலுங்க நிற்கும் செடியைச் சித்திரமாகத் தீட்டி விடலாம்; அதைப்பற்றி கவிதை புனைந்து விடலாம். அச்சித்திரத்திலோ கவிதையிலோ அம்மலர்ச் செடி அமரத்துவம் பெற்றுவிடுகிறது. மாலை மேகமும் அழகியும் சித்திரத்திலோ, சிற்பத்திலோ கவிதையிலோ உருப் பெற்றுவிட்டால் அமரத்துவ மடைந்து விடுகின்றன. இவ்வாறு அழியும் அழகை அழியாததாக்குவது தான் கலை.

ஆனல் அழகை அழியாத தன்மையுள்ளதாக்கும் போது அங்கே ஒரு லக்ஷியம் ஒளிரவேண்டும். கலையின்

ஆத்மாவில் லக்ஷிய உயிர் துடிக்கவேண்டும். ஆங்கில அறிஞர் ஹட்சன் சொல்வது போல அந்த ஆத்மா வெளிப்படையாக இருக்க வேண்டியதில்லை. கலையின் உயிர் நாடியை ரசிகன் கண்டு பிடித்து விடுவான்.

கலையின் உண்மைக் குறிக்கோள், வாழ்க்கையை வளமுள்ளதாகவும் அழகானதாகவும் செய்வதாக இருக்க வேண்டும். இதுதான் உண்மைக் கலைஞன் லக்ஷியமாகக் கொள்ள வேண்டியது என்கிறார் அல்லாமா இக்பால். "வாழ்க்கையை அமரத்துவமுள்ள தாக்குவதே கலையின் நோக்கம். பொருள்களின் உண்மையை உணர்த்தத் தவறுவது கலையன்று. மூஸா நபியின் தடியைப்போல் சக்தியுள்ளதாகக் கலை விளங்க வேண்டும்"—இது இக்பால் கூற்று.

உண்மைக் கலைஞன் தன் சூழ் நிலையோடு ஓயாது போராடுகிறான். வெற்றிபெற முயல்கிறான். இதன் பயனாக அவனுடைய அந்தரங்க சக்தி பலம் பெறுகிறது. பின்னர் அவன் வெறும் இன்பம் பயக்கும் கலா சிருஷ்டியை ஆக்குபவனாக இருக்கமாட்டான்.

இறைவன் இயற்கையைப் படைத்தான். மனிதன் கலையைச் சிருஷ்டிக்கிறான். இறைவன் உலகை உண்டாக்கினான்; மனிதன் அதை அழகு படுத்தினான். எது சிறந்தது? இறைவனின் படைப்பா, மனிதனின் சிருஷ்டியா? மனிதன் இறைவனை நோக்கிக் கூறுவதுபோல இக்பால் சொல்கிறார் :

நீ இரவைப்படைத்தாய்,
நான் விளக்கைச் சமைத்தேன்
நீ மண்ணைச் சிருஷ்டித்தாய்,
நான் பாத்திரத்தை ஆக்கினேன்
நீ பாலையை, மலையை,
காட்டை உண்டுசெய்தாய்,

நான் தோட்டத்தை, தோப்பை, சோலையை
அமைத்தேன்.
கல்லி விருந்து கண்ணாடி செய்தவன் நான்.
நானே விஷத்தை மூலிகை யாக்கியவன்.

இறைவன் தந்ததை மனித உபயோகத்துக்கு மாற்றி யவனே கலைஞன். மண்ணிலிருந்து பாத்திரத்தை, மலையிலும் காட்டிலும் தோட்டத்தை, கல்லிலிருந்து கண்ணாடியை, விஷத்திலிருந்து மூலிகையைச் செய்பவனே கலைஞன். அவன் இறைவனைவிடப் பெரியகாரியஞ் செய்து விடுகிறான். இறைவன் வசதிகள் தருகிறான்; கலைஞன் வழி காட்டுகிறான்.

கலை, வாழ்க்கை உண்மைகளை வெளியிட முயல்வதாக இருக்க வேண்டும். சிறந்த கலைஞர்கள் அறிவுக்கு விருந்து தரும் கலை போதும் என்று திருப்தி அடைந்தார்களில்லை. தங்கள் கலா சிருஷ்டிகள், தூங்கிக்கிடக்கும் மானிடர்க்கு உணர்ச்சி தந்து மக்கள் விதியை மாற்றியமைக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்கள் மனதில் உறைந்து கிடந்தது. இத்தகைய உயரிய கொள்கை நிறைவேற அவர்கள் சில முறைகளைக் கையாண்டனர். தம்முறையைப் பற்றி இக்பால் கூறுவதாவது:

காதல் தாகம் கவிதையை நிறைக்கவேணும்,
குருதியிலே கரைந்த நெருப்பைப் போல.
லக்ஷியமற்ற கவிதை உயிரற்றது.
அதன் வேகம் அணையும் நெருப்பை யொத்தது.
சிறந்த கலைஞன் இயற்கையைப் பயன் படுத்தித்
தன் லக்ஷியத்தை வெளியிடுகிறான்
அவன் புது உலகைச் சிருஷ்டிக்கிறான்;
நமக்குப் புத்துணர்ச்சி யூட்டுகிறான்.

ஹிந்து கவிஞர்கள் கலையை ஒரு தெய்வ மாக்கினர். அதற்குக் கலைமகள் என்று பெயரிட்டனர். அழகுள்ள

இடத்திலெல்லாம் அவளைக் கண்டனர். அழகுதானே கலையின் அடிப்படை! எல்லாப்பொருள்களிலும் அழகைக் கண்டனர். அவற்றில் அழகு இருக்கிறது என்று சொல்லாது கலைமகள் இருக்கிருள் என்றனர். அழகிலும் இனிமையிலும் அவள் இருக்கிருள்என்று பாரதியைப்போலப் பாடினர். மாதர் தீங்குரல் பாட்டிலும், மக்கள் பேசும் மழலையிலும், கீதம்பாடும் குயிலின் குரலிலும், கிளியின் நாவிலும், குலவு சித்திரம், கோபுரம்கோயில் ஈதனைத்திலும் அவள் இருக்கிருள் என்றனர். இக்பாலும் பனித்துளியிலும், பலையின் மௌனத்திலும், பகலவன் கதிர்களிலும், அருணனின் மங்கிய ஒளியினிலும், அழிந்த சின்னங்களிலும் அழகைக் கண்டார். ஆனுல் இக்பாலுக்கும் ஹிந்து கவிஞர்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசமுண்டு. ஹிந்து கவிஞர்கள் கலையைத் தெய்வமாக்கினர். வாணி என்றனர். வழிபாடு செய்தனர். ஆனுல் இக்பாலோ அவ்விதம் எண்ணவில்லை. அவர் கலையை மதித்தார். அதற்குரிய இடத்தை யளித்தார். உண்மைக் கலையின் உயர்வை உணர்ந்திருந்தார். ஆனுல் அவர் கலையைக் கும்பிடத் தயாராயில்லை. "கலையென்பது வாழ்க்கையின் பணியாள்" என்பதே அவர் கூற்று. கலையை மனித வாழ்க்கையை உயர்த்த உதவும் சாதனமாகவே கருதினுர். வாழ்க்கைக்குப் பயன்படாத எதையும் நல்ல கலையென்று அவர் ஒப்புக்கொள்ள இணங்கவில்லை.

முதலில் கலை யென்பது இயற்கை அழகை அமரத்துவமாக்குவது என்று பார்த்தோம். ஆனுல் அப்படி நிரந்தரமாக்கும்போதே அதனுள் ஒரு சிறந்த லக்ஷியம்—உலக நிலையை உயர்த்தும் லக்ஷியம், மனித வாழ்வுக்கு வழிகாட்டும் லக்ஷியம் புகுத்தப்பட வேண்டும் என்பதே இக்பால் கொள்கை.

ஆகவே கலைஞனுக்கு மனதினில் உண்மை ஒளி உண்டாகவேண்டும். அது உண்டாகிவிட்டால் அவன் சிறந்து

கலைஞனாகிவிடுவான். அந்த ஒளி தக்க பக்குவம் பெற்ற பின் வாழ்க்கையின் ரகசியங்களெல்லாம் அவனுக்குப் புலனாகும். அந்த இரகசியங்களுக்குக் கலையுருக் கொடுக்கும் போது அது கருதிய பயனைத்தருவதாக அமையும். இதைப்பற்றி இக்பாலே தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்: "தங்கள் கால அரபிக் கவிதைகளைப் பற்றி நமது நபி பெருமான்" என்ற தலைப்பில் இக்பால் எழுதியுள்ள கட்டுரையில் கூறுவதாவது:

":மானிடரின் செயல் முறைகள் அனைத்தும் வாழ்க்கையை உயர்த்தவேண்டும் என்ற இறுதி நோக்கங் கொண்டனவே. இதே நோக்கத்திற்கு உட்பட்டதாகத் தான் எல்லாக் கலைகளும் விளங்க வேண்டும். ஒரு பொருள் வாழ்க்கைக்கு எவ்வளவு தூரம் பயன்படுமோ அவ்வளவே அதன் மதிப்பும். மிகச்சிறந்த கலை எது என்றால் நமக்கு நம்பிக்கையைத் தந்து வாழ்க்கையின் சோதனையை ஆண்மையோடு சகிக்கச் செய்வதுதான்.

நமக்குக் கோழைத் தனத்தைத் தரும்—உண்மையை மறைக்கும்—கலை, நாசத்தை விளைவிப்பதாகும். கலையில் அபினி கலத்தல் கூடாது. கலைகாகவே கலை என்று சொல்வது வெகு தந்திரமான ஏமாற்று வித்தை; நம் சக்தியையும் வாழ்க்கையையும் விரயமாக்குவது."

இதிலிருந்து இக்பால் கலையைப் பற்றி கொண்டுள்ள கருத்து எவ்வளவு சிறந்தது என்பதை உணரலாம். இக்பாலுடைய கவிதைகளையே யாயினும் சரி, தமிழ் இலக்கியத்திலுள்ள கவிதைகளை யாயினும் சரி—கவிதைதான் கலைகளுள் சிறந்தது.—வேறு கலா சிருஷ்டிகளையாயினும் சரி, இக்பால் தந்துள்ள இச்சோதனையைக் கையாண்டு அளந்து பார்க்கலாம்.

இறைவன் கட்டளை

கார்ல் மார்க்ஸ் கம்யூனிஸத்தை விளக்கி எழுதினார். லெனின் அதைக் காரியத்தில் நடத்திக் காட்டினான். கார்ல் மார்க்ஸின் கம்யூனிஸம் இஸ்லாத்தோடு இணங்கியது தான். ஆனால் இஸ்லாத்தின் உயிர் நாடி - ஆணிவேர் — இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதாகும். கம்யூனிஸம் இறைவன் இருக்கிறான் என்ற சர்ச்சையில் இறங்கத் தேவையில்லை, இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். அதுபற்றி கவலைப்பட வேண்டியதுமில்லை என்ற விதத்தில் பேசுகிறது. இஸ்லாம் இறைவனை அடிப்படையாக வைத்தே எல்லாக் காரியங்களும் நடக்கவேண்டும் என்கிறது. ஆனால் கம்யூனிஸம் கடவுளுக்கு அவ்விதம் இடந்தரவில்லை, கடவுளின் பெயரைச் சொல்லிக் கயவர்கள் சிலர் மற்றவர்களைச் சுரண்டுகின்றனர். மதம் என்ற பெயரால் மக்களின் மதியை மந்தமாக்குகின்றனர். சமயம் என்று கூறி சாபமிடும் சழக்கர் கூட்டம் வேண்டாம் என்று கார்ல் மார்க்ஸ் கருதினார். ஆகவே கடவுளை அடிப்படையாகக் கொண்ட மதத்தை லெனினும் புறக்கணித்தான். மனிதன் கடவுளையும் மதத்தையும் தம் சொந்த விஷயமாக வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம்; ஆனால் அதைப் பொது விஷயங்களில் புகுத்தல் தவறு என்று லெனின் முடிவு கட்டினான். ஆகவே கம்யூனிஸம் கடவுளை ஒதுக்கிற்று.

இம்மாபெரும் வித்தியாசத்தைத் தவிர மற்ற முக்கிய விஷயங்களில் இஸ்லாமும் கம்யூனிஸமும் இணைந்தே நிற்

கின்றன. குறிப்பாக இஸ்லாத்தைப் போலவே கம்யூனிஸமும் மக்கள் யாவரும் சமமானவர்கள், ஒருவன் உழைப்பின் பயனை அவனே பெறவேண்டும் என்று கூறுகிறது.

கம்யூனிஸத்தை நடைமுறையில் கொண்டுவந்த லெனின் தன் மரணத்துக்குப் பிறகாவது இறைவனின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பானுனல், அவனே உலகங்களை ஆட்டுவிப்பவன் என்பதை அறிந்திருப்பானுல் நிலைமை எப்படி இருக்கும்?-இவ்விதம் எண்ணிப் பார்க்கிறார் இக்பால்.

'லெனின், தேவதூதர்கள் (மலக்குகள்), இறைவன் கட்டளை' என்ற மூன்று சிறு தலைப்புகளடங்கிய ஒரு பாட்டில் இதைப்பற்றி கூறுகிறார் இக்பால். அவர் வெறும் கனவுலகக் கவிஞரல்ல; கவிதை என்பது அவருக்குத்துன்பத்தை மறக்கும் ஓர் இன்பச் சாதனமல்ல; மயக்கந்தரும் அபினியல்ல; செல்வர் வாழ்க்கையைச் சிறப்பித்துக் கூறும் கருவியல்ல; பிறர் தயவை நாடுவதற்காகத் தயார் செய்யப்படும் விற்பனைச் சரக்கல்ல. மற்ற கலைகளைப்போல் கவிதையும் மக்கள் நிலையைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும், மக்கள் துயர் துடைக்க மார்க்கங் கூறுவதாக இருக்கவேண்டும், உடைந்த உள்ளத்தின் உருக்கத்தைப் பிறர்க்கு உணர்த்துவதாக இருக்கவேண்டும், இரத்தம் கசியும் மனதுக்கு அருமருந்தாக அமையவேண்டும், வீழ்ச்சியுற்ற இனத்தை வீறுகொண்டெழச் செய்யும் அமுதமாக இருக்கவேண்டும் — உண்மைக் கவிதை இவ்விதம் செய்யும் என்பது இக்பால் நம்பிக்கை. ஆகவே அவர் மாடமாளிகைகளின் போக வாழ்க்கையைப் பொருட்டாக மதித்துத் தம் கவிதைக்குக் கருப்பொருளாகக் கொண்டாரில்லை. உண்டு மயங்கி ஊடாடும் மக்களினத்தின் வாழ்வைக் கவிதையில் இசைத்துக் களிக்கக் கருதினரில்லை. உலகம் உயர வேண்டும், உலக மக்கள்

துயர் தீரவேண்டும் என்ற எண்ணம் இக்பால் உள்ளத்தை ஆக்கிரமித்திருந்தது.

இத்தகைய நிலையில் அவர் ஏழைபடும் பாட்டை எழுத்தில் வடித்தாரென்றால் அதில் ஆச்சரியமென்ன? இருக்கும்போது இறைவனை ஒதுக்கிய லெனின் இறந்துபட்டபின் அம்மறை பொருளைக் காண்கிறான். "யாரப்பா நீ? இறைவனா?" என்று வினவுகிறான். உன் உயிர்ப்பு சக்திதானா உயிர்களிடையே நிலவுகிறது? எனினும் நான் அன்று இதை உணர்ந்தேனில்லை. அது சரி, நீ யாருடைய கடவுள்? உலகில் தெய்வம் எனப் படுவன பணமும் மனிதனுமாக இருக்கும்போது நீ யாருடைய கடவுள் என்பதையாவது தெரிவிப்பாயா? பணக்காரர் கொடுமையைக் கண்டும் நீ வாளாக இருப்பதேனோ? தொழிலாளர் துயர் கண்டும் உன் மனம் இளகவில்லையா? அவர்களுக்கு விமோசனம் என்று கிடைக்கும்?" என்று லெனின் இறைவனை நோக்கிக் கேள்விகளை அடுக்குகிறான். அவன் சொல்கிறான்:

உயிர்களிடையே உன் சக்தியை உணர்ந்தோம்
நீ எங்கு மிருப்பவன், என்று மிருப்பவன்,
எனினும் அதை நான் எங்ஙனம் அறிவேன்?
இன்று கண்ணால் கண்டபின் உணர்கறேன்...
நீ யாருக்குக் கடவுள்?
வானத்தினடியிலுள்ள வையகத்தோருக்கா?
கீழ்நாட்டினர்க்கு மேல் நாட்டு வெள்ளையனே
தெய்வம்.
மேல் நாட்டினர்க்கு மின்னும் பொன்னே கடவுள்
நீ யாருடைய இறைவன்?
இவ்வறிவும், கல்வியும், ஞானமும், தந்திரமும்
உயிரை உறிஞ்சியபடியே
சமத்துவம் பேசுகின்றன.
நீ சர்வ வல்லமையாளன், நீதிவான்,
ஆனல்

உன் உலகிலோ
தொழிலாளியின் துயருக்கு எல்லையில்லை.
முதலாளித்துவக் கப்பல் அழிவதென்று ?
உன் உலகம்
விடுதலை நாளை வேண்டித் தவிக்கிறது.

இவ்விதம் கற்றோரும் மற்றோரும் கடவுளை மறந்து கற்ற கல்வியையும் பெற்ற செல்வத்தையும் உழைப்பாளி களுக் கெதிராகப் பயன் படுத்த முயலும் கொடுமையை, உடலலுக்க நித்த நித்தம் உழைத்தலுக்கும் மக்களிடம் கருணை காட்டா வன்நெஞ்சத்தை லெனின் விவரிக்கிறான். அவனுடைய இம்முறையீடு தேவ தூதர்களின் மனதை யும் உருக்கி விடுகிறது. ஆமாம், இன்றைய உலகின் நிலை அவன் வருணித்தது போலவே இருக்கிறதென்று அவை யும் இறைவனிடம் முறையிடுகின்றன.

அறிவு இன்னும் கட்டுப்பாடற்றதாகவில்லை
அன்பு ஒரு சிலரின் உரிமையாகவில்லை
எனினும்
தெய்வீகச் சைத்ரீகனே,
உன் சித்திரத்தில் சோபையில்லை,
காலாடியும், மதத்தலைவனும், மீரும், பீரும்
மானிடர் பாதையில் வலை விரித்துள்ளனர்,
உலகில்
பழைய முறை இன்னும் மாறவில்லை.

இவ்விதம் தேவ தூதர்கள் கூறிய உடனே சர்வ வல்லமையுடைய இறைவன் மனமிறங்குகிறான். ஏழை கள் இன்னலைக் களையவேண்டும், ஒருவன் உழைப்பில் மற்றவன் உண்டு கொழுக்கும் கொடுமை ஒழிய வேண் டும் என்று அவன் எண்ணுகிறான். அவ்வளவு தான், தன் தூதர்களுக்கு உத்திரவிடுகிறான். பயங்கரமான உத் திரவுதான். உலகில் புரட்சி என்பார்களே அது தான் இறைவனின் கட்டளையா? உரிமை யிழந்தோருக்கு

உணர்ச்சி யூட்டி, போகத்தில் மயங்குவோருக்குப் புத்தி புகட்டும்படி அவன் சொல்லுகிறுன்:

எழுங்கள்,
உரிமையிழந்து உணர்ச்சியற்று உறங்கும்
ஏழை மக்களைத் தட்டி யெழுப்புங்கள்!
பணக்காரர் கோட்டைகள்
அடியோடு அதிர்ந்து சாயட்டும்.
அடிமைகளின் குருதியை
உணர்ச்சி உயிர் கொண்டு ஓடச்செய்யுங்கள்?
எளிய ஊர்க்குருவி
இராஜாளியை எதிர்க்கப் பலமளியுங்கள்.
மக்களாட்சிக்கான
மாட்சி மிக்க நாள் நெருங்கிவிட்டது.
பழைய சின்னங்களை
எங்கு காணினும் துவம்சம் செய்யுங்கள்?
உழவன் உணவுக்கு உதவாத கழனி
எங்காவது இருந்தால்
அதில் ஒரு தானிய மணிகூடமிஞ்சாதபடி
நெருப்பிட்டுக் கொளுத்துங்கள்.
கோயில்கள், மசூதிகளின்
விளக்குகளை அணைத்து விடுவதுகூட நன்று.
சலவைக் கற்களாலாய
இப்பிரார்த்தனை ஸ்தலங்களை
நான் வெறுக்கிறேன்.
என்னைப் பிரார்த்திக்க
மண்ணாலான குடிசைகள் எழட்டும்.
நவீன நாகரீகமென்பது
கண்ணாடித் தொழிற் சாலை;
கீழ் நாட்டுக் கவிஞனுக்கு
வெறியை ஊட்டுங்கள்
அவன் அதை நொறுக்கி எறிவான்.

இவ்விதமாக இறைவன் கட்டளையிடுகிருன். "இறந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்'! என்று திருவள்ளுவர் இறைவன் சிருஷ்டித்த மக்கள் தம் உழைப்பால் உயிர் வாழ வகையற்றுப் போனுல் அச்சிருஷ்டிக்கர்த்தாவே நாசமாகட்டும் என்று சாபமிட்டார். 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதி ஆத்திரத்தோடு அறைந்தார். ஆனுல் இக்பால் எல்லாக் கவிஞருக்கும் மேல் ஒரு படி செல்கிருர். அவர் உண்மை இஸ்லாமிய சமத்துவத்தை இறைவன் வாயாலேயே சொல்லும்படி செய்கிருர். உழவன் நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்திப் பயிரிடுகிருன். பயிர் பலனளிக்கிறது. ஆனுல் அப்பலனை அள்ளிச் செல்பவன் வேருெருவன். இக்கொடுமை ஒழியவேண்டும். அவனவன் உழைப்பின் பயனை அவனவனே அடையவேண்டும் என்பது இக்பால் கொள்கை. ஆகவே தான் அவர் கவிதையில் உணர்ச்சி செத்து ஒடுங்கிக் கிடக்கும் பஞ்சை விழிப்புறவேண்டும், தன் இரத்தத்தை உறிஞ்சி உயிர் வாழும் வர்க்கத்தினரோடு போராடவேண்டும் என்ற தம் உள்ளக்கிடக்கையை வெளியிட்டார். அத்துடன் நில்லாது உழைப்பாளிக்கு அந்த உணவின் பயன் கிட்டாதெனின் அதற்கு நெருப்பிட்டுக் கொளுத்த வேண்டும் என்று தன் நெஞ்சு குமுறக் கூறுகிருர். இந்த அபேதவாதந்தான் இஸ்லாமிய சமத்துவம். கடவுளை ஒதுக்கி விட்டு அன்பைப் புறக்கணித்துவிட்டு ஏழைகளுக்காகப் பாடு படுவதாகச் சொல்வதல்ல. இஸ்லாத்தில் மதத்தரகனுக்கும் குருக்களுக்கும் இடமில்லை; அறிவு பெறும் மாந்தர் அதனை உணர்வர். அத்துடன் இந்த அபேதவாதம் அன்பையும் அறிவையும் அடிப்படையாகக் கொண்டது. இதை இக்பாலைப்போல் இவ்வளவு தெளிவாக வேறு எக்கவிஞராவது விளங்கியுள்ளாரா என்பது சந்தேகந்தான்.

அன்பும் அறிவும்

'நான் இருக்கிறேனா இல்லையா?' என்று
ஐயமுற்றது அறிவு;
'நீ இருக்கிறாய்!' என்றது அன்பு.

இன்பம் வேண்டுமா? அதற்கு அன்புநீர் பாய்ச்சி அறிவெனும் ஏர் கொண்டு உழவேண்டும், இன்பப் பயிர் விளையும் என்றார் பாரதியார். அன்பை நீராகவும் அறிவை ஏராகவும் அவர் பாவித்தார். இன்றைய உலகம் அறிவுக்கே முதல் இடம் தருகிறது; அறிவையே பெரிதாகக் கருதுகிறது. பகுத்தறிவை முதல் படியாகக் கொண்டே எதையும் ஆராயவேண்டும் என்று விவாதிக்கிறது.

மதம் என்பது அன்பை அடிப்படையாகக் கொண்டது, அன்புக்குப் பின்பே அறிவு என்கின்றன சமயங்கள். இறைவன் அன்புருவானவன் என்று சமயப் பெரியார்கள் பேசுகின்றனர்.

ஆனால் அறிவை முதற்படியாகக்கொண்டு ஆராய்ச்சி நடத்தவேண்டும் என்று கூறும் பகுத்தறிவு வாதிகள் அன்பை மூடத்தனம் என்கின்றனர். அறிவுக்குமேலான அடிப்படை, அறிவுக்கு முந்திய படி அன்பு என்பதை இவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்.

இஸ்லாம் அறிவுக்குப் பெரும் மதிப்புத் தருகிறது. அறிவு தேடுவதை இஸ்லாத்தைப்போல் அத்தனை தூரம் வலியுறுத்துகின்ற வேறு சமயம் உண்டா என்பதே சந்தேகந்தான். எனினும் இஸ்லாம் அன்பை அடிப்படையாகக் கொண்ட சமயம்; மனிதனுக்கு மனிதன் அன்பு காட்ட வேண்டும் என்று போதிப்பது. ஒருவன் துன்பத்தால் துயருறும்போது மற்றவன் அவனுக்கு ஆறுதல் கூறவேண்டும் என்று கூறுகிறது இஸ்லாம்.

அன்பையும் அறிவையும் பற்றி அதிகம் பேசும் கவிஞர் இக்பால் என்று சொல்லலாம். வாழ்க்கையில் உயர்ந்த சக்தியாக விளங்குவது அன்பு என்பது அவர் நம்பிக்கை. இக்பால் குறிப்பிடும் அன்பு மிகப் பரந்தது. இறைவனோடு நாம் சம்பந்தப்படுத்தும் கருணை முதலிய குணங்களை நம்முள் வளர்த்தலே அன்பை வளர்ப்பதாகும் என்கிறார் இக்பால்.

உலகம் உன்னதமடைய அன்பு ஒன்றே சரியானவழி என்பது இக்பாலுடைய நம்பிக்கை. வாழ்க்கைக்கு உண்மை உயிர் வேண்டுமானால் அதை அன்பின் அருங்கரம் தொடவேண்டுமாம். அன்பு ஆத்மாவைப் பரிசுத்தமாக்குமாம்.

அறிவோ? மனிதனுக்கு அறிவு அவசியமானது. ஆனால் அது அவனுக்கு ஏவல் செய்வதாக இருக்கவேண்டும். தன்னைக் காப்பாற்றி கொள்ளவும், பேய் மனதின் சபலத்தைக் கட்டுப்படுத்தவும் அறிவு வேண்டும். ஆனால் மனித வளர்ச்சிக்கு அது அவசியமில்லை என்கிறார் இக்பால். அன்பு தன் பாதையில் முன்னேற்றமுற அறிவின் துணைவேண்டியது தான். ஆனால் அன்பே உலகில் இன்பப்பேற்றை, அமரத் தன்மையை அளிக்கமுடியும்.

அறிவு சில சமயங்களில் மோசடி செய்து விடுகிறதாம். அதன் போராட்டம் தவறான வழியில் கொண்டு செல்கிறதாம், மனிதனுக்கு வழிகாட்ட வேண்டிய அதுவே மனிதனை மயக்கிவிடுகிறது. இதற்குப் பல அறிஞர்களின் சரித்திரங்கள் சான்றுகளாக உள்ளன:

மேல்நாட்டுத் தத்துவ ஞானி நீச்சே அறிவை அடிப்படையாகக் கொண்டு, 'இறைவன் இருக்கிறானா?' என்று துளாவலானார். அவருடைய 'சிற்றறிவு' இறைவன் இல்லை என்ற முடிவுக்கு வந்தது. அதுபோலவே அரபித் தத்துவஞானியும் மகா அறிஞருமான இமாம் பக்ருத்தீன் ராஸி அறிவை அடிப்படையாகக் கொண்டு ஆண்டவன்

ஒருவன் தானு என்று ஆராயலானுர்கள். அதன் பயனுய் இறைவன் ஒருவனே என்பதற்கு இருநூறுக்கு மேற்பட்ட காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, ஆனுல் இவையாவும் இமாமுடைய மரணத் தருவாயில் அர்த்த மற்றவையாகிவிட்டன. கடைசியில் "குல்ஹுவல்லாஹு அஹத்" (சொல்: இறைவன் ஒருவனே) என்ற சூரா ஒன்றுதான் இறைவன் ஒருவனே என்பதற்கு அத்தாட்சியாக வந்து நின்றது.

இவ்விதம் வேலி பயிரை மேய்வதைப் போல, அறிவே சில சந்தர்ப்பங்களில் மனிதனை வழிதவறச் செய்வதனுல்தான் இக்பால் சொன்னுர்:

போராடும் அறிவின்
எமாற்றத்தை
இலகுவாய் உணரலாம்.
அது
பிரயாணிகளின் தலைவன்;
எனினும்
பிரயாணிகளை
வழிப்பறி செய்து விடுகிறது.

என்று. உண்மையான அன்பை உள்ளத்திலே கொண்டவனின் தன்மை எது என்பதற்கு இக்பால் ஓர் அதி அற்புதமான உதாரணந்தருகிறுர். கர்பலாக் களத்தில் வீரச் சமர் புரிந்து வீரமரண மெய்திய இமாம் ஹுஸைன் (ரலி) அன்பைக் கடைபிடித்து உயிர்விட்ட லக்ஷிய புருஷர் என்பது இக்பாலின் நம்பிக்கை. அதிகாரத்தை அபகரித்த மூர்க்கன் எசீது திருக்குர்ஆன் கட்டளைக்கு முரணுக நடந்தான். இஸ்லாத்தின் அடிப்படையையே அசைத்தான். அதர்மவானுன அவனிடம் படைபலம் அதிகம். பலநாடுகள் அவனுக்கு உதவி புரிந்தன. எனினும் அக்கொடியோனை இறைவன் திருமொழியைப் போற்றும் ஹஸரத் அவர்கள் எதிர்த்துப்

போராடத் துணிந்தார்கள். ஆனால் அவர்களிடம் இருந்ததோ எழுபத்திரண்டு தொண்டர்களே, எசீதின் வெள்ளம் போன்ற படையின் முன் இவ்வெழுபத்தி ரண்டு பேர் எம்மட்டு? எனினும் அவர்கள் போராடினார் கள். கொன்றுயிர் மாய்ந்தார்கள்; அவர்கள் புகழை உலகம் பாடுகிறது. ஏன்? தாங்கள் அழிந்து படுவோமே என்ற அறிவு அவர்களுக்கு இல்லாது போய்விட்டதா? எண்ணற்ற படையினரை எழுபத்திரண்டு பேர்களைக் கொண்டு எதிர்ப்பது மதியீனம் என்பான் அறிவுவாதி. ஆனால் அத்தகைய முறையில் பெருமானார் பேரர் நிலையை ஆராய்ந்தார்களில்லை. நியாயம் என்ற கொடியை நிலை நாட்டினார்கள். அப்போரில் அவர்கள் மாண்டு போனா லும் தான்தோன்றி ஆட்சிக்கு இஸ்லாத்தில் இடமில்லை என்றாக்கினார்கள். லக்ஷியத்துக்காகப் போராடுகையில் அறிவின் சக்தியை அடக்க வேண்டும் என்பதையும் இது காட்டுகிறது.

அன்பு,
நம் ரூதின் நெருப்பில்
தயங்காது குதித்தது.
அறிவோ
மாடியிலிருந்து
தயக்கத்தோடு
அதைப் பார்த்துக் கொண்டிருந்தது.

இவ்வரலாற்றினை விவரிக்கும் இக்பால் அன்பு, அறிவு என்ற இரு சக்திகளையும் ஒப்பிட்டுக் காட்டு கிறார் :

ஓரே இறைவனுக்கு அடிபணிவோர்
பிறவற்றை தொழுவதினின்றும்
விடுதலை யுறுகின்றனர்.
நன்றியும் அன்பும்

ஒன்றோடொன்று இழைபவை.
நாம் 'இயலாது' என்பதைச் சாதிப்பது அன்பு;
அறிவு கடூரமானது;........
அன்போ புனிதமானதும் பயமற்றதுமாகும்.
அறிவு வீண் வம்பில் மாட்டிக் கொள்கிறது;
செயல் முறையில் தலை தூக்கி நிற்கிறது.
அன்பு ஆயுதங்கொண்டு தன் இரையைத் தேடினால்
அறிவு தந்திரமாக அதற்கு வலை விரிக்கிறது.
அறிவின் சாரம் ஐயமும் அச்சமுமே;
அன்பின் சாரம் உறுதியும் நம்பிக்கையுமாம்
அறிவு அழிப்பதற்காக வளர்க்கிறது;
அன்பு வளர்ப்பதற்காக அழிக்கிறது.
அறிவு மலிவானது,
காற்றைப்போல் பொதுவானது.
ஆனால் அன்பு அருமையானது,
விலைமதிப்பற்றது.
அறிவு, 'ஏன்?' 'எப்படி?' என்று துளாவுகிறது.
அன்போ அவ்விதம் மயங்குவதில்லை.
அறிவு சொல்கிறது 'சுயமாக முன்னேறு'? என்று
'நீயே முயற்சி செய்!' என்கிறது அன்பு.
'உண்டு, களி!' என்கிறது அறிவு
'அடிமையானால் நீ விடுதலையுறுவாய்' என்கிறது அன்பு.
சுதந்திரமே அன்பின் இன்பம்;
அது அன்புக்கு ஒட்டகைப் பாகன்.

இவ்விதமாக அன்பின் பெருமையை அழகாக வெளியிடுகிறார் இக்பால். அவர் பாடல்களெங்கும் இக்கருத்துக்கள் மிளிர்கின்றன.

பிளேட்டோ என்ற தத்துவஞானி 'குடியரசு' என்றொரு நூல் எழுதினார். அதில் ஒரு நாட்டிற்கு அரசன் ஒருவன் இருக்கவேண்டுமென்றும், அவன் சர்வ வல்லமையும் திறமையும் படைத்தவனாக இருக்கவேண்டுமென்றும்,

அவனுக்கு உதவிசெய்யும் ஒருவனும் அவன் அருகில் இருக்கவேண்டும் என்றும் எழுதினர். இக்பால் விவரிக்கும் அன்பையும் அறிவையும் பற்றி குறிப்பிட வந்த அறிஞர் ஒருவர் பிளேட்டோவின் குடியரசை நினைவில் கொண்டு இவ்விதம் எழுதினர் :

"இக்பாலின் அன்பு என்பது பிளேட்டோ குறிப்பிடும் அரசன்; அவனே சர்வமும். அறிவு என்பது பிளேட்டோ குறிப்பிட்ட அரசனின் உதவியாளனுகும். அவன் வேலை அரசனுக்குக் கீழ்படிந்து அவன் சொன்னபடி கேட்பதே."

அன்பையும் அறிவையும் பற்றிய இக்பாலின் கருத்தைக் காட்டும் சிறிய கவிதை ஒன்றுண்டு. அன்பின் இருப்பிடம் உள்ளம்; அறிவின் உறைவிடம் சிந்தை (மூளை). உள்ளமும் சிந்தையும் ஒரு தடவை உரையாடல் நடத்தின. சிந்தை அறிவின் திறத்தை வானளாவ உயர்த்திப் பேசிற்று. உள்ளம் அதற்கு அமைதியாகப் பதில் தந்தது :

சிந்தை சொல்லிற்று .
வழி தவறியோர் கலங்கரை நான்,
ஜகத்திலே உழன்றாலும்
விண்ணுலகும் ஏகுவேன்.
பார், என் பெருமையை !
நான் மூடவன்,
எனினும் ஹிஸரைப்* போன்றவன்.
மக்கள் மயங்குகையிலே
எது நன்று என்று அறியாது தயங்குகையிலே
நான் நல்வழி காட்டுவேன்.
உலகம் என்ற உயரிய நூலை
விளக்கித் தந்து, வேற்றுமை யுணர்த்தி
இறைவன் பெருமை இலங்கச் செய்வேன்.
ஓர் துளி குருதி நீ,

நானே மதிப்பற்ற மாணிக்கம் !

உள்ளம் விளம்பிற்று:

உண்மை உரைத்தாய் நண்ப,
உலகின் இதயம் உணர்வாய் நீ
நானே அதனை நயனங்களால் காண்கிறேன்.
உலகின் அளவை உனக்குத் தெரியும்.
ஆத்மீகத்தின் அளவையோ என்கையிலே.
நான் வான் கல்வி தருவேன்.
இறைவன் உறைவிடம் நாடுவாய் நீ,
நான் அவன் இருப்பிடம்.
கல்வியில் அதிருப்தி யளிப்பாய் நீ
நான் அதில் திருப்தி தருவேன்.
உண்மையென்ற ஸதஸிலே
விளக் கொளியாய் விளங்குவாய் நீ
கவினுரு உலகுக்கு ஒளி நான்.
கால எல்லையும் இடவரம்பும் உனக்கே,
எனக்கு அவை யில்லை.
நான் உலகப் பறவை.
சொல், யார் உயர்ந்தவன்?

[*ஹிஸர் - [redacted] நபி. மக்கள் துன்பத்தில் இவர் வந்து உதவுவார் என்று நம்பப்படுகிறது.]

இவ்விதமாக அன்பையும் அறிவையும் ஒப்பு நோக்கி அன்புக்கு அரியாசனம் அளிக்கிறார் மகாகவி இக்பால். மக்கள் வாழ்வைக் குலைக்க உதவும் பைசாச அறிவு மக்கள் வாழ்வை உயர்த்த] வரும் தெய்வ அறிவாக வேண்டுமானால் அன்போடு அறிவு இழைந்து தானே போக வேண்டும் !

இயற்கையின் வெற்றி

இறைவன் மனிதனைப் படைத்தான். அவனுக்கு வேண்டும் இன்பங்களை அளித்தான். அவன் சுகமாக வாழ்வதற்கான வசதிகளைத் தந்தான். இரவி, திங்கள், மலை, கடல், நதி, பாதாளம், வனவர் முதலாய் எல்லாவற்றையும் மனிதனுக்காகவே ஆக்கினான். இன்பப் பூங்காவில் மனிதன் இலங்கும்படி செய்தான்.

ஆனால் ஒரே இன்பம் மனிதனுக்கு வெறுப்பையளித்தது. இன்பத்தோடு துன்பமும் கலந்தால் தான் வாழ்க்கை இனிமையுறும் என்று அவன் எண்ணினான். வெறும் இன்ப வாழ்க்கை, கவலை, துக்கம் அற்ற வாழ்க்கை சாரமற்றதாக அவனுக்குப் பட்டது. அதை மாற்றி கொள்ள மனிதன் உள்ளம் துடித்தது. காரணம் மனிதனுக்கு நல்ல பண்புகள் ஏற்படுவது கஷ்டத்தின் மூலந்தான். மனிதன் பண்பாடுள்ளவனாக, ஆகவேண்டுமானால் அவன் கஷ்டப்பட வேண்டும். அக்கஷ்டம் ஒன்று தான் கலாச்சாரத்துக்கு அடிப்படையாக இருக்க முடியும்.

இத்தகைய எண்ணங்களால் தடுமாறிக் கொண்டிருந்த மனிதனுக்கு உதவி புரிய ஷைத்தான் தோன்றினான். ஷைத்தான் மிகுந்த சுறுசுறுப்புள்ளவன்; காரியவாதி. தூங்கிக் கிடந்தவர்களைத் தட்டி எழுப்பிப் போராட்டக் குழியில் தள்ளினான். வாழ்க்கையில் ஓயாப் போராட்டத்தைப் புகுத்தினான்.

ஷைத்தான் இறைவனுக்குக் கீழ்ப்படிய மறுத்தவன். இறைவன் சிருஷ்டிகளுக்கெதிராகப் போர் தொடுக்கப் புறப்பட்டவன். அவன் முதல் மனிதனை வென்ற கதையை அல்லாமா இக்பால் 'இயற்கையின் வெற்றி' என்று குறிப்பிடுகிறார். பிரகிருதி மனிதனை வெற்றி கொண்டு விட்ட

தாம். பருவங்களில் மாறுதல் உண்டாவது போல மனிதன் நிலையிலும் மாறுதல் உண்டாகத் தொடங்கிற்றும். இன்பமும் துன்பமும்—அமைதியும் போரும்—பூசலும் அன்பும்—யாவும் கலந்து வந்தனவாம்.

முதல் மனிதனுன ஆதம் (அலை) ஷைத்தானின் தூண்டுதலுக்கு உள்ளானுர். அதை இக்பால் (Reconstruction of Religious thought in Islam) "இஸ்லாத்தில் மதக்கருத்தைப் புனர் நிர்மாணஞ் செய்தல்" என்ற நூலில் இவ்விதம் குறிப்பிடுகிறுர்: "தான்ருேன்றி உணர்ச்சியுள்ள ஆரம்ப நிலையிலிருந்து சுயமான சிந்தையும் ஐயமும் கீழ்படிய மறுக்கும் சுபாவமும் உள்ளவனுக மனிதனை உயர்த்துவதுதான் அதன் நோக்கம்". லக்ஷிய மற்றவாழ்க்கையை லக்ஷியமுள்ள, உழைப்புள்ள வாழ்க்கையாக்கிற்று ஷைத்தானின் தூண்டுதல். இக்கதையை வெகு அற்புதமான முறையில் தன்கவிதையொன்றில் வெளியிட்டுள்ளார் அவர்.

இறைவன் முதல் மனிதராகிய ஆதத்தைப் படைத்தான். மற்ற பொருள்களெல்லாம் அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று உத்திரவிட்டான். யாவும் ஆதத்துக்கு அடிபணிந்தன. ஆனுல் ஷைத்தான் அதற்கு இணங்கவில்லை. இறைவன் கட்டளையை எதிர்த்தான். அதனுல் நிராகரிப்பவன் ஆனுன்:

"மலாயிகத்துகளிடம் நாம் சொன்னேம்:
ஆதத்தின் முன் அடிபணியுங்கள் என்று.
அவர்கள் பணிந்தனர்.
ஆனுல்
இப்லீஸ் ஆணவங்கொண்டு மறுத்தான்;
காபிரானுன்" (திருக்குர்ஆன்)

தன்னைக் கீழ்ப்படியும்படி உத்திரவிட்ட இறைவனை நோக்கி அந்த இப்லீஸ் என்ற ஷைத்தான் கூறினுன்: '. என்னையா அடிபணியச் சொன்னுய்? நெருப்பிலிருந்து

உதித்த வானலோகத்தவனை, அழியா நிலைபெற்றவனை. என்றுமிருப்பவனை, கேவலம் மண்ணால் சிருஷ்டிக்கப் பட்ட மனிதனுக்கு, பூலோகத்தவனுக்கு, நீர்க் குமிழி போன்ற வாழ்க்கையுடையவனுக்கு அடிபணியச் சொன்ன காரணமென்ன? உன்னைப்போல் நானும் மனிதர்கள் பணிவதையே விரும்புகிறேன். வாழ்க்கைக்கு உயிரளிப் பவன் நான், அழியும் மனிதனுக்கு என்னை அடிபணியச் சொன்னது ஏன்?'' இவ்விதமாகப் பேசும் ஷைத்தான் மொழிகளை இக்பால் கூறும் முகத்தான் காணலாம்:

நான் ஒளியிலிருந்து உற்பவித்தவன்
ஆதத்தின் முன் அறிவற்று அடிபணியேன்.
அவன் மண்ணால் ஆனவன்
நானோ நெருப்பிலிருந்து உதித்தவன்.
என் உணர்ச்சியால்
சிருஷ்டிகள் என்ற ஜீவநாடிகளில்
ஓட்ட முண்டாகிறது.
காற்றின் கடுவேகமும்,
இடியின் முழக்கும்
என்னகத்தே உண்டு.
நீ அண்டத்தை ஆக்கினாய்,
நான் அதைச் சுழலச் செய்தேன்.
நான் உலகிலுள்ளோரின் உயிர்;
பலஹீன மானோரைப்
பணியச் செய்வதில்லை.
நான் நரக மின்றியே
பயங்கரம் விளைப்பவன்
தீர்ப்பளிக்கும் அவசியமற்ற நீதிபதி.
நீ உடலுக்கு உயிரளிக்கிறாய்;
நான் உயிருக்கு உணர்ச்சி தருகிறேன்,
நீ அமைதிக்கு வழிகாட்டுகிறாய்;
நான் போராட்டத்துக்கு வழிசொல்கிறேன்.

அறிவற்ற,
தீர்க்க திருஷ்டியற்ற
புழுதியில் புரளும் மனிதன்
உன் மடியில் பிறக்கிறான்;
என்னிடம் அறிவு பெறுகிறான்.

ஷைத்தானின் ஆணவம் இங்கே மிகத் தெளிவாக வெளியிடப்படுகிறது. அமரனான ஷைத்தான், மலக்குகளோடு மதிப்புப் பெற்றிருந்த இப்லீஸ் மனிதனுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறான். அதன் பயனாய் அவன் இறைவன் சன்னிதானம் விட்டும் விரட்டப்படுகிறான்.

இத்தண்டனை பெற்ற ஷைத்தான் ஆதத்தை ஆசையென்னும் வலையில் சிக்கவைக்கத் திட்டமிடுகிறான். ஆதத்தை அணுகி அவர் உள்ளத்தில் ஆசைக் கனலை மூட்ட முயல்கிறான். சுவர்க்கப் பூங்காவில் உண்டு களித்து உறங்கும் வாழ்க்கையை அவன் எள்ளி நகையாடுகிறான். உணர்ச்சியற்று உலவுவதில் உண்மையான இன்பம் இல்லை என்று கூறுகிறான். 'ஆதமே, நீர் உண்மையிலேயே வாழ்க்கையை அனுபவிக்க விரும்பினால் உம் உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்பும்" என்று ஷைத்தான் தூண்டுகிறான்.

நிரந்தர அமைதியைவிட
ஓயாப் போராட்டம் சிறந்தது.
நீர் அடிபணிவதைத்தான் அறிவீர்!
கோழை மனம் படைத்த மனிதரே,
நிமிர்ந்து நில்லும்,
ஐக்கியம் என்பது ஆசையின் முடிவென
அறியீரா நீர்!
நிரந்தர வாழ்க்கையின் மர்மம்
பூர்த்திபெறாத ஆசைதான்.

3634

இவ்விதமாகப் புத்திமதிகூறும் ஷைத்தானின் ஆசை வார்த்தைக்கு அடிமையாகிறார் ஆதம். சுவனக்காவை விட்டு

வெளியே வருகிருர். வாழ்க்கையின் உணர்ச்சிகள் அவர் உள்ளத்தைப் பிணிக்கின்றன. அவர் உள்ளத் தந்திகள் புது இசைகளைப் பொழிகின்றன. ஆசைகளைத் துளிர்க்கச் செய்கின்றன. பொருள்களின் மதிப்பு மாறுகிறது. மனதில் ஐயங்கள் எழுகின்றன. எதையும் சந்தேகிக்கும் இயல்பு உண்டாகிறது.

வாழக்கையைப்
போராட்ட முள்ளதாக்குவது
எவ்வளவு அற்புதமாக இருக்கிறது!
மலையையும் வனத்தையும்
பாலையையும் ஒரேமூச்சில்
உயிர்ப்பித்தல், ஆஹா, ஆனந்தம்!
என் மனம் திருப்தியற்று தத்தளிக்கிறது
நான் ஓயாது தேடியலையபவனை
ஐயம் கொண்டவனை
ஆகி விட்டேன்.

இவ்விதம் ஷைத்தானின் சூட்சியில் விழுந்த மனிதன் இன்ப வாரியில் திளைக்கிருன். திருப்தியற்று வேதனையுற்ற மனத்தினராக ஆதம் எல்லாப் பொருள்களிலும் புத்துணர்ச்சியைப் பார்க்கிருர்.

இறுதியில் ஆதம் இறைவன் முன்வந்து தன் பாவத்தை ஒப்புக்கொள்கிருர், தான் வழிதவறியதை உணர்வதாகவும் ஆனல் ஷைத்தான் ஊட்டிய ஆசை யென்னும் தூபமின்றி தான் முக்கியத்துவமடைந்திருக்க முடியாதென்றும் கூறுகிருர் :

ஷைத்தானின் ஆசை வார்த்தை
ஒழுங்கான பாதையை விட்டு
என்னை இழுத்துச் சென்றது.
என் பிழையைப் பொறுத்துப்
பாவ மன்னிப்பு அருள்.
உணர்ச்சியற்ற இம்மரக்கட்டையில்

ஆசைக்கனல் மூட்ட
நான் ஷைத்தானின் சீடனாகவும்
இருக்க வேண்டுவதாயிற்று.
மனிதனைச் சிறைப் படுத்த
அவன் அறிவை ஏவினேன்
எனினும்
நெருப்பில் பிறந்த ஷைத்தான்
மண்ணால் ஆய மனிதனுக்கு
மதிப்புத் தந்து விட்டான்

என்று ஆதம் ஷைத்தானுக்குப் பெருமை தரும் முறையில் தன் பாவத்தை ஒப்புக்கொள்கிறார். ஆனால் வாழ்க்கை ரசமுள்ளதாக இருக்க ஷைத்தானோடு போராடுவது அவசியம் என்பதையும் வெளியிடுகிறார்.

இக் கவியை எழுதிய அல்லாமா இக்பால் இதற்கு 'இயற்கையின் வெற்றி' (தஷ்கீரே பித்ரத்) என்று பெயர் கொடுத்தார். காரணம் இயற்கையைக் கண்டு மகிழ, அன்பைக் கைக்கொள்ள, அழகை ரசிக்க ஆதம் ஆரம்பித்தது, ஷைத்தானின் சேஷ்டைக்குப் பின்னாதான். உலகில் மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள உன்னதநிலை என்ன என்பதை இக்பால் தெளிவாக்குகிறார். அன்பின் துணைக்கொண்டு மனிதன் தன்னை வளர்க்க முடியும் என்றும் லௌகீக எண்ணத்தைக் கட்டுப்படுத்தினால் மனிதனிடம் மறைந்து கிடைக்கும் சக்திகளை வளர்க்க இயலுமென்றும் இக்பால் இக்கவிதையிலே தெளிவாக்குகிறார். இவ்விதம் தன் அகத்தின் சக்தியை பெருக்க முயலும் போது மனிதனுக்கு அடிபணிய மறுத்த ஷைத்தானும் கீழ்ப்படிவான் என்பதே இதன் தாத்பரியமாகும்.

இப்பாட்டில் ஷைத்தான் என்பது புலன், உணர்ச்சி, அறிவு ஆகியவற்றை குறிக்கிறது. உணர்ச்சியைக் கட்டுப்படுத்தினால்தான் மனிதன் தன் லக்ஷியத்தை அடைய முடியும். உணர்ச்சி வசப்படுவோன் கருதிய காரியத்தை

முடிக்க முடியாது தத்தளிப்பது இயற்கை. மேலும் ஷைத்தான் என்பது ஓயாப் போராட்டத்தையும் குறிப்ப தாகக் கொள்ளலாம். ஓயாது போராடுவதால் மறைந்து கிடக்கும் பல மர்மங்களை வெளிப்படுத்த முடியும். வாழ்க்கை என்பது வெறும் களியாட்டமாக, உண்டு களித்து உறங்கும் சாரமற்ற வாழ்க்கையாக இருத்தல் கூடாது. வாழ்க்கை நிரந்தரப் போராட்டமே. இதை உணராது போகத்தில் மூழ்கி உலகை மறந்து அயர்ந்திருப் பவர்களை இயற்கை பழிவாங்கிவிடும். முதல் மனிதன் இன்பம் நிறைந்த உலகிலே உலவினான். துன்பம் யாது என்று அறியாதவனாக இருந்தான். உண்பதும் உறங்கு வதும் வாழ்க்கையின் நியதி என்று எண்ணினான். இயற்கை ஷைத்தானைத் துணை கொண்டது. வாழ்க்கை களியாட்டமல்ல, போராட்டமே என்பதைக் காட்டிற்று; வெற்றியுற்றது.

இதைத்தான் அல்லாமா இக்பால் இப்பாட்டில் அற் புதமாக இடத்திற்கேற்ற சந்தங்களுடன் வெளியிட்டுள் ளார்.

வாழ்க்கை வழி

" சமயம் என்ற திறவுகோலைக் கொண்டு உலகம் என்ற வீட்டின் கதவைத் திறக்கவேண்டும்."

—இக்பால்.

இன்றைய உலகம் புதுமைகள் பலவற்றைக் கண்டு விட்டது. அறிவின் விரிவு உலகையே ஆக்கிரமித்து விட்டது. காணாத அதிசயங்களை யெல்லாம் மக்கள் கண்டு விட்டனர். மனிதனுடைய ஆராய்ச்சியின் தன்மையை இன்று மதிப்பிடுவதுகூடக் கடினம். இந்த முறையில் அறிவு வளர்கிறது.

ஆனால் இதற்கு இடையேயும் மக்கள் சுகமாக வாழ முடியவில்லை. துன்பமும், துயரும், பசியும், பிணியும் மக்களை வாட்டியே வருகின்றன. எத்தனை தூரம் அவனுடைய அறிவு வளர்ந்திருக்கிறதோ அத்தனை தூரம் அவனுடைய கஷ்டங்களும் பெருகி இருக்கின்றன. எத்தனை தூரம் மானிடனுடைய ஆராய்ச்சிகள் விரிவாகின்றனவோ அந்த அளவுக்கு பாதகச் செயல்களும் மிகுந்து கொண்டே போகின்றன. எந்த அளவுக்கு புதுமைகள் புறக்கணிக்கப்படுகின்றனவோ அதைவிடப் பேரளவில் கொடுமைகள் வளர்கின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இன்றைய அறிவு வளர்ச்சி மனித வாழ்க்கைக்குக் கொலைவாளாக அமைகிறது; லோகாயதம் மக்களை மாக்களாக்குகிறது; புதுமைகள் வாழும் வகையை மறைக்கும் திரையாகவே வந்து விடுகின்றன.

இந்த விதமான நிலைமை அறிஞர்களுக்குத் திருப்தி தரக் கூடியதல்ல; மானிட வர்க்கத்தின் நலனைக் கருதும்

பெரியார்கள் தம் காலத்திலேற்படும் இத்தகைய நிலைக ளில் அதிருப்திகொண்டு, உலகம் இன்னவிதத்தில் இருக்க வேண்டும், மக்கள் வாழ்க்கை இந்த முறையில் அமைய வேண்டும், கல்வி அபிவிருத்தி இந்த வழியில் செல்ல வேண்டும் என்ற தமது கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். ஆதிகாலந் தொட்டே சிந்தனைத் திறனையும், உலக நிலை யின் போக்கிலுள்ள தவற்றையும் நன்கு உணர்ந்த அறி ஞர்கள் இந்த மாதிரி தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளார்கள். ஆனால் இவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்கள் காரியசாத்திய முள்ளவையாக இருக்க மாட்டா. கலையம்சம் நிறைந்தனவாக விளங்கும் இத்த கைய கற்பனைகள் வாழ்க்கை வழிக்குப் பயனற்றவை யாகவே இருக்கும், பிளேட்டோ என்ற அறிஞனின் 'குடியரசு' என்ற கற்பனை உலகமும், தாமஸ் மோர் என்ற அறிஞரின் 'உடோபியா' என்ற லக்ஷிய உலகமும், கேம்ப னெல்லா, லீக்காக் போன்ற அறிஞர்களுடைய கற்பனை உலகங்களும் இந்த வகையைச் சேர்ந்தவைதான். இவர் கள் புதிய கற்பனைகளைத் தந்துள்ளனர் என்பது உண் மையே யெனினும் மக்கள் வாழ்வை மாற்றியமைக்கும் சக்தியற்றவை.

மகாகவி இக்பால் விஞ்ஞானத்தின் பயங்கரப் போக்கை உணர்ந்தவர். மக்களின் ஆன்மாவையே கொன்று வரும் பூத பௌதீக சாஸ்திரங்களின் தன்மையை அறிந்த வர். ஒரு பக்கம் லோகாயத அறிவு வளர்வதையும் விஞ் ஞானம் கெக்கலி கொட்டுவதையும், இன்னொரு பக்கம் மக்கள் வாழும் வகையறியாது தத்தளிப்பதையும் நேரில் கண்டார். ஒரு பக்கம் உலகிற்கு ஒளிதந்து நிற்கும் கதிர வன் ஒளியையும் கைது செய்யும் முயற்சி; மறு பக்கம் இருண்டு கிடக்கும் மானிடர் வாழ்க்கைக்கு வெளிச்சமில் லாத பயங்கரம். ஒரு பக்கம் மனிதனைக் கொல்லும் பயங் கரக் கருவிகளின் கோரநர்த்தனம்; மறுபக்கம் உயிருள்ள

மனிதன் அமைதியோடு, ஆறுதலோடு சாவதற்கும் வழி யற்ற நிலைமை. இதைக் கண்ட இக்பாலின் கவி ஹிருத யம் வெகுவாக வருந்திக் கண்ணீர்விட்டது. இத்தனை ராக்ஷச அறிவுபடைத்த மனிதன் தன் வாழ்வுக்கு வழி செய்யத் தெரியாதவனுக இருக்கிருனே, இதென்ன அனி யாம்! என்று இக்பால் வருந்திஞர். அவர் பாடிஞர்:

எது நன்று, எதுதீது
என்று பகுத்தறிய இயலா வண்ணம்
மனிதன்
தன் அறிவத்திறன் என்னும் வலையிலே
நன்ருகப் பின்னிக் கொண்டுவிட்டான்.
எத்தகைய மனிதன்?
சூரியனின் கதிர்களையும்
சிறைப் படுத்திய மனிதன்.
தன் வாழ்க்கை என்னும்
இருண்டு கிடக்கும் இரவுக்கு
ஒளி உண்டாக்க முடியாதிருக்கிருன்.

இத்தகைய நிலை மாற்றமுற வேண்டுமென்று இக்பால் பல இரவுகள் கண்ணீர் விட்டிருக்கிருர். இதற்கு ஒரு மாற்று இல்லையா என்று மனம் வெதும்பி இருக்கிருர். மக்கள் நிலை மாற்றமுற, துன்பமும் துயரமும் அற்ற இன்ப உலகம் உதிக்க மார்க்கமில்லையா என்று ஏங்கி இருக்கிருர்.

மனிதனுக்காக
எத்தனையோ இரவுகள்
நான் அழுதழுது ஏங்கினேன்.
அதன் பின்னரே
வாழ்க்கை மர்மங்களுக்கும்
எனக்கும் இடையே யுள்ள
திரையைக் கிழித்தெறிய இயன்றது

ஆமாம், 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மானிடரை நினைத்து விட்டால்' என்று இக்பால் கண்ணீர் வடித்தார். மக்களின் மடமை ஒழிய மார்க்கமில்லையா என்று வருந்தினார். உண்மை அவர் இதயத்தில் உதயமாயிற்று. மனிதன் அந்த உண்மையை உணர்ந்தானில்லை. அதற்கேற்ற தீர்க்கதிருஷ்டி அவனுக்கில்லை. அதனால் அவன் உண்மை அறிவற்றவனாகப் போனதோடு தன் சுயமரியாதையையும் அடகு வைத்தான். மனிதனுக்கு மனிதனே அடிபணியும் இழிகுணம் - கேவலம், மிருகத்தினிடங்கூடக் காணக்கூடாத இக்குணம் - அவனிடம் உண்டாகிவிட்டது என்று மனம் மாழ்கினார்.

தீர்க்க திருஷ்டி மழுங்கியதால்
மனிதன் மனிதனுக்கு
அடிமையானான்
அவனிடம் இரத்தினங்கள் இருந்தன.
அவற்றை
வல்லரசுகளிடம்
அடகு வைத்தான்.
ஆமாம்
அவன் நாய்ப் பிறவியைவிடக்
கீழான வனாகி விட்டான்.
ஒரு நாய்
இன்னொரு நாய்க்கு
அடிபணிவதை
நான் கண்டதில்லை.

ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு அடிபணிவது சகஜமாகி விட்டது என்ற கசப்பான உண்மையையும் தன் கவிதையிலே வெளியிட்டார்.

இத்தகைய மடமை நீங்கவேண்டுமானால், பூத அறிவைக் கட்டுப்படுத்தி பயனுள்ள துறையிலே செலுத்த வேண்டுமானால், மக்கள் துயர் நீங்க வேண்டுமானால் விஞ்

ஞான அறிவோடு ஆத்மார்த்த ஞானமும் கலக்கவேண்டும். அவ்விதம் இரண்டையும் கலந்தூட்டும் வாழ்க்கை முறை பிளேட்டோவினுடையதைப் போலும், மோரினுடையதைப் போலும் இல்லாது காரிய சாத்தியமுள்ளதாக இருக்குமானால் இப்பூவுலகு பொன்னுலகாகிவிடும் என்று இக்பால் உணர்ந்தார். அத்தகைய உலக அமைப்பு, அத்தகைய வாழ்க்கைவழி ஆயிரத்தி நானூறு' ஆண்டுகளுக்கு முன்னரேயே தரப்பட்டுவிட்டது. சுமார் ஐம்பதாண்டுக்காலம் நடத்திக் காட்டப்பட்டு விட்டது. மாக்களாய், முரடர்களாய், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற வாழ்க்கை நடத்துபவர்களாய் இருந்த கூட்டத்தாரை அறிவொளி கொளுத்துவோராக, உலகிற்குச் சிறந்த ஆட்சி முறையையும், நாகரீகத்தையும், கலாச்சாரத்தையும் வழங்குபவர்களாக, அன்பு ஊற்றுப் பெருக்கெடுத்தோடச் செய்பவர்களாக ஆக்கியது அந்த வாழ்க்கை வழி. ஆகவே புதிதாக ஒன்றை சிருஷ்டிக்கும் வேலையில்லை என்கிறார் இக்பால். நபிகள் (ஸல்) பெருமானாராலும் அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகியோராலும் நடத்திக் காட்டப்பட்ட அந்த வாழ்க்கை-வழி திரும்பவும் மலரவேண்டும்; அந்த வழியை மக்கள் பின்பற்றவேண்டும்; அதைக் கடைப்பிடித் தொழுகவேண்டும். உலகம் அற்புதமானதாக மாறிவிடும் என்கிறார் இக்பால்.

இறுதி நாளில்
இறைவன் வினவுவான்
"எம்மிடமிருந்து
நீ உண்மையை அறிந்தாய்
அதைப்
பிறரிடம் என் தெரிவிக்கவில்லை?" என்று.

அழகு

> "வசந்தம் மலர்களை வாரி யிறைத்துள்ளது
> அதற்கு அழகைக் கொடுப்பது
> நம் பார்வையே"

—இக்பால்

அழகு என்பது என்ன என்று எத்தனையோ பேர் விவரிக்க முயன்றிருக்கின்றனர். ஆனால் சாதாரணமாக ஒருவருக்கு அழகாகத் தோன்றுவது இன்னொருவருக்கு அழகாகத் தோன்றுவதில்லை. இதற்குக் காரணம் அழகு என்பது எந்த வஸ்துவின்மீதும் இல்லை; அது நமது கண்களில் தான் இருக்கிறது. அதாவது நம் பார்வையே ஒரு பொருளுக்கு அழகையோ விகாரத்தையோ தருகிறது. இதையுணர்ந்த அறிஞர் சாஅதி, "ஆவலோடு பார்க்கும் கண்களுக்கு அரக்கியும் அழகியாகத் தோன்றுவாள்; வெறுப்போடு நோக்கும் கண்களுக்கு அழகியும் குரூபியாகக் காணப்படுவாள்" என்று கூறினார்.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேணுமானால் அழகு நம் உள்ளத்திலேயே இருக்கிறது. நாம் விரும்பும் பொருள் அழகுள்ளது என்று சொல்லி விடுகிறோம்; வெறுப்பதை அழகற்றது என்கிறோம். ஒரு பொருள் அழகாகப் படுவதும் படாததும் ஒருவனுடைய மன நிலையைப் பெரிதும் பொருத்தது.

ஆனால் கவிஞர்கள் எல்லாப் பொருள்களிலும் அழகைக் காண்பவர்கள். காரணம் அவர்களுடைய உள்ளம் அத்தன்மையது. கவிஞர் தே.வி.யிடம் அழகு எங்கே இருக்கிறது என்று கேட்டால் அவர் அது உலகம் முழுவதும் இருப்பதாகக் கூற கேட்கலாம். தம் முன்னால் செல்கின்ற வண்டியைக் காட்டி,

வண்டி ஓர் அற்புதப்பொருள்
வண்டிமாடும் அற்புதப் பொருள்

என்று அவர் கூறுவார்.

இதேபோல் இக்பாலிடஞ் சென்று அழகு எங்கே இருக்கிறதென்று கேட்பதற்கு அவர் இவ்விதம் பதில் தருகிறார்:

பிரகிருதி முழுவதிலுமே
ஆழங்காண முடியா அழகு பரிணமிக்கிறது,
நமக்கு உற்று நோக்கும் கண்களிருந்தால்
ஒவ்வொரு துளியிலும்
கொள்ளை அழகைக் காண்போம்.

ஆமாம், கவிஞரைப்போல் பக்குவப்பட்ட மனத்தோடு உலகை நோக்கினால் உலகப் பொருள்கள் யாவற்றிலும் அழகைக் காண்போம்; அற்புதத்தைப் பார்ப்போம்.

எங்கும் அழகிருக்கிறது என்று பொதுப்படையாகச் சொல்வதோடு இக்பால் நிற்கவில்லை. "குறிப்பிட்டுச் சொல்லச் சொல்கிறாயா? இதோ எடுத்த எடுப்பில் கண்ணில் படுகிறபொருள்களில் அது தென்படவில்லையா?

மலைகளின் பயங்கர நிசப்தத்திலும்
பகலவன் ஒளியிலும், கங்குலின் இருளிலும்
காலையின் தகத்தகாயத்திலும்
உளம் திறந்த மலர்களிலும்,
முல்லை நகையாளின் இன்முகத்திலும்,
சிதைந்த சிற்பங்களிலும்.
மதலையர் மழலையிலும்.
பறவையின் கீதத்திலும்
அழகு மிளிர்கிறது"

என்று அவர் விவரிக்கிறார்.

சாதாரண மனிதன், அதுவரை எத்தனையோ தடவை பகலவனையும் கங்குலையும், மலையையும், மதலைய

ரையும், மலரையும், பறவையையும் கண்டிருந்தாலும், கவிஞர் வருணித்த பின்னர் அவற்றில் அதிக அழகைக் காண்கிருன். இதுவரை அவற்றுக்கில்லாத அழகு இப்போது எப்படி வந்தது என்று ஆச்சரியப்படுகிருன். கவிஞனுடைய மந்திரக்கோல்தான் அவற்றுக்கு அதிக அழகைக் கொடுத்து விட்டது என்பதை ரஸிகர்கள் உணர முடியும். அழகுள்ள பொருளைப் பிறர் கண்களில் இன்னும் அதிக அழகுள்ளதாகக் காட்டும் கவிஞனின் ரசவாத வித்தையை இக்பால் இவ்விதம் வெளியிடுகிருர்;

கவிஞனின் இதயத்தில்
அழகு சிறை விரிக்கிறது.
அவனுடைய உள்ளத்தின்
மலைச் சிகரத்திலிருந்து
அழகாகிய பகலவன்
ஒளிக் கதிர்கள் பரப்புகிருன்.
அவன் பார்வை
எழிலை அதிக எழிலுள்ளதாக்குகிறது;
அவன் மந்திர சக்தியால்
இயற்கை அதிகம் விரும்பத்தக்கதாகிறது.

இவ்விதம் அழகை அதிக அழகுள்ளதாக்கி யாவரும் அதை விரும்பும்படி செய்யக்கூடியவன் கலைஞன் தான். கலைஞனுடைய திறமையால் துரும்பும் அழகு பெற்றுவிடுகிறது. இத்தகைய சக்தி இக்பாலிடம் இருந்தது என்பதற்கு ஐயமுண்டா?

கீதமும் போதையும் 3634

கவிஞர்கள் குழந்தைகளைப் போன்றவர்கள். பார்க்கும் வஸ்துக்களிலெல்லாம் புதுமையைக் காண்பவர்கள். மனதுக்கு உகந்த ஒன்றை கண்டால். குழந்தையின் உள்ளத்தைப் போல, கவிஞன் உள்ளமும் துள்ளும்.

பறவைகளைக் கண்டால் குழந்தைகளுக்குக் கொண்டாட்டந்தான். காக்கையைக் காணும் சின்னஞ் சிறிய பாப்பா குதூகலத்தோடு அதைப் பார்க்கிறது. அத்துடன் விளையாட எண்ணுகிறது. கோழியைக் கண்டால் குழந்தைக்கு ஒரே இன்பமாக இருக்கிறது. இதுபோலவே கவிஞர்களுக்கும் பறவைகளைக் கண்டால் ஆனந்தம் உண்டாகி விடுகிறது. நாம் யார், பறவை யார் என்ற பேத உணர்ச்சி உண்டாவதில்லை. பறவையும் தானும் ஒரே குலத்தவர்கள் என்ற அளவுக்குக்கூட உறவு சென்று விடுகிறது. குருவிக்கு அரிசியை அள்ளி இறைத்த பாரதியாரும்,

> 'காக்கை குருவி எங்கள் கூட்டம்'

என்று பாட ஆரம்பித்துவிடுகிறார்.

> வன்னப் பறவைகளைக் கண்டு
> மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா

என்று குழந்தைகளுக்குப் போதிக்கிறார்,

பறவைகளிடம் உறவு கொண்டாடும் இந்த மனப் மனப்பான்மை கவிஞர்களிடம் இயற்கையாகக் காணக் கிடப்பது. குழந்தை பறவையும் தன்னைப் போன்றது, வீட்டிலுள்ள பூனையும் நாயும் தன்னைப்போன்றவை என்று நினைத்து மகிழ்வதுபோல, கவிஞனும் மகிழ்ச்சியுறுகிறான்.

பாரதியாரைப் போல இக்பாலும் இன்ப உணர்ச்சியை வெளியிடுகிறார்;

> பூந்தோட்டத்திலுள்ள பறவை
> என்னிடம்
> நட்புரிமை பாராட்டுகிறது;
> என்மடியில் வந்தமர்கிறது.
> காரணம் நான்
> அதன் கீதத்தைப் புரிந்து கொள்கிறேன்.

கவிஞர் உலகில் மனிதனுடைய பாஷையும் கவிஞருடைய பாஷையும் ஒன்றாகி விடுகின்றன-குழந்தை யுலகில் இருப்பதைப்போல. அவ்வுலகில் பறவை இதயத்தோடு கவிஞர் இதயமும் ஒன்றி அதன் உள்ளத்துள்ள உணர்ச்சியைக் கிரஹித்து விடுகிறது. பறவை மகிழ்ச்சியோடு பாடும்போது அந்தக்கீதம் கவிஞரை மயக்கியே விடுகிறது; கள்ளைப்போல வெறி கொள்ளும்படி செய்கிறது.

அதிக வெறி தருவது காலைக் கள் தான். அந்தக் கள்ளைப்போலவே குளிர்ந்த காலை நேரத்தில் கீதமும் கவிஞரை மயக்குகிறது. இக்பால் சொல்கிறார்:

> ஹே சாகிஇ,
> அக்கவின் பெறு காலையிலே,
> புட்களின் கீதம்
> என்னைப்
> பரவசத்துள் ஆழ்த்துகிறது.
> அதனால் நான்
> மதுவருந்திய வெறிகொள்கிறேன்.

பறவையின் இன்னிசை இக்பாலுக்கு மதுவின் போதையைத் தருகிறது. அதுவும் காலைப் போதில் மதுவின் போதை என்பது உக்கிரமானதாக இருக்கும். ஒரு ரசிகனுக்கு காதலே மதுவைப்போல் தலையைச் சுற்று

சிறது. ‘உந்தன் காதல் இறுக்குதடி தலையை—நல்ல மொந்தைப் பழைய கள்ளைப்போல’ என்று அவன் கூறினான். பக்தர்களுக்கு பக்தியே மதுவின் வெறியைத் தந்து மயக்கமூட்டுகிறது.

பாரதியைப்போன்ற ஒரு கவிஞருக்கு இயற்கை இன்பம் வெறியூட்டுகிறது. நிலாவும், வானமும், விண்மீன்களும். காற்றும் கலந்ததனால் உண்டான இன்பவெறி கள்ளின் வெறியைவிட வேகமுள்ளதாக இருக்கிறது. அந்த வெறியைக் கவிஞர் கோகுல வெறி என்றார். இதன் பயனாய் அவர் ஒரு பறவையை எங்கும் ஓட்டி மகிழ்கிறார். அதுதான் அவர் மனப்பறவை. பாரதி பாடுகிறார் :

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோகுல வெறி படைத்தோம்.
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்.

இவ்விதம் தன் சிறிய மனப் பறவையைத் தட்டிவிட்டு உலகைக் காணபதில் இக்கவிஞருக்கு இன்பம்.

இக்பாலையும் பாரதியையும் போல் பறவைகளைக் காணும்போது கள்ளின் வெறியைப் பற்றி எண்ணும் ஆங்கிலக் கவிஞர் ஒருவர் உண்டு. அவர்தான் இளங்கவி கீட்ஸ். தன் இளம் பிராயத்திலேயே உயிர் துறந்தவர் இவர். ஒரு நாள் இவர் தன் துன்பம் கொப்பளிக்கும் உள்ளத்தோடு பூங்காவில் நுழைகிறார்.

நஞ்சுண்டவரைப்போல் துடிதுடித்துக்கொண்டு வரும் கவிஞருடைய கவனத்தை ‘நைட்டிங்கேல்’ என்ற பறவையின் இனிய கானம் ஈர்க்கிறது. தமிழ்க் கவிஞர்களுக்கு குயில் எப்படியோ, உர்தூ, பாரசீகக் கவிஞர்களுக்கு புல்புல் எப்படியோ, அதுபோலவே ஆங்கிலக் கவிஞர்களுக்கு நைட்டிங்கேல் விளங்குகிறது. ஆனால் இது

இரவிலே பாடுகின்ற பறவை. இதனுடைய கீதம் கவிஞனுடைய புண்பட்ட இதயத்துக்குச் சஞ்சீவி போல விளங்குகிறது. தேகமெல்லாம் காந்தலெடுப்பவனுக்குத் தென்றல் தரும் சுகத்தை நைட்டிங்கேலின் கீதம் கீட்ஸுக்குத் தருகிறது. அத்துடன் நிற்கவில்லை. கவிஞனுடைய இதயத்தில் இன்ப உணர்ச்சியையும் அது எழுப்புகிறது. 'ஆசை தருங்கோடி அதிசயங்கள் கண்டதிலே ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா' என்பதுபோல பறவையின் கீத ஓசை கவிஞனின் மனத் தந்தியில் நாதம் எழுப்புகிறது; துன்பமும் துயரமும் நிறைந்த இவ்வுலகைவிட்டு இப்பறவையோடு பறந்து திரிந்தாலென்ன என்ற உணர்ச்சியை உண்டு பண்ணுகிறது.

'உன்னைப் போலொரு புள்ளாய் நானும் உலவிட வேணும்' என்ற ஒரு கவிஞன் ஆசை கீட்ஸுக்கு எழவில்லை. கீட்ஸ் இன்னொரு வாகனத்தின் துணையை நாடினார். அவருடைய அளவிடமுடியாத் துயரத்தால் பறவையோடு பறந்து திரிய மதுத்தேவன் ஒருவனே துணைச் செய்வான் என்று நம்பினார்.

மதுத் தேவனின் முதுகிலேறி, பறவையோடு தானும் இன்பமாகச் சுற்றலாம் என்றெண்ணினார். சாதாரண மது அதற்குப் போதிய போதையைத் தராதாம். மண்ணினுள் நெடுநாள் புதைத்து வைக்கப்பட்டு நன்கு புளிப்பேறிய மது வேண்டுமாம். இதோ கீட்ஸ் பறவையைப் பார்த்துப் பேசுகிறார்:

மண்ணினுள் இருந்து புளிப்பேறிய
வசந்த மது ஒரு கிண்ணம் வேணும்.
அதிலே இன்ப ருசி தோணவேணும்.
அந்த இரத்தநிற மது
கிண்ணத்தில் வெது வெதுப்போடு
குமிழிகள் கொப்பளிக்கும் போது

அதை
நான் அருந்தி
இப்புன்னுலகை மறந்து
உன்னோடு பறந்திட வேணும்.

பறவையோடு தன் 'மனச்சிறு புள்ளினை' ஏவிவிடக் கவிஞர் கீட்ஸுக்கு மதுவின் உதவிதேவையாகிறது. பாரதியாருக்கு மனப்புள் வேலைசெய்ய நிலாவும் வானத்து மீனும், காற்றும் போதும். இக்பாலுக்கு பறவையின் கீதமே மதுவாக அமைந்து விடுகிறது. காதலே காதல னுக்கு மதுவின் வெறியை ஊட்டுவதுபோல, பக்தியே பக்தனுக்கு வெறியூட்டுவதுபோல, இக்பாலுக்குப் பறவை யின் இன்னிசையே போதையைத் தந்து விடுகிறது. இதற்கு — மதுவின்றியே, பறவையின் கீதத்தால் மட்டுமே மதுவின்மயக்கத்தைப் பெறுவதற்கு — அவ ருடைய இதயம் எத்தகைய உணர்ச்சி பொருந்தியதாக இருந்திருக்கிறது என்பதைச் சிந்திக்கவேண்டும். போதை பெற குருதி நிற மதுவை விரும்பும் கீட்ஸையும், பறவை யின் கானத்தால் மதுவின் போதையைப் பெறும் இக் பாலையும் சற்று மனக்கண் முன் நிறுத்தி ஒப்பிட்டுப் பார்த்தால் வேற்றுமை விளங்கும்.

மலர்கள்

கவிஞன் ஹிருதயம் மிருதுவானது; மனிதனது துயரத்தை மட்டுமல்ல, ஜடப்பொருள்களின் துயரையும் தன் துயராகக் கருதுவது. மலர்கள் பூத்துக் குலுங்கும் செடிகளைக் கண்டால் கவிஞனது மனமும் துள்ளும்; காற்றிலசையும் கிளைகளும், இன்னிசை எழுப்பி ஓடும் நீரோடையும் கலகலவென மழலை மொழி பேசித்திரியும் மைனாவும் கவிஞனது உணர்ச்சியைத் தூண்டி விடுகின்றன.

இயற்கையோடு ஒன்றி ஈடுபடுகின்ற சக்தி படைத்த கவிஞர்கள் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களுடைய மனநிலை எப்படி இருந்தது என்பதற்கு ஓர் உதாரணந் தரலாம்.

ஓர் அறிஞர் தனது தோட்டத்திலே பூஞ்செடிகள் வளர்த்து வந்தார்: ஒருநாள் அவர் தன் நண்பர் ஒருவரோடு அந்தத் தோட்டத்தினுள்ளே நுழைந்தார். அங்கே செடிகளில் மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. அவ்வண்ண மலர்களைப் பார்த்து மகிழ்ச்சி கூத்தாடும் வதனத்தினராக நின்று கொண்டிருந்தார் அறிஞர். அப்போது அவரோடு நின்ற நண்பர் கேட்டார்: "உங்களுக்கு மலர் என்றால் பிரியந் தானே?" என்று. "மலர் என்றால் எனக்கு உயிர்" என்றார் அறிஞர். "அப்படியானால் நீங்கள் இப்பூந் தோட்டத்தில் மலர்கின்ற பூங்கொத்துகளைக் கொய்து உங்கள் மேஜை மீது ஏன் வைக்கக் கூடாது?" என்று நண்பர் வினவினார்.

அறிஞருக்குக் கோபம் வந்துவிட்டது. "உங்கள் குழந்தையின்மீது உங்களுக்கு அன்பு இருக்கிறதென்பதற்

காக அதன் தலையைக் கொய்து உங்கள் மேஜைமீது வைத்துக் கொள்வீர்களா?'' என்று பதில் கேள்வி போட்டார். அவர் நண்பர் வெட்கிப் போனார்.

அந்த அறிஞரின் அன்பு தெய்வீகமானது. கவி ஹிருதயம் படைத்தவர்கள் இவ்வித மனப்பான்மையுள்ளவர்களாக இருப்பது இயற்கை,

இக்பாலும் இயற்கையிடம் ஈடுபாடு கொண்டவர். அவர் புதிய கண்கொண்டு இயற்கையை நோக்குபவர். வசந்த காலத்தில் மலர் மரங்களில் பூக்கள் வண்ண நிறந் தந்து நிற்கின்றன. மரங்களின் அடியிலே பளிங்கு போன்ற நீர் ஓடும் ஓடை. மலர் மரத்தைக் கவிஞர் பார்க்கிறார். கீழே ஸ்படிக நீரில் அம்மரங்களின் கிளைகள்- ஓடையின் மேலே தொங்கிக் கொண்டிருக்கின்ற கிளைகள்- பிரதிபலிப்பதையும் பார்க்கிறார். கவிஞர் இக்பாலின் கற்பனை யுணர்ச்சியை, மலர் மரமும், நீரோடையில் தெரியும் அதன் பிரதி பிம்பமும் தூண்டிவிடுகின்றன. வண்ணப் புடவை யுடுத்திய அழகிய வனிதை யொருத்தி கண்ணாடியினுள்ளே தன் கவின் உருவை உற்று நோக்குகிறாள். அதுபோல இருக்கிறது வண்ண மலர்கள் தொங்கும் மரக்கிளை நீரோடையில் பிரதிபலிப்பது.

> அழகி கண்ணாடியில் தன்னைப் பார்ப்பதுபோல,
> மலர்கள் குலுங்கும் மரக்கிளைகள்
> ஓடையின் மேலே தொங்கிக்கொண்டிருந்தன.

அதுமட்டுமல்ல. அம்மரக்கிளைகளிலிருந்து வண்ண மலர்கள் உதிர்ந்துகொண்டும் இருந்தன. குழந்தை யொன்று தான் அன்பாகப் போற்றி அணைத்துக் கொள்ளும் பொம்மையை விடாப்பிடியாகத் தன் நெஞ்சோடு சேர்த்தபடி தூங்குகிறது. அது அயர்ந்து நித்திரை செய்யத் தொடங்கியதும் அந்தப் பொம்மை நழுவிக் கீழே விழுந்து விடுகிறது. மலர்கள் மரத்திலிருந்து உதிர்வது

இக்பாலுக்கு இக்காட்சியை நினைவு மூட்டுகிறது. அவர் சொல்கிறார்,

தூங்கும் குழந்தையின் கரத்திலிருந்து
நழுவி விழும் பொம்மைகளைப்போல
வண்ண மலர்கள் உதிர்ந்தன.

இவ்விதமான கற்பனைகளை எழுப்பும் மலர் வனங்களைக் கண்டால் இக்பாலுக்கு ஒரே கொண்டாட்டந் தான். தானும் அங்குள்ள மலர்களுள் ஒருவன் என்ற உணர்ச்சி உண்டாகவேண்டுமாம். அப்போதுதான் மலர்களில் நவநவமான காட்சிகள் தோன்றுமாம். இக்பால் சொல்கிறார்.

அன்னியனுடைய கண்களோடு
நந்தவனத்தை நோக்காதே!
அது பார்க்கத் தகுந்தது.
மீண்டும் மீண்டும் அதைப்பார்!

"நந்தவனத்திலுள்ள மலர்களைப்பார்; அம்மலர்களைக்கண்டு உளங்குளிர்ந்து பாடும் பறவைகளையும் பார்! பறவை தானும் அந்நந்தவனத்தின் ஓர் அம்சம்-மலர்களைப்போல்-என்று எண்ணிக்கொள்கிறது. அதைப் பின்பற்றி நீயும் அந்நந்தவனத்தின் ஓர் அம்சமாகிவிடு. அங்குள்ள மலர்களோடும் பறவைகளோடும் ஒன்றியவனாக வாழப்பழகிக்கொள்,

மலர்களுக் கிடையே வாழ்!
கீதமிசைக்கும் புட்களிடமிருந்து
சோகக் குரலைக் கற்றுக்கொள்"

என்று உபதேசமும் செய்கிறார்.

உனக்கு ஆண்டவன் கண்களை அருளி இருப்பது எதற்காக? அவன் படைப்பின் பெருமையைக்கண்டு அவனைப் போற்றுவதற்காகத் தானே! "வா, இயற்கையோடு கூடி மகிழலாம். அடைந்து கிடக்கும் அறையைவிட்டு வெளியேவா! உன் கண்ணொளியைக்கொண்டு புதிய

தோர் காட்சியை நீ சிருஷ்டி செய்! சும்மா சோம்பிக் கிடக்கவேண்டாம். இயற்கையின் இனிய காட்சிகளைக் கண்டு அவற்றில் உன் உள்ளத்தை ஈடுபடுத்து'' என்று வேண்டும் இக்பால் இதோ பேசுகிறார்:

வா,
இயற்கை யெனுங் காதலியின்
கண்ணோடு கண்இணை நோக்கவா!
என் தனிமை எனும் மூலையிலே
சாம்பிக் கிடக்கிறாய்?
இறைவன் உனக்கு
பரிசுத்த நயனங்களை
அருளியுள்ளான்.
அதன் ஒளியைக் கொண்டு
புதியதோர் காட்சியை
சிருஷ்டி செய்ய வா!

இத்தனை உருக்கமாகப் பிறரை அவர் அழைப்பதற்குக் காரணம் இயற்கையிடம் அவருக்குள்ள பற்றுதல் தான். இயற்கையில் தானும் ஓர் அம்சமாக ஒன்றிவிட்டதாக உணரும் இக்பால் நந்தவனத்திலுள்ள பறவைகள் கூடத் தன்னிடம் நட்புரிமை பாராட்டித் தன்மடியில் வந்திருந்து விளையாடுகின்றன என்று கூறுகிறார்.

பறவைகள் குதூகலிப்பதற்குக் காரணம் மலர்கள் விரிந்து தம் உள்ளத்தைக் காட்டுவதுதானாம். அப்பறவைகள் வாயற்ற மலர்களின் மகிழ்ச்சியைத்தான் தம் கீதத்தின் மூலம் வெளியிடுகின்றனவாம். இதே வேலையையே கவிஞரும் செய்கிறாராம். இக்பால் சொல்கிறார்,

நானும்
மலர்வனப் பறவையும்
ஒரே கதையைத்தான் கூறுகிறோம்,
நானும் வாயற்ற மலர்களின்
குரலாகத்தான் விளங்குகிறேன்;

நான் மரித்து,
என் உடல் மண்ணானதும்
அந்த மண்ணை
மந்த மாருதத்தோடு கலந்து விடுங்கள்!
மலர்களைச் சுற்றி வருவதைத் தவிர
வேறு எனக்கு வேலை எது மில்லை.

தான் உயிரோடிருக்கும்போது மலர்களைச் சுற்றி வருவதைப்போல, இறந்த பின்னரும், தன் உடல் மண்ணாகப் போன பின்னரும் அவற்றை சுற்றிவரவேண்டுமாம். மலர்களிடம் அவர் கொண்டுள்ள அன்பின் அளவை இதன் மூலம் ஓரளவு அறியலாம்.

மலர்களைச் செடியோடு இருக்கும்படி விட்டுவைத்து அதன் அழகை ரசிப்பதில் இக்பால், நாம் முதலில் குறிப்பிட்ட அறிஞரைப் போன்ற மனம் படைத்தவர். மலரைக் கொய்யாமல் இருப்பதோடு அம்மலர்களும் தான் அவற்றின் நண்பன் என்று உணரும்படி செய்ய வேண்டுமாம். அம்மலர்களின் இதயத்தையும் அறிந்தவர் என்ற முறையிலே, மானிடரெல்லாம் மலர்ச் செடியை நெருங்கியதும் தங்களைக் கொய்யத்தான் இவன் வந்துள்ளான் என்று மலர்கள் எண்ணும் என்கிறார் அவர். ஆகவே தான் நந்தவனத்தில் நுழையும்போதே தம் எதிரி யாரோ வருவதாக நினைக்கவேண்டாம் என்று மலர்களுக்குத் தைரிய மூட்டுகிறார். வருபவன் மலர்களைக் கொய்யும் கொடியோனல்ல; ரசிகன்; கவிஞன்; மலர்களின் நண்பன்; வாயற்ற மலர்களின் வாயாக விளங்குபவன் என்று விளக்குகிறார். 'ஹே பூங்கொத்தே, உன்னைக் கொய்வது என் பழக்கமல்ல, நீ சற்றும் அஞ்சவேண்டாம்!'' என்று அன்பாகக் கூறுகிறார். ஆனாலும் மலர்கள் என்னவோ யாரோ தம்மைப் பறிப்பவன்தான் தம் முன்வந்து நிற்பதாக எண்ணுவதுபோல் கவிஞர் நினைக்கிறார். உடனே தம் உள்ளக் கிளர்ச்சியை இவ்விதம் வெளியிடுகிறார் :—

அந்தோ,
நான் மலர் பறிப்பவனல்ல என்பதை
எங்ஙனம் நீங்கள்
அறியும்படி செய்வேன்!
ஹே மலர்களே,
இக்கரம்
அத்துணை கொடியதல்ல;
வானம் பாடியின் கண்கொண்டு
நான் உங்களை நோக்குகிறேன்.

என்று அவர் கூறுகிற முறையில் தான் என்ன உருக்கம்! எத்தகைய அனுதாபம்! கவி ஹிருதயம் எத்தகைய வைரம் படைத்ததெனினும், உறுதிவாய்ந்ததெனினும் அதில் அளவிட முடியா இரக்கத்துக்கு இடமுண்டு என்பதை இதில் காண்கிறோமல்லவா? இதுமட்டுமல்ல மலர்களைக் காற்று அசைப்பது கூட அவருக்கு வருத்தத்தைத் தருகிறது. காற்றினால் மலர்கள் ஆடுவது அவற்றுக்கு வருத்தந் தருமே என்றெண்ணும் கவிஞர் மனம் வருந்துகிறது. மலர்களிலுள்ள ஓர் இதழ் அசைந்தால் கூட அவருக்கு மனம் பொறுக்கவில்லை. அவர் சொல்கிறார்:

ஒரு மலர்இதழையாவது
தென்றல் அசைத்தால்
அதற்கு ஏற்படும் அதிர்சி
என் உள்ளத்திலே
எதிரொலித்துக்
கண்ணீர்த் துளியாக
வெளிப் படுகிறது.

இவ்விதம் மலர்களோடு அனுதாபங் காட்டுவதோடு மட்டும் இக்பால் அமைந்தாரில்லை. இவ்வுலகிலே துன்பமும் துயரமும் எத்தனையோ அவருக்குண்டு. அவற்றையெல்லாம் வாய்விட்டு வெளியே சொல்ல அவரால் இயல

வில்லை. தன்னைப்போல் சுக துக்கங்களைப் பாவிக்கின்றன என்று அவர் கருதும் மலர்களிடையேயும் இது-தன் வாழ்க்கை நிலை-பிரதிபலிப்பதாக அவர் காண்கிறார், தன் கஷ்டங்களைப் போல் மலர்களுக்கும் துயரங்கள் பல என்கிறார் அவர். மலர்களின் நாவாகிய இதழ்களுக்கு இறைவன் பேசும் சக்தியை மட்டும் தந்திருந்தால் அவை தம் சோகக் கதைகளைச் சொல்லி இருக்குமாம். தனது உள்ளத்தை ஒத்தவை மலர்கள் என்று எண்ணும் இக்பால் கூறுகிறார் :

இவ்வழகிய மலர்
என்னைப் போலவே
கஷ்டப் படுகிறது.
சமூதாயத்தின் இந்திர ஜாலத்தில்
அதுவும் சிறைப்பட்டே கிடக்கிறது,
அதன் இதழ்களின் நாவுக்கு
இறைவன் பேசும் சக்தியைத்
தந்தானில்லை.
அவ்விதம் தந்திருந்தால்
அதன் உடைந்த இதயத்தின்
குரலை எழுப்பி யிருக்கும்.

இதைப் பார்க்கும்போது அவர் இங்கே வருணிப்பது சாதாரண மலரின் துன்பத்தையா அல்லது இவ்வுலகின் போக்கோடு ஒத்துச் செல்ல இயலாது துன்புறும் அவர் இதய மலரின் துன்பத்தையா என்பது சிந்திக்க வேண்டுவதாகிறது.

இக்பாலுக்குப் பொதுவாக இயற்கையிடம் உள்ள பற்றுதலையும், இயற்கைப் பொருள்களிடம் உள்ள ஈடுபாட்டையும் அவர் மலர்வனத்திடமும், மலர்களிடமும் கொண்டுள்ள அன்பிலிருந்து ஓரளவு அறிந்து கொள்ளலாம்; கவிஞர் இக்பால் இயற்கையை வெறும் வருண

னைத் திறனைக் காட்டுவதற்கு ஏற்ற துணைக்கருவியாக மட்டும் கொண்டாரில்லை ; அவருக்கு இயற்கைக் காட்சிகள் வெறும் இன்ப உணர்ச்சியைத் தூண்டி விடுவனவாக மட்டும் விளங்க வில்லை. இயற்கையிலே இக்பால் மனிதனுடைய இன்பமும் துன்பமும் பிரதி பலிக்கக் காண்கிறார். மக்களிடம் எத்துணை அன்புகொள்ளவேணும் என்பதை அவர் மலர்களிடம் அன்புகொள்கின்ற முறையில் பாடுகிறார். ஆகவே அவருக்கு இயற்கையிடம் உள்ள ஈடுபாடு வெறும் சோம்பேரிக்கவிஞன், தன் துக்கங்களை மறக்க முயல்கின்ற ஒருவன் கொள்கின்ற ஈடுபாடல்ல; உலகை உணர்ந்த ஒரு கவிஞனுடைய பற்றுதல் இது. இது உண்மையா என்பதை அறிவதற்கு இக்பாலுடைய மற்ற கவிதைகளையும் கற்க வேண்டுவது அவசியம்.

ஓடை போதிக்கும் பாடம்

மனிதன் மதுவிலும் மங்கையிலும் மயங்கியவனாக வாழக் கூடாது என்று பலருங் கூறுகின்றனர். ஆனால் மனிதன் துன்பமற்றவனாக, சுகம் அனுபவிப்பவனாக வாழவேண்டும் என்று அவர்கள் விரும்பவுஞ் செய்கின்றனர்.

மனிதன் பொறுப்புகளைத் தள்ளியவனாக வாழலாமா? தன் கவலைகளைத் தீர்க்க அது அவசியமென்னில் அவன் அப்படிச் செய்வதில் தவறென்ன? அதுதான் லக்ஷிய வாழ்க்கை என்று கூடப் பலர் கூறுகின்றனர்.

கவிஞர்கள் சிலரும் இப்படி எண்ணலாயினர். பெண்டிரும் இன்னிசையும் சூழ அந்த இன்பமதுவில் மயங்கி இருப்போம் என்று பாடினர்.

சிந்து நதிப் புனல்மீதினிலே சேர
நந்நாட்டிளம் பெண்களுடன்
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து

இன்பமாக வாழவேண்டும் என்ற தம் அவாவை வெளியிட்டுள்ளனர். இன்பத்துள் மூழ்கி இருக்கவேண்டும், இதுதான் சிறந்த வாழ்க்கை என்பதே இத்தகைய கவிஞர்கள் கருத்து. இதுமட்டுமல்ல. இன்னுங்கூடப் பாடுகின்றனர். ஒரு காணி நிலம்! அதில் தூணிலழகியதாய் ஒரு நன்மாடம்; அங்கு நாலைந்து மரமுள்ளதாய் ஒரு தென்னந் தோப்பு; அதிலிருந்து கீற்றுமிளநீரும் கிடைத்திடவேண்டும். அங்கே பாட்டுக் கலந்திடவே ஒரு பத்தினிப் பெண் வேண்டும்.

'சொக்கழகாகச் சுடர் மனைகட்டி' அங்கு சுகித்திருந்து வாழ்தலே வாழ்க்கை என்று கவிஞர் பலரும் கூறினர். இத்தகைய இன்பம் இருந்து விட்டால் போதுமா? துன்பமேது மற்ற, உழைப்பு ஏது மற்ற வாழ்க்கையைத் தான் மனிதன் லக்ஷியமாகக்கொள்ள வேண்டுமா?

இல்லை. இதுவல்ல மனிதனுடைய லக்ஷியவாழ்க்கை, அவன் ஓயாது உழைக்க வேண்டும்! ஏதாவதோர் உயர்ந்த லக்ஷியத்துக்காகப் பாடுபடவேண்டும், சோம்பி இருக்காது தொழிலாற்றவேண்டும் என்கிறார் அல்லாமா இக்பால். போராட்டம்தான் மனித வாழ்வின் வெற்றிக்கு குறுக்கு வழி என்று மகாகவி இக்பால் தன் 'ஜாவீதுநாமா'வில் விளக்கியுள்ளார். சில கவிஞர்கள் எது இன்பகரமான லக்ஷிய வாழ்க்கை என்று காட்டுகின்றனரோ—கவலையற்று பெண்டிரும் இசையும் உண்டியும் பெற்று வாழ்வதைத்தானே அவர்கள் லக்ஷியவாழ்க்கை என்று பாடுகின்றனர் - இந்த வாழ்க்கையில் மூழ்கி இருந்த முதல் மனிதன் கதையை வருணிப்பதையும் இந்நோக்கோடேயே அவர் கைக்கொண்டார். "இயற்கையின் வெற்றி" என்று பெயர்கொண்ட அப்பாட்டில் கவலையற்று, அமைதியோடு இன்பத்தில் மூழ்கியிருந்த ஆதத்தை வாழ்க்கைப் போராட்டம் நடத்துபவராக ஷைத்தான் மாற்றுகிறான். ஷைத்தான், ஆதம் (அலை) அவர்களைப் பாவஞ் செய்யும்படி தூண்டினான் என்ற கதையை இக்பால் இவ்விதம் வருணிக்கிறார். ஆதத்தின் வாழ்க்கை, போராட்டம் நிறைந்ததாக ஆனது இயற்கைக்கு ஒரு வெற்றியாம். சோம்பி இருப்பவர்களை இயற்கை சும்மா விடாது என்ற தம் கருத்தை—வாழ்க்கை களியாட்டமல்ல போராட்டமே என்ற தன் உளமார்ந்த நம்பிக்கையை இயற்கையின் வெற்றி என்ற அப்பாட்டில் இக்பால் வெளியிட்டுள்ளார்.

இத்தகைய போராட்டம், முயற்சி, ஓயாத உழைப்பு, உயர்ந்த லக்ஷியத்திற்காகப் பாடுபடுதல் ஆகியவற்றின் அவசியத்தை இயற்கையே மனிதனுக்குப் போதிக்கிறதாம். இயற்கையிலுள்ள ஒவ்வொரு பொருளும் ஓயாத உழைப்பில் ஈடுபட்டுள்ளனவாம். அவற்றிடமிருந்து மனிதனும் பாடங்கற்று கொள்ளவேண்டுமாம்.

இந்த நோக்கத்தோடு இயற்கைக் காட்சி யொன்றை வருணிக்கிறார் இக்பால். மலையிலிருந்து அருவி விழுந்து கொண்டே இருக்கிறது. காற்று அசைந்துகொண்டே இருக்கிறது. பறவைகள் துள்ளி ஆடிப்பாடிக் கொண்டே இருக்கின்றன. நீரோடை ஓயாது ஓடிக்கொண்டே இருக்கிறது. அது ஓடிவரும் வழியில் எத்தனையோ வளைவுகள், கற்கள், தடைகள்! ஆனால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது அது ஓடுகிறது. கற்கள் தடை செய்யும் போது அந்த ஓடைநீரின் வேகம் அதிகரிப்பதன்றி குறைவதில்லை. "ஸாகிஇ நாமா' என்ற பாட்டில் இந்த வருணனையைத் தருகிறார் இக்பால்:

காற்று
மகிழ்ச்சி நிறைந்து சுழல்கிறது.
புட்கள்
ஓடியாடிப் பாடுகின்றன.
தூரத்தேயுள்ள மலையருவி
குதித்து விழுந்துகொண்டே இருக்கிறது.
அதோ நீரோடை!
எதிர்ப்புக்கு அஞ்சா வீரன்!
வேகமாகச் சுழித்துவரும் கர்ம வீரன்!
ஹே ஸாகிஇ, மதிமுகத்தாளே, பார்!
ஓடை வாழ்க்கை ரகசியத்தைத்
தன்னகத்தே பொதிந்து வருவதைப்பார்!

ஓடை வாழ்க்கையின் இரகசியத்தைத் தன்னகத்தே பொதிந்து வருகிறதாம்! அந்த இரகசியம் என்ன? காற்

றும், பறவைகளும், மலையருவியும் ஓயாது உழைக்கின்றன. இவைகளே தம் கருமத்தில் கண்ணுயிருக்க ஆறறிவு படைத்த மனிதன் இவற்றை பார்த்தாவது ஒரு பாடங் கற்று கொள்ள வேண்டாமா? இவற்றைப்போல் உழைப்பில் சுறுசுறுப்புக் காட்டவேண்டாமா? தன் பிறவிப் பயனைப் பெறுவதற்கான உழைப்பில் ஈடுபடவேண்டாமா?

அவ்விதம் ஓர் உயரிய, சிறந்த லக்ஷியத்திற்கான உழைப்பில் ஈடுபடுபவனுக்கு எதிர்ப்புகள் ஏற்படுவதியற்கை. இவற்றினிடையே அவன் தளராது முயற்சித்தால் மகத்தான வெற்றி பெறுவான் என்பதையே நீரோடை காட்டுகிறது. கற்குன்றுகள் தன் வழியில் எதிர்ப்பட்டால் நீரோடை மலைத்து அங்கேயே நின்றுவிடுகிறதா? அது எவ்விதம் அதிக வேகத்தோடு அத்தடையைத் தாண்டித் தன் இலக்கை நோக்கிச் செல்கிறதோ அதுபோலவே மானிடனும் தன் லக்ஷியப் போக்கில் ஏற்படும் தடைகளைத் தாண்டவேண்டும். அப்போதுதான் அவன் வாழ்க்கை சிறப்புப் பெறும். சுருக்கமாகக் கூறவேண்டுமானல் மனிதனுடைய வாழ்க்கையே ஒரு ஜீவநதியாக இருக்கவேண்டும்.

இதை விளக்கும் முகத்தான் இதுபோன்ற பல இயற்கை வருணனைகளை இக்பால் ஆங்காங்கே வருணித்துள்ளார். அவையும் இக்பாலுக்கும் பிற கவிஞருக்குமுள்ள பாகுபாட்டை நன்கு காட்டுபவையாகும்.

ஜாவீது நாமா

நான் விவரித்துள்ளது
இன்னொரு உலகைப் பற்றி
இந்நூல்
வேறோர் இடத்தைப் பற்றியது

—இக்பால்.

கவிஞர் இக்பாலை மகாகவி நிலைக்கு உயர்த்திய பெருங் காவியம் ஜாவீது நாமா. இது ஒரு பாரகாவியம் (Epic). உலகிலுள்ள பாரகாவியங்கள் எவை என்பதை இலகுவாக எண்ணி விடலாம். ஓர்ஸ்போர்டு என்ற ஆங்கில அறிஞர் சொல்வதுபோல பாரகாவியம் ஒரு யுகத்தின் சிந்தனைகளை வெளியிடுவதாகவோ ஒரு மக்கள் கூட்டத்தின் அபிலாஷைகள் முழுவதையும் பிரதிபலிப்பதாகவோ இருக்க வேண்டும். இம் முறையில் தமிழில் கம்ப இராமாயணமும், வடமொழியில் வான்மீகமும், வியாஸ பாரதமும், ஆங்கிலத்தில் மில்டனின் சுவர்க்க நீக்கமும், கிரேக்க மொழியில் ஹோமரின் இல்லியாதும் வர்ஜிலின் அயினீதும், இத்தாலிய பாஷையில் தாந்தேயின் டிவைன் காமெடியாவும் பார காவியங்களாகக் கொண்டாடப் படுகின்றன.

இத்தகைய பாரகாவியங்களோடு சேர்க்கப் படக்கூடியது ஜாவீது நாமா. இது ஒரு மகா காவியமும் ஆகும். ஒரு பேரறிஞர் குறிப்பிடுவதுபோல ஜாவீது நாமா பிர்தௌசியின் ஷா நாமாவோடும், ரூமியின் மஸ்னவியோடும், சாஅதியின் குலிஸ்தானோடும், ஹாபீஸின் திவானோடும் ஒன்றாகக் கருதப் படக்கூடிய நூல்.



ரூமியும் இக்பாலும்

(ஹைதராபாத் அப்துல் கையூம் வரைந்த சித்திரம்)

ஜாவீது நாமா இளைஞருலகைத் தட்டி எழுப்புவதற்காக எழுதப்பட்டது. வாழ்க்கையில் இன்றுள்ள பிரச்சினைகள், உலக நிலை ஆகியவை பற்றி இக்பால் பல வழிகளில் விவரிக்கிறார். உயரிய அரசியல் எது என்பதையும் தெளிவாக்குகிறார். கீழ் நாட்டுக்கும் மேல் நாட்டுக்குமுள்ள வேற்றுமைகளை எடுத்துக் காட்டி அவை பரிபூரணமடையும் மார்க்கத்தை விளக்குகிறார்.

ஜாவீது, இக்பாலுடைய இரண்டாவது புத்திரர். இன்று ஜாவீது இக்பால் என்று அழைக்கப் படுபவர், இந்நூலில் ஜாவீது என்பது இக்பாலின் மகன் ஜாவீதைப் போன்ற இளைஞர் உலகம் முழுவதையும் குறிக்கிறது. இந்நூல் பாரசீக பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் பொதுப்பொருள் 'அமர காவியம்' என்பதாகும்.

இது இக்பால் பல உலகங்களைச் சுற்றுவதாகவும் பலரை ஆங்காங்கே சந்திப்பதாகவும், அவர்களோடு உரையாடுவதாகவும், பின்னர் இளைஞருலகை நோக்கி அறிவுரை சொல்வதாகவும் வரையப் பட்டிருக்கிறது.

பாரஸீக பாஷையில் 'மஸ்னவி' என்ற சிறந்த கிரந்தத்தை எழுதிய மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) யை இக்பால் தன் 'ஷேக்' (ஆத்மீக வழி காட்டி) ஆகப் பாவிக்கிறார். இக்பாலின் பிரயாணத்தில் மௌலானா ரூமியும் சேர்ந்து கொள்கிறார். பல உலகங்களிலுமுள்ளவர்களுக்கு அவர் இக்பாலை அறிமுகப் படுத்தி வைக்கிறார்.

பிரயாணம் ஆரம்பமாகிறது. காலம் தூரம் என்ற இரண்டையும் உருவகித்து நிற்கும் ஸார்வான் அவரைக் காண்கிறான். காலம் தூரம் என்ற கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை பெற்றவராகும்படி அவரைக் கேட்டுக் கொள்கிறான். அவ்விதம் இக்பால் எண்ணியதும், அவர் உயரே செல்ல ஆரம்பித்து விடுகிறார். நக்ஷத்திரங்கள் அவரை வரவேற்று பாடுவது கூடக் காதில் விழுகிறது.

முதலில் இக்பால் சந்திரலோகத்தில் நுழைகிறார். அங்கே ஒரு விருக்ஷத்தினடியில் ஜடாமுடி தரித்து, திகம்பர தாரியாய், ஸர்ப்பம் ஒன்று அருகே நெளிய அமர்ந்திருக்கிறார் ஒரு முனிவர். இக்பாலோடேயே செல்லும் மௌலானா ரூமி இக்பாலை அம் முனிவருக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறார். அம் முனிவரின் பெயர் 'ஜெஹான் தோஸ்த்' (விஸ்வாமித்ரர்) என்பதாகும். அவர் தம் மோன நிலையிலிருந்து விழித்து, வந்தவர்களோடு உரையாடுகிறார். அப்போது மௌலானா ரூமி சொல்கிறார்; மனிதன் முன்னேற்றமுற வேண்டுமானால் கீழ் நாட்டுக் கலாச்சாரமும் மேல் நாட்டுக் கலாச்சாரமும் ஒன்று சேர வேண்டும்; கீழ்நாடுகள் லோகாயதத்தை ஒதுக்கி விட்டு ஆத்மீகத்தை மட்டுமே மதிக்கின்றன; மேல்நாடுகளோ அதைப் புறக்கணித்து விட்டு லோகாயதத்தை மட்டுமே பெரிதாகக் கருதிப் போற்றுகின்றன.

கீழ் நாடுகள் இறைவனைக் கண்டன.
ஆனால் இகலோக நன்மைகளைக்
காணத் தவறி விட்டன.
மேல் நாடுகள் இவ்வுலக நன்மைகளில் மூழ்கி
இறைவனையே மறந்து விட்டன.

அதைக் கேட்ட விஸ்வாமித்ரர் ரூமியின் கூற்றிலுள்ள உண்மையை ஒப்புக் கொள்கிறார். அவர் சொல்கிறார், 'இதுவரை கீழ்நாடுகள் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தன; ஆனால் அவை விரைவில் விழிப்புறப் போகின்றன. எழுச்சியுறப் போகின்றன, நான் ஓர் தேவதூதனைக் கண்டேன். அவன் கீழ் நாட்டையே ஓயாது உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஏன் அப்படிப் பார்க்க வேண்டும் என்று கேட்டேன். அவன் சொன்னான்.

கீழ்நாடுகள் எழுச்சிபெற வேண்டியகாலம் வந்துவிட்டது.
அவற்றின் மடியில் புதிய சூரியன் தோன்றிவிட்டான்.

கற்களிலிருந்து ரத்தினங்கள் வெளிப்படுகின்றன.
அதன் யூசுப்*கள் தாங்கள் தள்ளப் பட்டிருந்த
கிணறுகளிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றனர்.
அதன் எழுச்சியின் அறிகுறியை
அதன் தேக மெங்கணும் கண்டேன்.
அதன் பர்வதங்கள் உடல் சிலிர்ப்பதிலும் பார்த்தேன்.
அது விக்ரஹ உற்பத்தியைக் கைவிடும்,
விக்ரஹ வாணிபத்தை மறக்கும்.
ஆத்மா ஒளிவிடுகின்ற
அந் நாடுகளை நான் வாழ்த்துகிறேன்.
தன் மண்ணைக்கொண்டே புது உருப்பெருகின்றன அவை
ஒரு நாடு கண்திறந்து விழிப்புறும் நாள்
தேவலோகத்தவர்க்குத் திருவிழா நாளாகும்.

[*யூசுப் நபி தன் சகோதரர்களால் கிணற்றில் தள்ளப்பட்டதை உவமையாகக் கூறுகிறார்.]

இவ்விதம் தேவ - தூதனின் செய்தியைத் தெரிவிக்கும் அம் முனிவர் வாழ்க்கையின் மர்மத்தைப் பற்றி சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு மறைகிறார்.

அப்போது வருங்கால நம்பிக்கையின் உருவகமான ஸரூஷ் என்ற அழகிய தேவலோக மங்கையைக் கவிஞர் காண்கிறார். அவள் அமுததாரை பொழியும் கீதம் இசைக்கிறாள். மனிதனுக்கு வரவிருக்கிற நற்காலத்தைப் பற்றி அவள் பாடியது இக்பாலுக்கே புது உணர்ச்சி தந்து ஊக்குவதாக இருந்தது. வாழ்க்கையின் அந்தரங்க உண்மையை உணரும்படி அவள் கவிஞரை நோக்கிக் கூறுகிறாள்:

ஹே மேல் நோக்காக ஆராய்பவனே,
ஆதமா அழிவதென்றே வைத்துக்கொள்.
எனினும் குமிழியில் மறைந்திருக்கும் புயலை
நீ உணரவில்லையா?

என்று வேதாந்தப் பொருளில் விளம்பும் அவளிடமிருந்து பிரிந்து இக்பால் யர்கமீது என்ற கணவாய்க்கு வருகிறுர். அங்கே புத்தர், ஸொராஸ்தர், கிருஸ்து, முகம்மது நபி (ஸல்) ஆகிய மகான்களின் போதனைகள் பொறிக்கப் பட்ட நான்கு பலகைகளைக் காண்கிறுர். அவர்களை நேரில் காண இயலவில்லை. அப் போதனைகளை நான்கு வெவ்வேறு விதமான மனிதர்கள் விளக்குகிறுர்கள். புத் தருடைய போதனைகளை ஒரு பெண்மணி விளக்குகிறுள். அவள் ஒரு காலத்தில் நடன ராணியாக விளங்கி மக்கள் உள்ளங் கவர்ந்தவள். புத்தர் போதனைகள் அவள் கண் களைத் திறந்தன. ஆத்மாவின் நித்தியத்துவத்தை உணர்ந்து சித்தார்த்தன் திருவடி யடைந்தாள். அவள் புத்தரின் ஞான மார்க்கத்தை விளக்குகிறுள். ஸொராஸ்த ரிய மதம் பாரசீகத்தில் பரவியிருந்தது. இன்று பார்ஸி கள் எனப் படுவோரால் பின்பற்றப் படுவது. இவர்கள் நெருப்பை வணங்குபவர்கள். இவர்களுடைய வேதப் புஸ்தகம் ஸென்ட் எவஸ்தா எனப்படும். இந்த மதத் தைத் தோற்றுவித்தவர் பெயர்தான் ஸொராஸ்தர் என்பர தாகும், இவருடைய கொள்கைகளை விளக்கிவைக்க அஹுர்மான் என்பவன் வருகிறுன். அஹர்மான், ஸொராஸ் திரியர்களால் தீய தெய்வமாகக் கருதப்படுபவன். பின் னர் ஏசு கிருஸ்துவின் கொள்கையை விளக்கி வைக்க டால்ஸ்டாய் வருகிறுர். டால்ஸ்டாய் ரஷ்யாவில் தோன் றிய ஞானி. 'இறைவன் இராஜ்யமும் சாந்தியும்' என்ற பெயரோடு கிருஸ்தவ மதத்தை விளக்கி அதி அற் புதமான புஸ்தகம் எழுதியவர். இவருடைய விளக் கத்தை 'டால்ஸ்டாயியின் கனவு' என்ற தலைப்பில் கவி ஞர் வருணிக்கிறுர். இதில் அப்ராஜின் என்ற பெண்மணி யும் யூதாஸ் இஸ்காரியத்தும் பேசுவதாக ஒரு குறிப்பு இருக்கிறது. ஐரோப்பாவை அப்ராஜின் என்ற பெண் ணுக உருவகப் படுத்தியுள்ளார் இக்பால். யூதாஸ் ஏசு

பெருமானின் சீடனாக இருந்து கடைசியில் பணத்துக்காக அவரை யூதர்களிடம் காட்டிக் கொடுத்தவன். அவனை நோக்கி அப்ராஜின் கேட்கிறாள்:

ஹே மதத்தின் மதிப்புணராதவனே,
வெள்ளையப்பனுக்கு அடி பணிந்தவனே,
பரிசுத்த ஆவியின் மதிப்பை நீ உணரவில்லை,
உனக்கு உடல் இருந்தது,
ஆனால் நீ வாழ்க்கைச் செல்வத்தை இழந்து விட்டாய்.

யூதாஸ் இஸ்காரியத் பதிலளிக்கிறான்:

உன் தீமையால் அறிவும் மதமும் ஆக்கமற்றுவிட்டன.
உன் வணிக மனப்பான்மை அன்பை அழித்துவிட்டது.
உன் பற்றுதல் என்பது ஒருவியாதி;
அதுவும் இரகசிய வியாதி!
உன் மூச்சே சாவை உண்டாக்கும்;
அதுவும் உடனடியான சாவை.
நீ ஜடப் பொருளை உணர்ந்தாய்
மனிதனை ஆண்டவனிடமிருந்து திருடிவிட்டாய,
பல பிரச்சினைகளைத் தீர்த்த விஞ்ஞானம்
உனக்கு ஒன்றையும் தரவில்லை—
கொள்ளை யடிக்கும் எண்ணத்தைத்தவிர.
உன் மரணம் உலகின் உயிர் தளிர்ப்பதைக் குறிக்கும்;
சற்று பொறு, உன் முடிவை உணர்வாய்!

இதில் ஐரோப்பிய நிலையும் ஐரோப்பாவுக்கான எச்சரிக்கையும் நன்கு விளக்கப்பட்டிருப்பதாலேயே இங்கு தரப்பட்டது.

பின்னர் நபி பெருமானாரின் பரம வைரி அபூஜஹல் வருகிறான்—நபி பெருமானாரைப்பற்றி கூற. அபூஜஹல் பெருமானாரின் போதனைகளை எதிர்த்து நின்றவன். அவர்கள் உயிரை வாங்கவும் பல சூட்சிகள் செய்தவன். நபி பெருமானுக் கெதிராக நடந்த சண்டையொன்றில் அவன் கொல்லப்பட்டான். அவன் சொல்கிறான்:

இந்த முஹம்மதால்
எங்கள் மனமும் விண்டுபோயிற்று.
அவர் போதனைகள்
கஃபாவின் ஒளியை மங்கச் செய்துவிட்டன.
கைஸரும் குஸ்ரூவும்╥
வேண்டா மென்கிறார் அவர்.
எங்களிடமிருந்து
இளைஞர்களையும் தம்பக்கம் இழுத்துக் கொண்டார்.
அவர் தாக்குதலால்
லாத்தும் மனாத்தும் * தூள் தூளாகிவிட்டன.
ஏ உலகமே,
நீ அவர்பேரில் வஞ்சம் தீர்த்துக்கொள் !
அவர் மதத்தில்
வர்க்க, ஜாதி பேதங்களைக் காணோம்,
அவர் குறைஷிக் கூட்டத்தவராயினும்
அராபியர்கள் உயர்ந்தவர்களல்ல என்கிறார்.
அவர் மதத்தில்
உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் ஒன்றும்
தன் அடிமை உண்ணும் தட்டில்
தானும் உடனிருந்து உண்ணுகிறார்!

[╥ கைஸர், குஸ்ரூ - நபிபெருமான் காலத்திலிருந்த முடிமன்னர்கள். * லாத், மனாத் = கஃபாவிலிருந்த பெரிய விக்ரகங்கள்.]

இவ்வாறு உலகில் வாழ்ந்த நான்கு மகான்களின் கொள்கையை ஒருவிதத் துவேஷமுமின்றி இக்பால் விளக்கி வைக்கிறார்.

இதன் பின்னர் இக்பால் புதன் கிரஹம் செல்கிறார். அங்கே பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த இரு பெரும் அறிஞர்களான ஜமாலுத்தீன் ஆப்கானியையும் செய்யிது ஹாலீம் பாஷாவையும் காண்கிறார். அவர்களுக்கு மௌலானா ரூமி இக்பாலை "ஜிந்தா ரூத்" (ஜீவ

நதி) என்று அறிமுகப்படுத்தி வைக்கிறார். இக்பால் அவர்களிடம் இன்றைய முஸ்லிம்கள் நிலையை விவரிக்கிறார். முஸ்லிம் நாடுகள் மதம் வேண்டுமா நாடு வேண்டுமா என்ற போராட்டத்தில் இறங்கியுள்ளன. துருக்கியரும், பாரசீகத்தவரும், அராபியரும் ஐரோப்பாவின் மேல் மோகங்கொண்டு விட்டனர். ஆனால் மேல் நாட்டு ஏகாதிபத்தியமோ கீழ்நாட்டின் உயிரையே உறிஞ்சி வருகிறது. கம்யூனிஸம் மதத்தை நாசஞ் செய்கிறது என்று இக்பால் சொல்கிறார். ஜமாலுத்தீன் ஆப்கானி கம்யூனிஸம், ஏகாதிபத்தியம் ஆகிய இரண்டையும் பற்றிய தற்கால நோக்கங்களின் தீமைகளை எடுத்துக் கூறுகிறார். செய்யிது ஹாலீம் பாஷா மேல் நாட்டையும் கீழ் நாட்டையும் ஒப்பிட்டு அவை இரண்டிலுமுள்ள நல்ல அம்சங்கள் ஒன்று சேர்க்கப்பட்டாலொழிய உலகுக்கு விமோசனமில்லை என்பதை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

மேற்கே அறிவுத்திறனே
வாழ்க்கை ஊற்றாக விளங்குகிறது.
கிழக்கிலோ அன்பே
வாழ்க்கையின் அடிப்படையாக உள்ளது.
அன்பின் மூலம் தான்
அறிவு உண்மையை உணரும்.
ஆகவே விழியுங்கள்!
புத்துலகு காண விழையுங்கள்!
அன்போடு அறிவு கலந்திட
ஆக்கந் தேடுங்கள்!

இவ்விதங்கூறும் ஹாலீம் பாஷா தன் தாய் நாடான துருக்கி எந்நிலையிலுள்ளது என்பதையும் விவரிக்கிறார்;

'புத்' *கள் ஐரோப்பாவிலிருந்து
கஃபாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டால்
அங்கே ஜீவன் இருக்க முடியுமா?

திருக்கியின் வாத்தியத்தில்
புதிய இசை யொன்றும் எழவில்லை.
துருக்கி புதிதாகக் கருதுவது
ஐரோப்பாவுக்குப் பழையதுதான்.

[* புத் - விக்ரஹம்]

கடைசியில்,

ஒருவகை உலகு பழையதானதும்
குர்ஆன் இன்னொரு வகை உலகைத் தருகிறது

என்று குறிப்பிட்டுத் தன் பேச்சை முடிக்கிறார்.

செய்யிது ஹாலீம் பாஷா குறிப்பிடுகிற குர்ஆனைப் பற்றிய இக்கூற்றுக்கு விளக்கம் அறிய இக்பால் ஆசை கொள்கிறார். ஜமாலுத்தீன் ஆப்கானி அதை விரித்துக் கூறி அவர் ஆவலைத் தீர்க்கிறார். குர்ஆன் தரும் ராஜ்யம் ஜாதி மத பேத மற்றதாகவும், நாட்டாசை யற்றதாகவும் ஒருவனை ஒருவன் அடக்கியாள வேண்டும் என்ற வெறி யற்றதாகவும் இருக்கும். அங்கு கலாச்சாரமென்பது மனிதனுக்கு மதிப்பளிப்பதாகவும் அறிவை விருத்திசெய் வதாகவும் விளங்கும். பெண்கள் தற்காலக் கோலா கலங்களின்றி எளிய வாழ்க்கை வாழ்பவர்களாக இருப் பர். பொருள்களின் ஆத்மீக மதிப்பே அங்கு பெரிதா கக் கருதப்படும் என்று ஆப்கானி வருணிக்கிறார். செய் யிது ஹாலீம் பாஷா, குறுகிய மனம் படைத்த முல்லாக் களால்தான் அல்லாவின் மதம் மாசுண்ட தென்றும், முல்லா மதம் என்று நினைப்பதே அல்லாவின் பெயரால் சங்கடங்களை உண்டாக்குவதுதான் என்றும் கூறுகிறார்.

பின்னர் ஜமாலுத்தீன் ஆப்கானி ரஷ்யாவைப்பற்றி பேசத் தொடங்குகிறார். ரஷ்யாவிலுள்ள போல்ஷ விஷத்துக்கும் இஸ்லாத்துக்குமுள்ள ஒற்றுமை வேற்று மைகளை எடுத்துக்காட்டி குர்ஆனை ஒப்புக்கொண்டால் தான் ரஷ்யாவின் நிலைமை உண்மையிலேயே சீர்ப்பட்ட தாகும் என்று சொல்கிறார். ராஷ்யாவிடம் சொல்லும்

படியாக ரஷ்யாவை விளிக்கும் முறையில் அவர் பேசுகிறார் ;

பழைய பழக்கத்தைப் புதைத்து
நீ ஒரு புதிய அஸ்திவார மிட்டாய் ;
முஸ்லிம்களாகிய எங்களைப்போல்,
நீயும் கைஸர் தன்மையைக் களையெடுத்தாய்.
நீயும் கீழ்நாடுகளோடு சேரவேண்டியவனே!
உன் விதியும் அவர்களோடு பிணைக்கப்பட்டது தான்.
ஐரோப்பாவின் அரசியல் முறை
காலத்திற் கொவ்வாததாகவும்
சலிப்புத் தருவதாகவும் ஆகிவிட்டது.
அந்த மனிதத் தன்மையற்ற கலாச்சாரத்தை
இனி நீ கண்ணெடுத்தும் பாராதே !
இப்போது நீ சுதந்திர வானாகிவிட்ட படியால்,
'ஆண்டவனில்லை' என்ற படியிலிருந்து
'அல்லாவைத் தவிர' என்றபடியை நோக்கி முன்னேறு!
உலக அமைதியில் உனக்கு ஆசையுண்டென்றால்,
அதற்கான பலம் பொருந்திய அடிப்படை
எது என்று உணர முயன்றாயா?
பழைய சரித்திரத்தை நீ கொளுத்திவிட்டாய்.
உன் அறிவை
'நூல்களின் தாயால்' * நிறப்பு!
கருப்பர்களையும் ஒளிபெறச் செய்ததுயார் ?
கைஸருக்கும் கிஸராவுக்கும் இங்கு இடமில்லை எனக்
கூறியது யார் ?

ஐரோப்பியக் கலாச் சாரத்துக்குக்கு அப்பால் பார்!
மேல் நாட்டின் சூழ்ச்சிகளை நீ உணர்ந்திருந்தால்
நரியின் தந்திரத்தைக் கைவிட்டுப்
புலியின் தன்மையைக் கைக்கொள்.
நரி திருட்டுவழிகளைச் சிந்திக்கும்

புலியோ சுதந்திரத்தைத் தேடும்.
சாவு வரினும் ஏற்கும்.
குர்ஆன் இன்றேல்,
சிங்க உள்ளமும் குள்ள நரித்தன்மையடைந்து விடும்.
குர்ஆனின் எளிமையே அரசுமுறையின் சாரம்.
ஆத்மீக அன்பையும் அறிவையும்
ஒன்று கூட்டுவதே குர்ஆனின் தர்வேஷ் தன்மையாகும்,
தெய்வீக அன்பற்ற அறிவு பரிபூரணமற்றது.
[நூல்களின் தாய் - குர்ஆன்]

ஆகவே ருஷ்ய மக்கள் குர்ஆனைப் பின்பற்றி அறிவையும் அன்பையும் கலக்கச்செய்து முஸ்லிம்களின் கடமையைக் கைக்கொள்ளவேண்டும் என்று செய்யிது ஹாலீம் பாஷாவும் ஆப்கானியின் கூற்றை தொடர்ந்து பேசுகிறார்;

குர்ஆன் என்பது என்ன?
முதலாளி வர்க்கத்துக்குச் சாவுமணி.
பாட்டாளிக்கு உற்ற துணைவன்.
பணத்தைச் சேர்த்து வைப்பவனிடமிருந்து
நன்மையை எதிர்பாராதே!
நீ அருமையானதெனப் போற்றும் (பணத்திலிருந்து)
சிறிது செலவு செய்தாலன்றி
நீ நன்மை பெறமுடியாது.
'வட்டி' முறை கஷ்டமுண்டாக்குகிறது;
கண்ணியமான கடன்
எவ்வளவு இனியது என்பதை யாரே அறிவார்!
வட்டி ஆத்மாவை இருளடைந்த தாக்குகிறது;
பல்லும் நகமும் இன்றியே
அது மனிதனை மனிதன் தின்னச் செய்கிறது.
மண்ணிலிருந்து உணவைப் பெறுதல் நியாயமானது;
உலகம் மனிதனின் சொத்தில் ஒருபாகமானாலுங்கூட
அதன் உரிமை இறைவனுடையது தான்.

இவ்விதம் குர்ஆனின் பெருமையையும் உலகம் உய்ய அதைக் கைக்கொள்ளல் ஒன்றே சரியான வழி என்பதையும் ஹாலீம் பாஷாவும் ஜமாலுத்தீன் ஆப்கானியும் விளக்குகின்றனர்.

அங்கிருந்து இக்பால் சுக்ரன் என்ற கிரஹத்துக்குப் போகிறார். அங்கே புராதன தெய்வங்களெல்லாம் தற்கால உலகம் லோகாயதத்தில் மூழ்கி மதத்தை மறந்து விட்டனவே என்று புலம்பக் காண்கிறார். மௌலானா ரூமி தன் இனிய இசையால் அத் தெய்வங்களெல்லாம் முழுந்தாளிடும்படி செய்துவிட்டு, ஓர் ஆற்றுக்கு அடியிலுள்ள பாதை வழியாக இக்பாலை அழைத்துக் செல்கிறார். அங்கே பிர்அவ்ன் அரசனும் கிச்சனர் பிரபுவும் வதிகின்றனர். பிர்அவ்ன் மூஸா நபி காலத்திலிருந்த கொடுங்கோலன். தானே இறைவன் என்று சொன்ன மூர்க்கன். கிச்சனர் கப்பல் படைத் தலைமையிலிருந்தவர். எகிப்திலுள்ள புராதனப் புதை குழிகளைத் தோண்டி அவற்றிலிருந்த பொன்னையும் மணியையும் வெளியே எடுத்தவர். அவர் தோண்டிய குழிகளில் ஒன்றில் மெஹ்தி சூடானி அடக்கப் பட்டிருந்தார்.

பிர்அவ்ன் தான் மூஸா நபியின் போதனைக்குச் செவிசாயாது போனது குறித்துவருந்தி, இன்று தன்னைப் போலுள்ள சர்வாதிகாரிகளுக்கு அது ஒரு பாடமாக இருக்கவேண்டும் என்கிறான். ரூமி தன்னாட்சியையும் ஏகாதிபத்தியத்தையும் கொள்ளையடித்தலுக்கு ஒப்பிடுகிறார். இதைக் கிச்சனரின் குற்றமுள்ள நெஞ்சம் ஏற்க மறுக்கிறது. அவர் ஐரோப்பிய நாடுகளுக்காகப் பரிந்து பேசுகிறார். ஐரோப்பாவின் லக்ஷியங்கள் மிகவும் உயர்ந்தவையென்றும் எகிப்து தேசத்திலுள்ள புராதன புதை குழிகளை ஐரோப்பியர் தோண்டியது எகிப்தின் சரித்திரத்தை அறிவதற்காகத்தான் என்றும் சொல்கிறார். பிர்அவ்ன் மெஹ்தி சூடானியின் அடக்க ஸ்தலத்தைத்

தோண்டியதைக் குறிப்பிடுகிருன். அப்போது மெஹ்தி சூடானியே அங்கே வருகிருர். தனது புதை குழியைத் தோண்டிய பாவத்தால்தான் கிச்சனருக்குப் பூமியில் கூடப் புதை குழிக்கு இடம் கிடைக்கவில்லை, அவர் கடலுள் மூழ்கவேண்டியதாயிற்று என்று கிச்சனர் சென்ற கப்பல் நீர்மூழ்கியால் மூழ்கடிக்கப்பட்டதை மெஹ்தி நினைவு மூட்டுகிருர். மெஹ்தி சூடானி அராபியருக்கு ஒரு வேண்டுகோளும் விடுக்கிருர். அவர்கள் விழிப் படைந்து புத்துலகை ஆக்கவேண்டுமென்றும் காலீத்களை யும் உமர்களையும் உற்பத்திசெய்ய வேண்டுமென்றும் அவர் கூறுகிருர்.

பின்னர் இக்பால் செவ்வாய் கிரஹத்துக்குச் செல்கிருர். அங்கே ஒரு வான சாஸ்திரியைக் காண்கிருர். அங்குள்ள மக்கள் விஞ்ஞானத்திலும் மேல் நாட்டினரை விட அதிக முன்னேற்ற மடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனுல் அவர்கள் மேனுட்டினரின் லோகாயத வெறி யற்றவர்களாக விளங்குகின்றனர். அவ் வான சாஸ்திரி தங்கள் வரலாற்றை சுருக்கமாகச் சொல்கிருர்: தங்களுடைய ஆதம் (முதல் மனிதன்) ஒரு பர்கியா வென்றும், அதைத் தங்கள் ஷைத்தாளுகிய பர்ஸ்மாஸ் தவருன வழியில் திருப்பப் பார்த்ததென்றும் ஆனுல் பர்கியா அவ் விதம் வழி தவறவில்லையென்றும் அதற்கு வெகுமதியாக இறைவன் அச் செவ்வாய் கிரஹத்தைத் தங்களுக்குத் தந்தான் என்றும் தெரிவிக்கிருர். அந்த கிரஹத்தின் தலைநகரான மர்காதின் என்பதைக் கவிஞர் வருணிக்கிருர். அங்கே இந்த உலகைப்போன்று காசுகள் இல்லை; போர்க் கருவிகளில்லை; பிச்சைக்காரர்களில்லை; வேலையில்லாத் திண்டாட்டமில்லை; ஒழுக்கமற்ற நிலையில்லை; சைன்யமில்லை; குரோதமும் பொய்ப்பிரசாரமும் இல்லை. செவ்வாயிலுள்ள தொழிலாளிகள் தம் உழைப்பின் முழுப் பயனையும் அனுபவித்தனர். அங்கு அவர்களுடைய இரத்

தத்தை உறிஞ்சும் முதலாளிகள் இல்லை. இவ்விதம் வருணை செல்கிறது. முதல் மனிதன் தோன்றியதிலிருந்து உலகத்தோர் ஷைத்தானின் தூண்டுதலுக்கு இணங்காமல் நேர்மையாக நடந்திருந்தால் உலகம் எப்படி இருக்கும் என்பதைத்தான் இக்பால் இவ்விதம் வருணிக்கிருர் எனலாம்.

பின்னர் இக்பால் அந்த வானநூல் வல்லாரோடு விதியைப் பற்றி பேசுகிருர். ஒருவன் தன் விதியை மாற்றிக் கொள்வது இயலுமென்றும், மனிதன் தன் விதியை அடக்கியாளப் பயிலவேண்டுமென்றும் அந்த வல்லுனர் கூறுகிருர். "உன் விதி உனக்குச் சரிப்படாவிட்டால், ஆண்டவனிடமிருந்து இன்னெருவகை விதியைப் பெற்றுக்கொள் புது விதி பெறுவது இயலும்; ஏனெனில் இறைவன் பல விதிகளை அருள முடியும். அதன் இரகசியம் இதுதான்: நீ மாறினுல் உன் விதியும் மாறும்." என்றும் அவர் சொல்லுகிருர்.

செவ்வாயை விட்டுக் கவிஞர் புறப்படுமுன், அவ்வுலக ஷைத்தாஞன பர்ஸ்மாஸால் அங்கு சங்கடங்களை உண்டுபண்ணுவதற்காக ஐரோப்பாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கன்னியையும் காண்கிருர். அந்தக் கன்னியின் வதனத்தில் அருளில்லை; கண்களில் கருணையில்லை; வார்த்தைகளில் ஈரமில்லை; அவள் அன்பினுல் ஊறும் இன்பத்தை அறியாதவள். அவள் ஸ்தனங்கள் வளர்ச்சியற்று வாடிக்கிடந்தன. அவள் நாணம் சிறிதுமின்றி, கூச்சமற்று உடலின் இரகசியங்களை வெளிப்படையாகப் பேசுகிருள். அவள் தான் ஐரோப்பிய நவநாகரீக நங்கையின் உருவகம்.

தாய்மையை மறந்து குழந்தைகளையும் தாம் பராமரியாது தாதி கையில் விட்டு வருங்கால மக்களை நாசமாக்கும் பெண்களை இக்பால் கடிந்து பேசுகிருர். கண்ணுடி உடை யணிந்து, உதட்டுச்சாயம் பூசி, முகத்தில் பவுடரை

அப்பி குடும்ப வாழ்க்கையை நாசமாக்குகின்றனர் சிலர்; இஷ்டப்பட்டால் கணவனை ஏற்கவோ ஒதுக்கவோ செய்யலாம் என்று எண்ணுகின்றனர். ஆத்மா என்ற கண்ணுடியை மங்கியதாக ஆக்கி சமுதாயத்தின் உயிரே வற்றும்படி செய்துவிடுகின்றனர். இங்கே இத்தகைய அனுகரீகப் பெண்களையே இக்பால் வருணிக்கிருர்,

இந்த ஐரோப்பியக் கன்னி இதோ பேசுகிருள்: "ஏ மனைவியர்களே, தாய்மார்களே, சகோதரியரே, எத்தனை நாள்தான் மனிதனின் அன்புக்கு உட்பட்டு நீங்கள் அடங்கிக் கிடக்கப் போகிறீர்கள்? ஆண்களால் நேசிக்கப் படுவது உங்களுக்குத் துன்பத்தைச் சேர்க்கிறது. அது உங்கள் உரிமையைப் பறித்துவிடுகிறது. உங்கள் கேச அலங்காரத்தில் மனிதன் மயங்கி அடிமையாகிவிட்டான் என்றெண்ணுகிறீர்கள். மனிதனே பணிவு என்ற ஆயுதத்தோடு உங்களை வளைய வருகிருன். அது உங்களை அடிமைப்படுத்தவே. அவனுடைய அன்பு ஒரே பாசாங்குதான்; அவன் நடிப்பெல்லாம் போலி; அந்தக் காபிர் உங்களைத் தன் கஃபாவினுள் பிரதிஷ்டை செய்துவிடுவதாகக் கூறினாலும், உங்களுக்குத் துன்பத்தையும் துயரத்தையுமே தருகிருன். அவன் உறவு உங்கள் வாழ்வைக் குலைக்கிறது. அவனோடு ஒன்றுவதே விஷந்தான். அவனை விட்டகன்றிருப்பது அமிர்தம். அவன் உங்கள் உடலைச் சுற்றும் ஸர்ப்பம்; அவனை விட்டு விலகி நில்லுங்கள். அவனுடைய நச்சுப் பல் உங்கள் குருதியில் விஷத்தைக் கலந்து விடக்கூடாது. குழந்தைகள் பெறுவது உங்களை இரத்தமற்றவர்களாக்குகிறது. நீங்கள் கணவரிடமிருந்து விடுதலை பெறுங்கள். கலையின்மூலம் கர்ப்பம் உண்டாக்கும் அதிசயம் நடக்கும் காலம் வந்துவிட்டது. குழந்தைகள் நமக்கு இஷ்டமில்லாதவையாக இருந்தால், உடனே அவற்றை கொன்றுவிடுதல் நம் கொள்கையாதல் வேண்டும். விரைவில் புது ரகசியங்கள் வெளியாகலாம்:

கருக்குழியின்றியே கருவை உண்டாக்குதல் சாத்தியமாக லாம். வாழ்க்கை என்ற வாத்தியம் விரலின் மீட்டுதலின் றியே நாதம் எழுப்பும். எழுங்கள், இயற்கையின் நியதி யோடு போராடுங்கள்! அடிமைப் பெண்கள் சுதந்திரர்க ளாகட்டும். மணம் என்னும் தடையிலிருந்து விடுதலை பெறுதலே பெண்கள் ஐக்கியத்துக்கு அடிகோலும். உங் களைப் பாதுகாருங்கள்! ஆண்களை அண்டவிடாதீர்கள்!''

இங்கே இக்பால் வரம்புமீறிய வருணனையில் இறங் கியதாகத் தோன்றினாலும் மேல் நாட்டுப் பெண்கள் மனப்பான்மையையே விவரிக்கிறார். தாய்மையையும் பெண்மையையும் போற்றுவதில் இக்பால் யாருக்கும் பின் னடைந்தவரல்ல. சமுதாய வளர்ச்சியை ஆக்குபவர்கள், சமுதாயத்தூண்கள் அவர்களே என்று இக்பால் புகழ்கி றார். ஆகவேதான் தாய்மையை மாசு செய்யும் இந்தப் பேய்மையை இவ்விதம் கடிந்து எழுதினார் எனலாம்.

இக்கன்னியின் கசப்பு மொழிகளுக்குப் பின்னர் மௌ லானா ரூமி பேசுகிறார். பெண்களே அன்பின் இருப்பிடம் என்று கூறும் ரூமி மேலும் சொல்கிறார்:

> புதுஉலகம் வரவேற்கும் கருத்துக்களை நோக்குங்கள்!
> கடவுளற்ற நாகரீகத்தின் பயனையும் பாருங்கள்!
> அன்பே வாழ்க்கையின் நியதி.
> நாகரீகத்தின் ஆணிவேர் நம்பிக்கை
> நம்பிக்கை என்பதே அன்பு.

பின்னர் இக்பால் அதைவிட்டு நீங்கி வியாழ கிரஹம் செல்கிறார். அங்கே கவிஞர் காலிபையும், பெண் புலவர் தாஹிராவையும், மெய்ப் பொருள் அறிவு ஞானி மன் சூர் ஹல்லாஜையும் சந்திக்கிறார். இவர்களோடு வாழ்வு, சாவு ஆகியவற்றின் தத்துவங்களைப்பற்றி பேசுகிறார். மனதைப் பழக்கப் பலவந்தம் அவசியம், நபி பெருமா னைப் பார்ப்பதென்பது உடலை அவர்கள் கட்டளைக்கு உட் படுத்துவதாகும்; ஆண்டவனைக் காண்பதென்பது அவ

ஞேடு நாம் சம்பந்தப்படுத்தும் கருணை முதலிய குணங் களை நம் மனத்துள் வளர்த்து உலகிலும் அவை நிலவும் ப்டி செய்தல்தான். இம்முறையில் உரையாடல் செல்கி றது. அப்போது ஷைத்தான் அங்கே வருகிறுன். இக் பால் தனது மற்றையக் கவிதைகளில் ஷைத்தானுடைய தன்மையைக் கூறுவதுபோலவே இங்கும் அவனை வரு ணிக்கிருர். அவனைக் காரியவாதி என்கிருர். அவன் பிரிவை விரும்புகிறுன். தனக்கும் மனிதர்களைப்போன்ற உள்ளத்தாபம் இருப்பதாகவும், பூர்த்திபெருத லக்ஷியங் களைத் தானும் விரும்புவதாகவும் சொல்கிறுன். அத்து டன் ஷைத்தான் தற்பெருமையும் பாராட்டுகிறுன். அடி மைத்தனத்தில் ஆழ்ந்திருந்த மனிதனின் நிலையை உயர்த்தி, மனிதத் தன்மையை வளர்ப்பதற்கு அவசியமான சுதந்தி ரத்தை வழங்கியவன் தானே என்று பெருமை யடித்துக் கொள்கிறுன். அவன் இறைவனிடம் மனிதனின் பல ஹீனமான நிலையைச் சொல்லி முறையிடுகிறுன். மனிதன் வெகு லகுவாக அவன் சூட்சிகளுக்குப் பலியாகிவிடுகிரு ஞம். அவன் பலத்தை மனிதர்களிடங் காட்டமுடிய வில்லையாம். ஆகவே தன் திறமை முழுவதையும் பிரயோ கிக்கக்கூடிய வகையில் தனக்கு எதிரியான மானிடனை ஆண்டவன் படைக்கவேணுமாம். மனிதனிடம் வெகு இலகுவாக வெற்றிபெற்று அவனைக் கஷ்டமின்றி தன் வழிக்குத் திருப்பமுடிவதால் ஷைத்தானின் வாழ்க்கையே சாரமற்றதாகிவிட்டதாம். ஆகவே அவன் தன் தீயவழி களையும் ஏற்பாட்டையும் இலகுவில் ஏற்றுக்கொள்ளாத மனிதனைக் காணவேண்டுமாம் :

எல்லோர்க்கு மிறைவனே,
மானிடரோடு பழகி நான் மதிப்பற்றவனுகிவிட்டேன்
நான் விரும்புவதை
மனிதன் நிறைவேற்ற தவறுவதில்லை.
அவன் தன் கண்களை மூடிக்கொள்கிறுன்

தன் மனதைப்பார்க்க முயலவே இல்லை
அவன் தன்மை முதிர்ச்சியற்று
முடிவு பலமற்று விளங்குகிறது,
இந்த எதிரி
எனது கை வீச்சுக்குக்கூடத் தாளமாட்டான்
நீராலும் மண்ணாலுமான
இந்தப் பொம்மையை உன்னிடம் அழைத்துக்கொள்
குழந்தையில்லாவீட்டில் கிழவனு குதித்தாடுவது!
மனிதன் இல்லாத உலகில்
இந்தப் பொம்மையையா
மனிதன் என்று அழைப்பது!

இவ்விதம் கோழை மனிதனைப் படைத்த இறைவனையே வைத்தான் இடித்துக் காட்டுகிறுன்.

பின்னர் இக்பால் சனி கிரஹம் போகிறுர். அங்கே தம் நாடுகளுக்கும் எஜமானர்களுக்கும் துரோகம் செய்த துராத்மாக்களைக் காண்கிறுர். இந்தியா இத்தகைய பாவிகளாலல்லவா இங்நிலைக்கு வந்தது என்று நெஞ்சு குமுறுகிறுர்.

நீ இந்தியாவைக் கண்டதில்லையா?
இதயமுள்ள யாரும் போற்றும் நாடல்லவா அது?
அதன் ஒவ்வொரு அணுவும் உலகின்மேல் ஒளி வீசினும்
அந்தோ!
அது புழுதியிலும் குருதியிலும் கிடந்து தத்தளிக்கிறது.
அதன் நிலத்தில் அடிமைத் தனத்தின் விதையை
ஊன்றியது யார்?
இவர்களையொத்த பாபாத்மாக்களன்றே!

என்று அவர் மனம் வெதும்பிக் கதறுகிறுர்.

இத் துரோகிகள் கூட்டத்தில் வங்கத் துரோகி மீர்ஜாபரும் தக்ஷிணத் துரோகி மீர்சாதிகும் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் இருவரும் இரத்தத்தாலாய கட

வில் மிதக்கும் ஒரு தோணியில் அமர்ந்திருக்கின்றனர். அப்போது இந்தியா அழகுமிக்க ஓர் அஸ்வாஜாத அங்கே தோன்றுகிறது. அதன் காலும் கையும் அடிமைத்தனம் என்ற விலங்கால் பிணைப்புண்டிருக்கின்றன. இவ்விடத்தில் இக்பாலின் தேசபக்தி உச்சத்தை அடைகிறது. அவர் இந்தியா அங்கே தோன்றியதை வருணிக்கிறார் :

வானம் வெடித்து
ஓர் வனப்பு மிக்க வனிதைக்கு வழிவிட்டது,
அவள் தன் முகத்திரையைச் சற்றேவிலக்கினாள்
அவள் நெற்றியில் தெய்வீக ஒளி சுடர்விட்டது
அவள் கண்களில் தெய்வீக அன்பு
வெறியோடு கூடித் தேங்கி நின்றது.
அவள் ஆடை மேகம் போன்றிருந்தது.
அதில் ரோஜா இதழ்களை யொத்த
புள்ளிகள் நெடுகிலும் மிளிர்ந்தன.
எனினும் அவள் விலங்கிடப்பட்டிருந்தாள்.
அவள் தொண்டையிலிருந்து
இதயம் பிளக்கும் விம்மல் ஒலி
வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.
ரூமி சொன்னார்:
பார், இதுதான் இந்தியாவின் ஆத்மா,
அவள் விம்மலின் வேகம்
யார் மனதையும் இறங்கச் செய்யும்

அர்த்த மற்ற பழக்கங்களுக்கு அடிமையாகிக் கந்தல் கோஷங்களைக் கத்தித்திரியும் இந்தியர்களின் சிரத்தையற்ற தன்மையையும், தங்கள் மனதையே அவர்கள் அறிய முடியாதிருப்பதையும் கூறி அந்த அழகி முறையிடுகிறாள். மீர்ஜாபர்தன்மை இன்னும் இந்தியாவில் இருக்கிறதென்கிறாள்,

அப்போது மீர்ஜாபரும் சாதிகும் தங்கள் இறங்கத்தக்க நிலையை விவரிக்கின்றனர், அவர்களுக்கு எங்குமே

இருக்க இடம் கிடைக்கவில்லையாம். நரகம்கூட இவர்கள் உடல் தன் நெருப்பில் விழக்கூடாது என்று சொல்லி விட்டதாம். இந்நிலையைக் கூறி அவர்கள் இருவரும் கண்ணீர் விட்டுக் கதறுகின்றனர்.

பின்னர் இக்பால் சுவர்க்கத்துக்கு அருகேயுள்ள இடத்தை அடைகிறார். அங்கே நீச்சே என்ற நாஸ்தீகத் தத்துவஞானியைக் காண்கிறார். மௌலானா ரூமி 'கிருக்கன்' நீச்சேயின் இயல்பை விளக்குகிறார். 'ஆண்டவனில்லை' என்று சொன்ன நீச்சே, 'அல்லாவைத்தவிர' என்று அத்துடன் சேர்க்கத் தவறி விட்டானும். அவன் கடவுள் தன்மையை உணர முயன்றானும் ஆனால் முடியவில்லையாம். காரணம் அவன் அறிவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அது பற்றி ஆராய்ந்தது தானும். இதற்குப் பிறகு கவிஞர் இன்னும் சற்று அப்பால் செல்கிறார். அங்கே பஞ்சாபில் தண்டநாயகனுக இருந்த அப்துஸ்ஸமதின் புத்திரி ஷர்புன்னிஸாவைப் பார்க்கிறார். ஷர்புன்னிஸா எந்நேரமும் குர்ஆனும் வாளும்-ஒன்றை ஒன்று காக்கும் இரண்டும்- கையிலேந்திய வனிதையாகவே உலகில் விளங்கினுள். இது கவிஞருக்கு நினைவு வருகிறது.

பின்னர் இக்பால் காஷ்மீரைச் சேர்ந்த செய்யிது அலி ஹம்தானியையும் கனி என்ற சூஃபிகவிஞரையும் சந்திக்கிறார். உடனே கவிஞருக்குக் காஷ்மீர நிலை நினைவுக்கு வருகிறது. அந்நாட்டின் உழவர்களையும், உணவுப் பொருள்களையும், ஆற்றையும், தோட்டத்தையும், ஏன் அந்நாட்டுமக்களையே சர்வதேச சங்கம் மிகமலிவாகவிற்று விட்டதாம். ஆனல் கனி என்ற கவிஞர் சொல்கிறார், இந்திய சுதந்திர எழுச்சியை உண்டாக்கிய தலைவர்களெல்லாம் காஷ்மீரத்தைச் சார்ந்தவர்களே என்று. அவர்கள் விட்டுச் சென்ற உணர்ச்சியைப் புகுத்திப் பாடல்கள் இயற்றி அப் 'பூலோக சொர்க்க' மக்களைத்

துயில் எழுப்ப வேண்டுமென அவர் இக்பாலிடம் கூறு கிறார்.

இங்கே செய்யிது அலி ஹம்தானியிடம் இக்பால் கேட்கும் ஒரு கேள்வியும் அதற்கு அவர் தரும் பதிலும் குறிப்பிடத்தக்கன. துன்பத்தின் இடையே மனிதன் விரைவில் முன்னேற முடியும் என்ற கொள்கையை இக்பால் இங்கு விளக்குகிறார். அவர் செய்யிது அலி ஹம்தானியை நோக்கிக் கேட்கிறார் :

இத்தேவ ரகசியத்தைச் சொல்லுங்கள் :
நம்மிடமிருந்து பணிவை விரும்பும் இறைவன்
ஷைத்தானை ஏன் படைத்தான்?
ஒருபக்கம் நமக்கெதிராகத் தீமையின் சக்திகளை
இறைவன் சிருஷ்டித்திருக்கிறான்,
இன்னொரு பக்கம்
நம்மை நன்மைகள் செய்யும்படி உத்திரவிடுகிறான்.
இது ஏன்?

ஷைத்தானில்லா விட்டால் நாம் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருப்போம். நம்மைப் பணிவுள்ளவர்களாக இருக்கும் படி உத்திரவிடும் இறைவன், நம்மை (இறைவனுக்குப்) பணியவிடாது செய்யும் ஷைத்தானை ஏன் படைக்க வேண்டும் ?— இக்பாலின் இந்தக் கேள்விக்கு ஞானி செய்யிது அலி ஹம்தானி பதில் தருகிறார். தீமையென்பது வெற்றிக்குக் குறுக்கு வழி என்று பொருள் பட அவர் சொல்வதாவது :

தன் அகத்தை முற்றும் அறிபவன்
தீமையானதையும் பயனுள்ளதாக்கி விடுவான்
ஷைத்தானோடு நட்புக் கொள்வது
வாழ்க்கையைச் சுமையுள்ளதாக்கி விடுகிறது
ஆனால் அவனோடு போராடுவதால்

வாழ்க்கை இனிமை பெறுகிறது.
நீ வைஷத்தானுக் கெதிராக நில்!
நீ வாள், வைஷத்தான் வாளைத் தீட்டுகிற கல்.

அக்கல்லில் தீட்டத் தீட்ட வாள் கூர்மை பெறும் என்று ஹம்தானி விளக்கிவைக்கிறார்.

இதன் பின்னர் இக்பால் சமஸ்கிருதக்கவி ராஜ யோகி பர்த்ருஹரியையும், நாதிர் ஷாவையும், அஹ்மத்ஷா அப்தாலியையும், திப்புசுல்தானையும் சந்திக்கிறார். இவர்கள் யாவரும் துருக்கியும் பாரசீகமும் அரேபியாவும் மேல் நாடுகளைப் பின்பற்ற முயல்வதை இகழ்ந்து அது தவறு என்று சொல்கின்றனர். உணவிலும் உடையிலுங் கூடக் கீழ் நாட்டினர் மேல் நாட்டினரைப் பின்பற்று வதில் பயனில்லை என்று சொல்லும் அஹ்மத்ஷா அப்தாலி மேலும் கூறுகிறார்:

மேல்நாட்டுப் பலத்தின் இரகசியம்
அதன் வாத்தியங்களில் இல்லை.
அதன் பெண்மணிகளின்
மாய மினுக்குகளால் வந்தது மன்று,
அவர்கள் முக அழகின் கவர்ச்சியாலோ
கத்தரித்துவிடும் சிகையாலோ அல்ல.
மதமற்று இருப்பதும்,
லத்தீன் லிபியைப் பயன்படுத்தலும்
அதன் பலத்துக்குக் காரணமல்ல. 3634
மேல் நாட்டின் பலம்
அறிவாலும் விஞ்ஞானத்தாலும் உண்டாயிற்று.
அதன் விளக்கு
இந்நெருப்பால்தான் ஏற்றப்பட்டது.
அறிவு நீ அணியும் ஆடையைப் பொறுத்ததன்று.
உன் தலைப்பாகை அறிவுபெற தடங்கலானதல்ல.

எந்தவிதமான உடையுடுத்தி இருந்தாலும் மேல் நாட்டினரைப் போல் மற்றவர்களும் அறிவு

விருத்திசெய்து கொள்ளலாமென்றும் அதைவிடுத்து மேல் நாட்டு வாத்தியங்களையும், மேல் பூச்சுக்களையும், பெண்கள் சிகையைக் கத்தரிப்பதையும், மதப்பற்றற்று இருப்பதையும் பின் பின்றுவதால் மேனாட்டினரைப் போல் பலம் பெற்றுவிட முடியாது என்ற அப்தாலியின் பேச்சு, மேல்நாட்டு மோகத்தில் மூழ்கிக் கிடக்கும் நாடுகளுக்குக் குறிப்பாகத் தன் லிபியைக் கூட லத்தீனாக மாற்றிகொண்டிருக்கும் துருக்கிக்கு ஓர் எச்சரிக்கையாகும். பின்னர் திப்புசுல்தான் காவிரி நதிக்குக் கவிஞர் மூலம் ஒரு செய்தி அனுப்புகிறார். அதில்,

வாழ்க்கை ஊற்றில்
நீயும் நானும் அலைகள்தான்.
ஒவ்வொரு கணமும் இவ்வண்டம்
சுழன்று கொண்டே இருக்கிறது
காரணம் அது புத்துலகம் காணும்
அவாவில் மூழ்கியுள்ளது.
சிருஷ்டிகளின் சாரமெல்லாம்
அசைவில்தான் இருக்கிறது.
வளர்ச்சியுற வேணு மென்ற ஆத்திரமும்
அசைவிலிருந்து உண்டானது தான்,
எங்கு பார்க்கினும்
மறைவாகவோ, வெளிப்படையாகவோ
அசைவு இருந்து கொண்டே இருக்கிறது.
காரவானுர் ஒட்டகையும்
பாலையும் அதன் சுனையும்
நாம் பார்ப்பனவை யாவும்
அசைவின் வருத்தத்தால்
அமைதியற்று காணப்படுகின்றன.

என்று குறிப்பிடுகிறார்.

வாழ்க்கை, வீர மரணம், சுய நலத்தியாகம் ஆகியவை பற்றி மேலும் அச் செய்தியில் திப்பு பேசுகிறார். இந்தியர்களுக்காக விடுக்கும் அச்செய்தியில் 'ஆட்டைப்போல் நூறாண்டு வாழ்வதைவிடப் புலியாக ஒருக்கணம் வாழ்ந்தாலும் போதும்' என்ற போதனையும் அடங்கி இருக்கிறது.

இக்பால் அப்பிரதேசத்தை விட்டுக் கிளம்ப உத்தேசிக்கும் சமயம் ஒரு தெய்வீகக் குரல் எழுகிறது. தனி மனிதன் எப்படி முன்னேறுவது, ஒரு சமுதாயம் எவ்வி விதம் முன்னேறுவது என்ற இரகசியங்களை அவ்வொலியில் கேட்கிறார். இங்கே இக்பாலின் பிரயாணம் முற்றுப் பெறுகிறது.

இறுதியில் இக்பால் தன் மகனை ஜாவிதை நோக்கிப் பேசுகிறார். இங்கே ஜாவீது என்பது இளைஞர் உலகு முழுமையையும் குறிக்கும். ஆகவே அது இன்றைய இளைஞர்களை நோக்கிக் கூறுவது என்று சொல்லலாம். இளைஞர்கள் தங்கள் கருத்துக்களை ஒதுக்கி அறிவையும் அன்பையும் ஒன்று கூட்டிப் புலன்களை ஆத்மீக வழியில் பழக்கி, இறைவனின் வார்த்தையைக் கண்ணியப் படுத்த வேண்டுமாம். இன்றைய லோகாயதப் போக்கில் சிக்கி விடக் கூடாதாம். தற்காலக் கல்வியோ 'ராஜாளியின் குஞ்சுகளையும் வாத்தின் முறைகளைப் பயிலும்படி செய்யக் கூடிய'தாம். ஆகவே அக்குறையை உணர வேண்டுமாம். கெட்ட சகவாசம் நீக்கி மக்களிடத்தே அன்புடையோராக வாழ வேண்டுமாம். அவர் மேலும் சொல்லுகிறார்,

யாரையும் இழிவாகப் பேசாதே!
காரணம்
காபிரும் மூமினும் இறைவனின் சிருஷ்டிகள்தான்.
மிதமாக உண்,
சுருக்கமாகப் பேசு

குறைவாகத் தூங்கு,
'தன்னை' அறிய முயல்!
முல்லாக்கள் நிராகரிப்போரைக் காபிர் என்பர்,
நான் 'தன்னை' அறியாதவன்
பெரிய காபிர் என்பேன்.
உன் செயல்களில் உண்மையுள்ளவனாக இரு!
அரசர்களையும் பிரபுக்களையும் கண்டஞ்சாதே!
ஒருக்காலும் நியாயத்தைக் கைவிடாதே!
வாழ்க்கை என்பது போராட்டமே.
வீடு அதற்கு ஏற்ற இடமல்ல.

எவ்வளவு அற்புதமான வார்த்தைகள்! இச்செய்திகளை இளைஞர்கள் அனுசரித்து நடப்பதானால் இவ்வுலகம் நிச்சயம் மேன்மையுற்றதாகிவிடும். கவிஞர் சொல்லும் சகிப்புத் தன்மையும் பரஸ்பர நல்லெண்ணமும் மக்களிடையே வளருமானால் அத்துடன் ஒரு புது உலகமும் உதிக்கும் என்பது திண்ணம்.

ஜாவீது நாமா முழுவதையும் மதிப்பிடுவது கடினம். அம் மகாகாவியத்தில் என்ன இருக்கிறது என்று காட்ட முயன்ற ஒரு முயற்சியே இது. இக் காவியம் மஸ்னவியாகவே எழுதப் பட்டிருந்தாலும் நடை சந்தர்ப்பத்திற்கேற்ற பாணியில் அமைந்திருக்கிறது. ஆகவே அதைப் படிப்பவர்களுக்குச் சலிப்புத் தட்டுவதில்லை. இடையிடையே மற்ற பாரசீகக் கவிஞர்களின் கவிகளிலுள்ள அடிகளும் நுழைக்கப்பட்டுள்ளன. ஓர் இடத்தில் சமஸ்கிருதக் கவியொன்று மொழி பெயர்த்துச் சேர்க்கப்பட்டுள்ளது. இவை யாவும் இதன் நடையை அதிகக் கம்பீர முள்ளதாக ஆக்குகின்றன. 'ரிதும்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஓசை நயம் அற்புதமாக இருக்கிறது. எனினும் எவ்வித தடங்கலுமின்றி பாட்டுச் செல்கிறது. பெரிய உண்மைகளை இத்தகைய முறையில் இலகுவாக எப்படிச் சொல்ல முடிகிறது என்று படிப்போர் ஆச்

சரிய முறுவர். இதில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒரு லக்ஷியத்தைக் குறிப்பனவாக அமைந்துள்ளன. சந்தக் கட்டுப்பாடுகளுக்கிடையேயும் இவ்விதம் லக்ஷியப் பாத்திரங்களைப் புகுத்தி, அவர்களுடைய பேச்சில் முரண்பாடு இல்லாதபடி காவிய முறையில் அமைக்க வேண்டுமானுல் அதன் சிருஷ்டிக்கர்த்தா ஓர் உயர்ந்த மேதாவியாகத்தான் இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு பாத்திரமும் தன் தன்மைக்கு ஏற்பப் பேசுவதாகக்காட்டுவது அற்புதம். ஷைத்தான் எப்போதும் செயலாற்றலில் ஆத்திரம் காட்டுபவனுகவே இருக்கிறுன். கிச்சனர் தான் ஒரு போர் வீரன் என்ற முறையில் முரட்டுத்தனமாக—வெளிப்படையாகப்—பேசுபவராகக் காட்டப்படுகிறுர். பெண்கவி தாஹிராவின் வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் அவள் லக்ஷியங்கள் துடிக்கின்றன.

இன்னெரு பெரிய விஷயம், கவிஞர் செவ்வாய் கிரஹம் சென்றபோது அங்கே நான்கு மகான்களையும் காணவில்லையென்றும் அவர்களுடைய போதனைகள் பொறிக்கப்பட்ட பலகைகளை மட்டுமே கண்டதாகவும் குறிப்பிடுவதாகும். மேலும் கவிஞர் தாம் காணும் ஒவ்வொருவரையும் மிகுந்த அனுதாபத்தோடேயே வருணிக்கிறுர். அவர்கள் எம்மதத்தவராயினும் மதிப்புடனேயே அவர்களைப்பற்றி பேசுகிறுர். நாட்டுக்கு துரோகம் செய்தவர்களை மட்டும் சற்று கசப்போடு பேசினுலும் அவர்களைப்பற்றிய வருணனையிலும் நமக்கு அனுதாபம் உண்டாகும்படி தான் அதன் போக்கு அமைந்துள்ளது.

ஜாவீது நாமாவின் கருத்தை அறிந்துகொண்டவர்கள் இக்பால் இதை எந்நோக்கோடு எழுதினுர் என்பதை ஒருவாறு உணரலாம். இன்றைய மேல் நாடும் கீழ்

நாடும் எந்தநிலையில் உள்ளன, அவை விமோசன மடைய வேண்டுமானுல் என்ன செய்ய வேண்டும், அன்பும் அறிவும் ஒன்று கூடினுல் உலகம் எப்படி மாறும் என்பதைக் கவிஞர் மீண்டும் மீண்டும் விவரிக்கிருர். தீயவற்றை நல்லவை என்று கொண்டு அநாகரீகத்தை நாகரீகம் என்று மயங்கும் மக்களுக்கு அவர் எச்சரிக்கைவிடுக்கிருர். மேல்நாட்டுப் பெண்டிர்களின் போக்கு நீதியுணர்ச்சியை மடியச் செய்து உலகையே நாசமாக்கி விடும் என்பதை வெகு அருமையாக விளக்குகிருர். கடைசியில் இளைஞர்களுக்கு அவர் சொல்லும் புத்திமதி ஜாதிமதபேதமின்றி உலக இளைஞர்கள் யாவரும் பின்பற்ற கூடியது. இன்றைய நிலையில் அரசியல் கட்சிகளின் பெயரால் இளைஞர்கள் தங்கள் உள்ளத்தில் ஜாதிபேத விஷத்தை ஏற்றிகொண்டு விடுகின்றனர். ஒருவரையொருவர் விரோதிக்கத் தொடங்கி விடுகின்றனர். வருங்கால உலகை நடத்த வேண்டிய அவர்களுக்கு அல்லாமா இக்பாலின் இந்தப் புத்திமதி அருமருந்தாகும். இதன்படி. இளைஞர்கள் நடப்பார்களானுல் புது உலகம் உடனே உதயமாகும். உலகமே சுவர்க்கமாகும்.

3634

முற்றும்

Printed At Rajan Electric Press, Madras
For T. P. No. 93/97. Copies 1200. 5-'47